விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 19 புதன்கிழமை (02.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 074

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்க முடியாது

## விசாரணை நமக்குள்ளேயே!-மக்ஸ்வெல்



(யாழ்ப்பாணம்)

எங்கள் நாட்டை சர்வதேச நீதிபதிகள் விசாரணை செய்வதற்கு அனுமதிக்க முடியாது என திட்டவட்டமாக தெரிவித்துள்ள காணாமல்போனோரினை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம, வெளிநாட்டு கண்காணிப்பாளர்களையும் தொழில்நுட்ப உதவியாளர்களையும் மட்டுமே நாட்டிற்குள் அனுமதிக்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

## காணாமல்போனோரை கண்டறியும் அமைச்சு!

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோரைக் கண்டறியும் அமைச்சு ஒன்று அரசாங்கத்தினால் உருவாக்கப்படவுள்ளதாக காணாமற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் காணாமற்போனவர்கள் தொடர்பில் அவர்களின் உறவினர்கள் சாட்சியமளிக்கும் அமர்வு, பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இதன்போது, ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போது, பரணகம மேற்கண்டவாறு கூறினார். இதன்போது தொடர்ந்து கருத்துரைத்த அவர், எம்மால் பெறப்பட்ட சாட்சியங்களை நான் ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பேன் முடிவில் ஜனாதிபதி அதனை விசாரணைக்காக காணாமல்போனோரினை கண்டறியும் ஆணைக்குழுவிடம் கையளிப்பார்கள்.

அந்த விசாரணையாளர்கள் காணாமல் போனமைக்கான காரணத்தை அல்லது யாரால் கடத்தப்பட்டார்கள் என்பது தொடர்பிலும் ஆராய்வார்கள். அவர்களது விசாரணையின் முடிவில்

23ஆம் பக்கம் பார்க்க

## 9ஆவது நாளாக...
## 5 அரசியல் கைதிகளின் உடல்நிலை பாதிப்பு

(கொழும்பு)

புதிய மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 5 பேரின் உடல்நிலை மிகவும் பாதிப்படைந்த நிலையல் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதிய மகசின் சிறைச்சாலையில்

23ஆம் பக்கம் பார்க்க

## தரம் - 5




# வெலிக்கட 27 கைதிகளின் உயிரிழப்பு நன்கு திட்டமிடப்பட்ட கொலைச் செயல்

## ஊழலுக்கு எதிரான முன்னணி தகவல்

## 'கைதிகளின் பெயர்களை அழைத்து தனித்தனியாக சுட்டுக் கொன்றனர்'

(கொழும்பு)

2012ஆம் ஆண்டு வெலிகட சிறைச்சாலையில் கைதிகளுக்கும், பாதுகாப்பு பிரிவினருக்கும் இடையில் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கி பிரயோகத்தின் போது 27 கைதிகள் உயிரிழந்த சம்பவமானது நன்கு திட்டமிட்ட கொலைச் செயல் என ஊழலுக்கு எதிரான முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றிய முன்னணியின் உறுப்பினர்கள் இந்த தகவலை வெளியிட்டுள்ளனர்.

கைதிகளுக்கும், பாதுகாப்பு பிரிவினருக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தின் பின்னர், விசேட அதிரடி படையினர் சிறைச்

23ஆம் பக்கம் பார்க்க

## மாணவருக்கு எச்.ஐ.வி என வதந்தி
## பிள்ளைகளை பாடசாலை அனுப்ப தயக்கம் காட்டிய பெற்றோர்

(கொழும்பு)

நாட்டில் உள்ள ஒரு பாடசாலை ஒன்றில் படிக்கும் மாணவருக்கு எச் ஐ வி தொற்று உள்ளது எனும் வதந்தியால், அங்கு பிள்ளைகளை அனுப்ப பெற்றோர் தயக்கம் காட்டுவது குறித்து கவலைகள் எழுந்துள்ளன.

குருநாகல் மாவட்டம் குளியாபிட்டியிலுள்ள அந்தப் பாடசாலையிலேயே இப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையில் புதிதாக சேர்க்கப்பட்ட ஆறு வயது சிறுவன், எச்.ஐ.வி தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார் என பரவிய வதந்திகளை

23ஆம் பக்கம் பார்க்க

## ஜனநாயக செயல்முறைகளை இலங்கை வலுப்படுத்த வேண்டும்
-அமெரிக்கா



04ஆம் பக்கம் பார்க்க

## இராணுவம் விடுவித்த மறுநிமிடம் வெள்ளைவான் மூலம் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் முகாம் இராணுவத்தால் பிடிக்கப்பட்ட மாசிலாமணி தியாகராஜா (வயது 37), என்பவரை விடுவித்த மறுநிமிடம் அவர்வெள்ளை வான் மூலம் கடத்தப்பட்டார் என சாட்சியமளித்துள்ள தாயார் இராஜேஸ்வரி, மகன் கடத்தப்பட்ட பின்னர் இராணுவ சீருடையில் எனது மகனை இருமுறை கண்டதாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் யாழ்.மாவட்டத்திற்கான இறுதி அமர்வு நேற்றைய தினம் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அந்த தாய் மேற்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

நாங்கள் வரணியைச் சேர்ந்தவர்கள். எனது மகன் சண்டிலிப்பாயைச் சேர்ந்த பெண்ணொருவரை

24ஆம் பக்கம் பார்க்க

## ஞானசார தேரருக்கு மீண்டும் விசாரணை

(கொழும்பு)

பொது பல சேனா என்ற பௌத்த அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உட்பட 13 பேருக்கு தண்டனை வழங்குமாறு கோரி, சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரிக்க மேல் முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பின் புறநகர்ப் பகுதியான மாலபேயில் அமைந்துள்ள கத்தோலிக்க போதனை நிலைய

23ஆம் பக்கம் பார்க்க

## குடும்பஸ்தர் குத்திக் கொலை எதிரிக்கு 10 ஆண்டு கடூழியச் சிறை

### நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரை சகோதரர்களும் உறவினருமாக வாள்களை கத்தியுடன் சென்று குத்திக் கொலை செய்த வழக்கில் எதிரிக்கு பத்து ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையும் பத்தாயிரம் ரூபாய் தண்டமும் விதித்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்றையதினம் தீர்ப்பளித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

## கொடிகாமத்தில் வதை முகாம்!

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் தற்போது புகையிரத நிலையம் அமைந்துள்ள இடத்தில் 2006, 2007ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் இராணுவ வதை முகாம் ஒன்று காணப்பட்டதாக காணாமற்போன ஒருவரின் தநதையொருவர், காணாமற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி

24ஆம் பக்கம் பார்க்க

## கச்சாய் இராணுவ சுற்றிவளைப்பில் காணாமல்போன 24 நபர்கள்!

### விசாரணையில் வெளியாகியது விபரம்

(யாழ்ப்பாணம்)

கச்சாயில் இராணுவ சுற்றி வளைப்பில் கைது செய்யப்பட்டு காணாமல் போன இருபத்து நான்கு பேரினது பெயர் விபரங்கள் நேற்றைய ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையின்போது வெளிவந்துள்ளது. இவ்வாறு இராணுவத்தால் பிடித்து செல்லப்பட்ட இருபத்து நான்கு பேரும் இதுவரை எங்கு என்று தெரியவில்லை எனவும் அவர்களால் ஆணைக்குழுவிடம் கூறப்பட்டுள்ளது. இந்த இருபத்து நான்கு

24ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் மாலை வ்தி ரோந்து பணியில் ஈடுபட்ட யாழ்ப் பாண பொலிஸார் அப்பகுதியில் சந் தேகத்துக்கு இடமாக நடமாடிய இளைஞனை சோதனை செய்தபோது குறித்த இளைஞன் தனது உடைமையில் வைத்திருந்த கஞ்சாவினை மீட்டனர்.

அத்துடன் குறித்த இளைஞனை பொலி ஸார் உடனடியாக கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத் துச் சென்றதாக நேரில கண்டவர்கள் குறிப் பிட்டனர்.

இதன்போது பொம மைவெளி அராலி வீதியை சேர்ந்த 39 வயதுடைய நபர் ஒரு வரே 2 கிராம் 70 மி. கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட வராவார்.

மேற்படி நபர் கடந்த சில மாதங்களிற்கு முன்னரும் கஞ்சா வினை உடமையாக வைத்திருந்து தண் டனை அனுபவித் ததாக குறிப்பிடப்படு கிறது. (செ-4)


## If you want to be a qualified PHARMACIST ?

**மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை**, கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத் தின் இலங்கை மருத்துவக்கல்லூரி சபையால் (CMCC) வருடம் தோறும் நடாத்தப்பட்டுவருகிறது. இவ வாண்டுக்கான பரீட்சை 12.03.2016 - கொழும்பில் நடைபெறவுள்ளது. அடுத்த பரீட்சை மாசி/2017 நடை பெறும். 2018ஆம் ஆண்டுக்குரிய பரீட்சைக்கு நீங்கள் தோற்ற விரும்பினால், இவ்வாண்டு பங்குனி மாதத்தற்கு முன்னர் சிறிலங்கா மருத்துவ சபையில் மருந்தாள பயிலுனராக பதிந்து, இருவருடங் களின் பின்னர் 2018இல் பரீட்சை எழுதலாம். 2019 இல் மருந்தாளராக தொழில் புரியலாம். மருந்தாள பயிலுனராக• பதிவு செய்வதற்குரிய விண்ணப்பப்படிவங்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**வயது எல்லையில்லை.** குறைந்த பட்ச கல்வித்தகைமைகள் G.C.E O/L ஆங்கிலப்பாடத்தில் சாதாரண சித்தி, G.C.E A/L ஒரே தடவையில் இரசாயன பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருக்கவேண்டும்.

2018 இல் பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்குரிய புதிய வகுப்புக்கள் 12.03.2016 சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. புதிதாக பயில விரும்புபவர்கள் 11.03.2016 வெள்ளிக்கிழமை காலை 9 - 12 யாழ்ப்பாணக்கல்லூரியில் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

பயிற்சிக்கான மாதாந்தக்கட்டணம் ரூபா 1500/=. யாழ்ப்பாணக் கல்லூரி அனுமதிக்கட்டணம் ரூபா 500/=. மேலதிக தொடர்புகளுக்கு: மருந்தாளர் பரீட்சை இணைப்பாளர், யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு), கொமர்சல் வங்கிக்கு அருகாமையில் 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் பாணம். T.P. 0776256292. (3746)


# உயர் நீதிமன்றில் யோஷித மனு தாக்கல்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரான யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக் கல் செய்துள்ளனர்.


தம்மைக் கைதுசெய்தமை மற்றும் விளக்கமறியலில் வைத் துள்ளமை போன்றவற்றுக்கு எதிராகவே அவர்கள் இந்த நட வடிக்கையை மேற்கொண்டுள்ள தாக தெரியவந்துள்ளது.

மேலும் இந்த மனுவில் பிரதி வாதிகளாக பொலிஸ் மா அதிபர் மற்றும் பொலிஸ் நிதி குற்ற விசா ரணைப் பிரிவு அதிகாரிகளும் பெயரிடப்பட்டுள்ளனர்.

சி.எஸ்.என் தொலைக்காட்சி யில் இடம்பெற்றதாக கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் அண் மையில் பொலிஸ் நிதி குற்ற வசா ரணைப் பிரிவினரால் யோஷித உள்ளிட்ட நால்வர் கைதுசெய் யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே.

இது அடிப்படையற்ற குற்றச் சாட்டு என்பதால், இந்தக் குற்றச் சாட்டுக்களில் இருந்து தம்மை விடுவிக்குமாறும், தமது அடிப் படை உரிமைகள் மீறப்பட்டுள் ளதாகவும் உத்தரவிட வேண் டும் என, அவர்கள் குறித்த மனுவில சுட்டிக்காட்டியுள்ளனர். (செ-12)

# குடிநீர் விநியோக குழாய் வெடிப்பு; நீர் கசிவால் பயணிப்போர் சிரமம்



(கோப்பாய்)

யாழ் பலாலி வீதி கந்தர்மடச் சந்திக்கு அண்மையாக நிலத்தின் கீழாக செல்லும் குடிநீர் விநி யோகக் குழாயில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக நீர் வீதியில் கசிந்து வெளியேறுவதால் வீதியால் பய ணிப்போர் சிரமத்தை எதிர்கொள் கின்றனர்.

இச் சம்பவம் குறித்த மேலும் தெரியவருவதாவது,

குறித்த நீர் விநியோக குழா யில் வெடிப்பு ஏற்பட்டு ஒரு வார காலம் கடந்துள்ள நிலையில் ஏராளமான நீர் விரயமாவதுடன் காப்பெற் வீதிக்கும் பாதிப்பு ஏற் பட்டுள்ளது.


அவ் வீதியில் குழி ஏற்பட்டு அதற்குள் நீர் நிரம்பியுள்ள நிலையில் மோட்டார் சைக்கிள் மற் றும் துவிச்சக்கர வண்டியில் பய ணிப்பவர்கள் இடறி விழும் அபாய நிலையும் காணப்படுகின்றது.

இப்பிரச்சினை குறித்து உரிய தரப்பினருக்கு பல தடவைகள் தெரியப்படுத்தியும் உரிய நடை வடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவித்த அப்பகுதி மக்கள்,

கடந்த 2014ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந் திக்கு அண்மையாக பாரிய அள விலான வெடிப்பு ஏற்பட்டு போக்கு வரத்து பாதிக்கப்பட்டிருந்து.

அச்சம்பவம் போன்று பாரிய அளவில் குழாயில் வெடிப்பு ஏற் படும் முன்னர் உரிய தரப்பினர் கவனமெடுக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (செ-87)

# ஆளுநர் நிதிய நிதியுதவி வழங்கல்



(யாழ்ப்பாணம்)

மருத்துவ தேவைகளுக்காக ஆளுநர் நிதிய நிதியுதவி வழங் கும் வைபவம் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே மற் றும் முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் தலைமையில் நேற் றையதினம் யாழ்ப்பாணத்தி லுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மருத்துவ தேவையுடைய 76 பயனாளி களுக்கு நிதியுதவி வழங்கப்பட் டது.

இதில் வட மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலா ளர் மற்றும் மாகாண அமைச் சின் செயலாளர்கள், மாவட்ட அரச அதிபர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (செ-9)


## எழுத்தாளர்களுக்கு!

தங்களது அறிவுத்திறனாலும், கற்பனா சக்தியினாலும் உருவான
**கவிதைகள், சிறுகதைகள், பாடல்கள், கீர்த்தனைகள், கட்டுரைகள்**
ஆகியவற்றைத் தொகுத்து மலர் வடிவாக
அச்சுப்பதித்து வெளியிட



தங்கள் ஆக்கங்களால் உருவாகும் மலர்கள் ஒவ்வொன்றும் காலத்திற்கும் நிலைத்திருந்து, ஒவ்வொரு சந்ததியினரும் பயன்பெறக்கூடிய ஒரு அரிய பொக்கிஷமாகும். இதனை

◆ உயர்ந்த தரத்தில்... ◆ குறைந்த செலவில்... ◆ விசேட விலைக்கழிவில்...
அச்சுப்பதித்திட...

## ஓர் அரிய சந்தர்ப்பம்

**01-03-2016** தொடக்கம் **01-04-2017** வரை




எழுத்தாளர்களே!
முகவர்கள் எவரும் இன்றி
நேரடியாக எம்மிடம் வாருங்கள்
இல்லை!
**உங்கள் கனவு நனவாகும்.**




தங்களது மலரிற்குரிய சர்வதேச நியம நூல் இலக்கம் இலவசமாகப் பெற்றுத்தரப்படும்

# கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

இல.681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
✆ +94 21 222 2717/ 8
✆ +94 21 222 2737

(C-3871)

# உறவுகளை மீட்டுத் தாருங்கள்


யாழில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான, நான்காம் நாள் விசாரணைகள் நேற்றைய தினம் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன் போது பத்து வருடங்களுக்கு முன்னர் காணாமற் போன உறவுகளுக்கு பதிலாக நட்ட ஈட்டினை பெறுமாறு ஆணைக்குழுவின் சில விசார்ணையாளர்கள் கோரிய போதிலும், அவற்றை மறுத்து கடத்தப்பட்ட தமது உறவுகளை விடுதலை செய்யுமாறே பெற்றோர்கள் மன்றாட்டமாக கோரியிருந்தனர். (படங்கள்- உ.சாளின்)

## முகப்புத்தகப் பயன்பாடு இலங்கையில் உயர்வு

இலங்கையில் சமூக வலையமைப்பு பயன்பாடு அதிகரித்துள்ளதாகவும் அதிலும் முகப்புத்தகப் பயன்பாடு துரித கதியில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பீட பீடாதிபதி கலாநிதி லோசந்தக்க ரணதுங்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அண்மைய நாட்களில் முகப்புத்தகப் பயன்பாடு 92.63 வீதமாக உயர்வடைந்துள்ளது.

கடந்த ஆண்டில் இலங்கையின் சனத்தொகை 20.36 மில்லியனாக உயர்வடைந்துள்ளது.

இணையப் பயன்பாட்டாளர்களின் எண்ண்ணிக்கை 4.79 மில்லியன் எனவும், சமூக வலைத்தளப் பயன்பாட்டின் எண்ணிக்கை 2.80 மில்லியன் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் முகப்புத்தகப் பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கையே அதிகளவில் காணப்படுகின்றது என தெரிவித்துள்ளார். (இ)

## பாராளுமன்றில் இடம்பெற்ற பாரியளவிலான மோசடிகள்; நிதிமோசடி பிரிவு விசாரணை

(கொழும்பு)

**இலங்கை பாராளுமன்றில் இடம்பெற்றுள்ள பாரியளவிலான மோசடிகள் தொடர்பில் நிதி மோசடிகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**

பெறுமதி மதிப்பீடு செய்ய முடியாத அளவிற்கு ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நூறு கோடிக்கு மேல் பெறுமதியான கைவிரல் அடையாளங்களை பதிவு செய்யும் இயந்திரத்தை கொள்வனவு செய்து சொற்ப காலத்தில் பயன்பாட்டிலிருந்து நீக்கியமை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

நாடாளுமன்ற ஊழியர்களின் வரவு பதிவு மற்றும் ஏனைய விபரங்களை இந்த இயந்திரம் ஊடாக பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது என தெரிவிக்கப்படுகிறது.

பழுதடைந்த இந்த இயந்திரத்தை சீர்செய்ய எந்தவிதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், நாடாளுமன்ற பணியாளர்களுக்கான வெளிநாட்டு பயண புலமைப்பரிசில்கள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் இவ்வாறு பாரியளவில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த ஊழல் மோசடிகள் தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ)

## அமைச்சர் மலிக் சமரவிக்ரம சீனா புறப்பட்டுச் சென்றார்

அபிவிருத்தி வியூகம் மற்றும் சர்வதேச வர்த்தகத் துறை அமைச்சர் மலிக் சமரவிக்ரம சீனா புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான விமானத்தில் நேற்று முன்தினம் பீஜிங் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி உடன்படிக்கையை புதுப்பிக்கும் நோக்கில் அமைச்சர் மலிக் சமரவிக்ரம சீனா சென்றுள்ளார்.

சீன அரசாங்கத்தின் அனுசரணையில் கடந்த அரசாங்கம் ஆரம்பித்த கொழும்பு துறைமுக நகரத்திட்டம் தொடர்பாக எழுந்த குற்றச்சாட்டுக்கள் காரணமாக தற்போதைய அரசாங்கம் திட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

எவ்வாறாயினும் சம்பந்தப்பட்ட திட்டத்தின் உடன்படிக்கையில் திருத்தங்களை செய்து அதனை மீண்டும் செயற்படுத்த தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அமைச்சர் மலிக் சமரவிக்ரமவுடன் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவும் சீனா சென்றுள்ளார். (இ)

## ஊடகவியலாளர்களை பயிற்றுவிக்கும் நிறுவனமொன்று ஆரம்பிக்கப்படும்

### கயந்த கருணாதிலக

ஊடகவியலாளர்களை பயிற்றுவிக்கும் நிறுவனமொன்று ஆரம்பிக்கப்படும் என ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சீன அரசாங்கத்துடன் இணைந்து இந்த ஊடகப் பயிற்சி நிறுவனம் ஆரம்பிக்கப்படவுள்ளது. சீனாவிற்கு விஜயம் செய்திருந்த போது இந்த நிறுவனத்தை அமைப்பதற்கான உதவிகளை வழங்க இணக்கம் காணப்பட்டது.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் அறிவிக்கப்பட்டது.

ஊடகவியலாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் நிறுவனமொன்றை ஆரம்பித்து பயிற்சி வழங்குவது மிகவும் அவசியமானது.

பயிற்சி நிறுவனம் அமைப்பது குறித்து அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும் என அமைச்சர் கயந்த கருணாதிலக மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## மகிந்த அரசு பெற்ற 1.46 ரில்லியன் ரூபா கடன்கள்

மகிந்த அரசாங்கத்தினால் பெறப்பட்ட 1.46 ரில்லியன் ரூபா கடன்கள் தற்போது கண்டறியப்பட்டுள்ளதாக, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தகவல் வெளியிட்ட அவர்,

முன்னைய அரசாங்கத்தினால், பெற்றுக்கொள்ளப்பட்ட மேலும் 1.46 ரில்லியன் ரூபா கடன்கள் நிதியமைச்சினால் கண்டறியப்பட்டுள்ளன.

இதைவிட மேலும், 5.4 பில்லியன் ரூபா சமுர்த்தி அமைச்சினால் செலுத்தப்பட வேண்டிய கடனாக இருப்பதும், அதுபற்றிய கணக்குகள் ஏதும் இல்லை என்பதும் தெரிய வந்துள்ளது.

இந்தக் கடன்களில் 60 வீதம் வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்டவையாகும். பெறப்பட்ட கடன் வட்டியுடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டியுள்ளது.

அரசாங்கத்துடன் கடன்கள் தொடர்பான நெருக்கமான தொடர்பை வைத்திருந்த அனைத்துலக நாணய நிதியத்துக்கும் இது பற்றித் தெரியவில்லை.

இது தொடர்பாக அனைத்துலக நாணய நிதியத்துக்கு அறிவிக்கப்பட்டு, விசாரணைகளை மேற்கொள்ள தடயவியல் குழுவொன்றை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. அரசாங்கம் என்ற ரீதியில் இன்னொரு நாட்டுடன் செய்து கொண்ட உடன்பாடுகளை முறித்துக்கொள்ள முடியாது.

இவ்வாறான சூழ்நிலையில் கடந்த அரசாங்கத்தின் கடன்கள் எனக் கூறி அவற்றை செலுத்தாமல் இருக்கவும் முடியாது.


எனவேமக்களுக்குசுமையை ஏற்படுத்தாது எவ்வாறு இவற்றை ஈடுசெய்வது என்பதை அமைச்சரவையிலேயே முடிவு செய்ய வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தில் பல திட்டங்கள் இறுதி நேரத்தில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதியைப் பெற்று உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாமல் செலவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றுக்கு முன்னாள் நிதியமைச்சர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் நிதியமைச்சின் முன்னாள் செயலர் பீ.பி.ஜயசுந்தர ஆகியோரே பொறுப்புக்கூறவேண்டும்.

கடந்த அரசாங்கத்தின் இந்த மோசடிகளை நாடாளுமன்றத்திலும், அனைத்துலகத்துக்கு வெளிப்படுத்த வேண்டும்.

கண்டுபிடிக்கப்பட்ட செலவினங்கள் குறித்த விரிவான தகவல்களை விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)




# ஜனநாயக செயல் முறைகளை...

ஜனநாயகம், நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, நல்லிணக்கம் மற்றும் நாடாளுமன்ற செயல்முறைகளை வலுப்படுத்துவது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

வாஷிங்டனில் கடந்த மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் இடையிலான முதலாவது கூட்டு கலந்துரையாடலின் போது அமெரிக்கா இதனை வலியுறுத்தியுள்ளது.

இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான இந்தக் கூட்டுக் கலந்துரையாடல் தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமும், இலங்கை வெளிவிவகார அமைச்சும் இணைந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்டிருந்த கூட்டறிக்கையிலேயே இதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் இந்த கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் இடையிலான முதலாவது கூட்டு கலந்துரையாடலில் பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள், பொருளாதார, அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு, அரசாட்சி, மக்களிடையிலான உறவுகள் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

ஜனநாயகம், நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, நல்லிணக்கம் மற்றும் நாடாளுமன்ற செயல்முறைகளை வலுப்படுத்தும் பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கு உள்ளது என்று இந்தக் கலந்துரையாடலின் போது இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளிடம் வலியுறுத்தப்பட்டது.

19ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றியமை, ஐ.நா மனித வுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இணங்கியமை உள்ளிட்ட சில விடயங்களில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அமெரிக்கா வரவேற்றது.

ஜெனிவா தீர்மானத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ள பொறுப்பை நிறைவேற்றுவதற்கு இலங்கைக்கு முழுமையான ஆதரவை அமெரிக்கா வழங்கும்.

புதிய அரசியலமைப்பை உருவாக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலாக சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ற வகையில் பொருத்தமான சட்டம் ஒன்றைக் கொண்டுவர இலங்கை அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை அமெரிக்கா வரவேற்கிறது.

படையினர் வசமுள்ள தனியார் காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க இலங்கை அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை பாராட்டிய அமெரிக்கா, எஞ்சியுள்ள காணிகளையும் உரிமையாளர்களிடம் விரைவாக ஒப்படைக்க வலியுறுத்தியுள்ளது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கடற்கொள்ளை எதிர்ப்பு, மனிதாபிமான உதவிகளை வழங்கல், அனர்த்த மீட்பு மற்றும் பிராந்தியத்தில் கப்பல் பயண வழிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் போன்றவற்றுக்காக இரு நாடுகளும் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்ள திட்டமிட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற போருக்குப் பின்னரான தேவைகளை ஈடுசெய்யும் வகையில் இலங்கை மேற்கொள்ளும் படைத்துறை மறுச்சீரமைப்புக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கும் என்று இந்தக் கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டுக் கலந்துரையாடலில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அடிநிலைச் செயலாளர் தோமஸ் சானொன் தலைமையிலான அமெரிக்க அதிகாரிகளும், இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான இலங்கை அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலர்களான நிஷா தேசாய் பிஸ்வால், ரொம் மாலினோவ்ஸ்கி, இலங்கைக்கான தூதுவர் அதுல் கெசாப் மற்றும் இலங்கை பாதுகாப்புச செயலாளர் கருணாசேன ஹெற்றியாராச்சி உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

அதேவேளை, இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான இரண்டாவது கூட்டு கலந்துரையாடல் அடுத்த ஆண்டு கொழும்பில் நடத்தப்படும் என்றும் இருதரப்பினருக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டுள்ளது. (செ-12)

## இருபது-20 ஆசியக் கிண்ண கிரிக்கெட்

# இலங்கையை பந்தாடியது இந்தியா

ஆசியக்கிண்ண இருபது-20 தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கையை வீழ்த்தி இந்தியா வெற்றி பெற்றது.

ஆசியக் கோப்பை 20 ஓவர் கிரிகெட் தொடர் வங்காளதேஷத்தில் நடைபெற்று வருகிறது. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காள தேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய 5 நாடுகள் பங்கேற்று விளையாடி வருகின்றன.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கையும் இந்தியாவும் மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித்தலைவர் தோனி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தார். இதையடுத்து இலங்கை அணியின் துவக்க வீரர்களாக சந்திமலும், டில்ஷானும் களமிறங்கினார்கள்.

சந்திமலை 4 ஓட்டங்கள் எடுத்த நிலையில் நெஹ்ரா பந்துவீச்சில் வெளியேற்றினார். 18 ஓட்டங்கள் எடுத்திருந்த டில்ஷன், பாண்டியாவிடம் விக்கெட்டை பறிகொடுத்தார். பின்னர் வந்த வீரர்களும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

அதிகபட்சமாக கபுகெதர 30 ஓட்டங்கள் குவித்தார். இறுதி கட்டத்தில் பெரேரா அதிரடியாக ஆடி 6 பந்தில் 17 ஓட்டங்களை எடுத்தார்.

இதையடுத்து 20 ஓவர் முடிவில் அந்த அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 138 ஓட்டங்கள் எடுத்தது.

இந்தியா தரப்பில் பும்ரா, பாண்டியா மற்றும் அஸ்வின் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள்.

பின்னர் 139 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. தவான் ஒரு ஓட்டங்களிலும் ரோகித சர்மா 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

எனினும் பின்னர் இணைந்த ஹோலி மற்றும் ரெய்னா பொறுப்புடன் விளையாடினர்.

25 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் சனாகா பந்துவீச்சில் ரெய்னா ஆட்டமிழந்தார்.


அப்போது அணியின் எண்ணிக்கை 70 ஆக இருந்தது. பின்னர் யுவராஜ் களமிறங்கினார். இந்த ஜோடி அணியை வெற்றி பாதையை நோக்கி அழைத்துச் சென்றது.

சிறப்பாக ஆடிய யுவராஜ் 3 பவுண்டரி 3 சிக்ஸர் உட்பட 35 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

மறுபக்கம் சிறப்பாக ஆடிய ஹோலி அரை சதமடித்தார். இறுதியில் 19.2 ஓவர்களில் 142 ஓட்டங்கள் எடுத்து இந்தியா வெற்றி பெற்றது.

ஹோலி 56 ஓட்டங்களுடனும் தோனி 7 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக ஹோலி தெரிவானார். (க)

ALREADY ISSUED 24000 CERTIFICATES
தெல்லிப்பளையில்
MICOM THE GREAT
SINCE 1997 IN COLOMBO
School of Law & English
- ACCA, CIMA, AAT, CMA, IBSL
- Law Subjects
- LLB Law college subjects
- Law Entrance Exams
(English Medium and Tamil Medium) Classes also start in Colombo very soon.
Course Fees - 17000.00



English Classes
IELTS - course Fees - 15000.00, Spoken English with Grammer Diploma in English- English A/L, O/L - course Fees Rs -1500.00 monthly
English Literature A/L, O/L - Course Fees Rs : 2500.00 Monthly
Conducted by
Mohanarajah Joganantham
(M.Raja Joganantham)
L.L.B.(Col.Uni)
Dip in Journalism
Reading for LL.M
Proprietor of MICOM
An old Student of Honourable Prof. Dr.G.L.Peries,
Prof.Madam Savithiri Kunasekere
Prof.Dr.S.Sornaraja
Prof.Madam. N.Chandrakasan
Regiee michel - the chief Editor of daily mirror
- Tellipalai Classes Have Been Going on. Tellipalai
- Micom The Great Infornt of old AGAS office



Contacting Numbers:
077 284 2556,076 707 7558, 077 395 0215
Contactable person Mr.Joganantham
Lectured on Law at, University of Ballarat (Australia), University of ICFAI (Hydrabad), OXONIA, IAS, Ladies College,London Business School, MICOM International
(C-3873)

## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## CHUNDIKULI GIRLS COLLEGE, JAFFNA
## ADMISSION - 2017 FOR GRADE 1, GRADE 4 GRADE 6 & GRADE 10

### தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான அனுமதி 2017

1. அ. விண்ணப்பப் படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 02.03.2016 முதல் 21.03.2016 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
   இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதிநாள் 25.03.2016 வெள்ளிக்கிழமை. அத்திகதிக்கு பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
2. தரம் 01 க்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photo copy) இணைக்கப்பட வேண்டும்.
3. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
4. ஒரு படிவத்துக்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபாய் 1000.00
5. வயதெல்லைகள்
   அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2011க்கும் 31.01.2012க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2008இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
   இ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2006இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஈ. தரம் 10 விண்ணப்பதாரி 01.02.2002இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

06. தரம் 12 (A/L 2019 Batch) விண்ணப்பதாரி 01.02.2000இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

07. தரம் 04 தரம் 06 தரம் 10க்கான பிரவேசப் பரீட்சை 15.10.2016 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்.

**குறிப்பு:**

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.

02. தரம் 12க்கும் (A/L 2019 Batch) ஆங்கில மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) தமிழ் மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை, தொழில்நுட்பவியல்) London A/L 2017/2018க்கும் விண்ணப்பப்படிவங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப் பரீட்சை 02.01.2017 திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 09.01.2017 ஆரம்பமாகும். ஆண்டு 01இல் மும்மொழிக் கற்கைநெறி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

03. சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L தமிழ்/ஆங்கில மொழி மூலம் **2018 Batch**) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

*அதிபர்கள்*

(C-3874)

# விவசாயியான ஜனாதிபதி ஒருபோதும் விவசாயிகளுக்கு தீங்கிழைக்கமாட்டார்

## துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு விவசாயி. ஆகையால் அவர் இந்த நாட்டு விவசாயிகளுக்கு தீங்கு விளைவிக்கும் எந்த முடிவுகளையும் எடுக்கமாட்டார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வரவுசெலவுத் திட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் உரமானியத்திற்கு பதிலாக பணம் கொடுக்கும் செயற்பாட்டிற்கு விவசாயிகள் நாடுபூராகவும் பல போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியிருந்தனர்.

இந்நிலையில் இது தொடர்பாக விளக்கம் அளிக்கும் வகையில், அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் விவசாயிகளுக்கு வழங்கும் உரமானியத்திற்கு பதிலாக பணம் கொடுத்ததற்கு பல நியாயமரான காரணங்கள் உள்ளன.

ஆனால் விவசாயிகள் இதை தெளிவாக விளங்கிக் கொள்ளாமல் போராட்டங்களை நடத்துகின்றனர். அவரவர் மண்வளத்திற்கு ஏற்ற உரங்களை அவர்களே தெரிந்து கொள்வனவு செய்வதற்காகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த அரசாங்கம் அனைத்து விவசாயிகளுக்கும் ஒரே மாதிரியான உரமானியத்தை வழங்கியது. அதன் விளைவாக கடந்த காலங்கள் விவசாயிகள் குறைந்த அளவு விளைச்சல்களையே பெற்றனர். மேலும் பல நோய்கள் ஏற்பட்டன. இவற்றை கவனத்திற்கொண்டே இந்த திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது.

இதனால் விவ்சாயிகளே இலாபமடைவார்கள் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இதற்கு ஆதரவும் வழங்க வேண்டும். அத்துடன் விவசாயிகள் அனைவரும் ஒரு விடயத்தை நன்றாக விளங்கிக் கொள்ளவேண்டும்.

தற்போதைய ஜனாதிபதி விவசாயிகளுக்கு ஒருபோதும் தீங்கு விளைவிக்க மாட்டார். காரணம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு விவசாயி ஆவார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பேராசிரியர் துரைராஜா நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று புதன்கிழமை பி.ப 3 மணிக்கு பேராசிரியர் துரைராஜா நினைவுப் பேருரை நிகழ்வு கள் கல்லூரி பிரதான மண்டபத்தில் பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடா திபதி பேராசிரியர் சி.ஸ்ரீசற்குண ராஜா ***The Beauty and Magic of Numbers*** என்னும்தலைப்பில் பேருரை நிகழ்த்தவுள்ளார். (இ


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 61 செவ் 12 இல்
உயரம்: 5’9"
தகைமை/தொழில்:A/Lகனடா PR
தொ.இ: B/5586

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 34
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/5587

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 44
தகைமை/தொழில்:A/L முகாமையாளர் டுபாய்
தொ.இ: B/5588

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 39சூரிசெவ் 10 இல்
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: B/5589

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 79 செவ் 7 இல்
உயரம்: 5’
தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்
தொ.இ: G/4562

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 28
உயரம்: 5’3"
தகைமை/தொழில்:BBM/தனியார் தொழில்
தொ.இ: G/4564

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 24 சூரிசெவ் 5 இல்
தகைமை/தொழில்:B.ENG/தனியார் தொழில் சிங்கப்பூர்
தொ.இ: G/4565

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 25
உயரம்: 5’2"
தகைமை/தொழில்:பட்டதாரி/ஆசிரியர்
தொ.இ: G/4570

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



உ
சிவமயம்

தொண்டர் நாள்தொறும் துதிசெயவருள்செய் கேதீச்சரமதுதானே

**திருக்கேதீச்சர ஆலயத்தில்**
**மகா சிவராத்திரி விழா**



மன்மத ஆண்டு மாசித் திங்கள் 24ம் நாள்
(07-03-2016)
திருக்குடத் திருமுழுக்கு (அபிடேகம்) பூசை,
அர்ச்சனை நிகழ்வுகளும், சிறப்பு நிகழ்ச்சிகளும்
அலங்கார மண்டபத்தில் இடம்பெறும்.

மகாலிங்கப் பெருமானுக்கு வழமைபோல் பாலாவித் தீர்த்தத் திருமுழுக்கு செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

- நான்கு யாமங்களிலும் திருமுழுக்கும் பூசைகளும் இடம்பெறும்.
- நள்ளிரவு 12.15க்கு இலிங்கோற்பவ பூசை இடம்பெறும்.

*சிவனடியார்கள் திரண்டு வாரீர் எம் பெருமானின் அருளைப் பெறுக.*

(சி-3743)

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை.


DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD. COLOMBO 13. TEL: 011 2330195

# ஈழத்தமிழர்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வரும் ஐ.நா. இன்னர் சிட்டி பிரஸ் ஊடகவியலாளரை மீண்டும் சேவையில் இணைக்க வேண்டும்

## யாழில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

**ஐ.நா.அமைப்பில் உள்ள இன்னர் சிட்டி பிரஸ் எனும் ஊடகத்தின் சர்வதேச ஊடகவியலாளர் மத்தியூ ருசெல் லீயை ஐ.நா.ஊடக அலுவலகத்திலிருந்து வெளியேற்றியமையை கண்டித்து யாழ்ப்பாணத்தில் உள்ள ஐ.நா.அலுவலகத்தின் முன் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.**





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தலைமையில், காணாமல் போனோரின் உறவினர்கள் ஒன்றிணைந்து நல்லூர் கந்தசுவாமி ஆலயம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டத்தை நேற்றுக் காலை முன்னெடுத்திருந்தனர். முன்னதாக நல்லூரில் கவனயீர்ப்பினை மேற்கொண்டு, நல்லூரிலிருந்து பேரணியாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், கோவில் வீதியில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகம் வரை சென்று ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூனிடம் கையளிக்கும் வகையிலான மகஜர் ஒன்றை சமர்ப்பிக்க முற்பட்டுள்ளனர்.







அப்போது யாழில் உள்ள அலுவலகம் இயங்கவில்லை எனவும், மகஜர் கையளிப்பதாயின் கொழும்பு அலுவலகத்திற்கு சென்றே கையளிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், இயங்காத நிலையில் அலுவலகம் ஒன்று இங்கு தேவையில்லை என கோஷமிட்டதுடன், மகஜரை ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் கற்களை எறிந்து தாக்குதல் நடத்தப் போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஆனால் தொடர்ந்து மகஜரை கையளிக்க போராடிய போதும் அதிகாரிகள் அதனை ஏற்றுக் கொள்ள முன்வராத நிலையில், மகஜரை தொலைநகல் மூலம் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப் போவதாக தெரிவித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றுள்ளனர். இப்போராட்டத்தில் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், காணாமற் போனோர் மற்றும் அரசியல் கைதிகளின் உறவுகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கையில் நடத்தப்பட்ட இனப்படுகொலையில் அமெரிக்காவிற்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் தொடர்பிருப்பதை ஆபத்தான சூழல் நிலைகளைக் கடந்து மக்களுக்கு உண்மையைக் கூறியவர்களில் மத்தியூ லீ மிகவும் முக்கியமானவராவார். மேலும், இன்று தமிழ்த் தலைமைகளுக்கும், தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் மத்தியில் நேர்மையாக உண்மையைக் கூறி வந்த மத்தியூ லீவிற்கு பத்து வருடங்களுக்கு மேலாக ஐ.நாவில் அலுவலகம் வழங்கப்பட்டிருந்தது. உள்ளகத் தகவல்களைச் சேகரிப்பதற்கான அடையாள அட்டையும் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி ஐ.நாவிலுள்ள அவரது அலுவலகம் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் முற்றுகை யிடப்பட்டு அவரது ஆவணங்கள் அனைத்தும் கையகப்படுத்தப்பட்ட துடன், மத்தியூ செல்லீயின் அடையாள அட்டையைப் பறிமுதல் செய்த பாதுகாப்பு. அதிகாரிகள் அவரை அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பாக வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கையில்,

ஐ.நாவில் ஈழத் தமிழர்களுக்காக நீதி வேண்டி குரல் கொடுத்த உன்னதமான ஊடகவியலாளர் இவர். இவரை ஐ.நா.அலுவலகத்தில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டதை நாம் கடுமையாகக் கண்டிக்கிறோம். இவரை மறுபடியும் ஐ.நா.ஊடகப் பிரிவில் உள்வாங்க வேண்டும்.

எமது பிரச்சினையால் உலகத்தில் மொத்த வியாபாரிகளாக செயற்பட்ட சில நாடுகளுடன் சில்லறை வியாபாரிகளாக செயற்பட்ட எமது தமிழ் அரசியல் தலைமைகள் சிலரும் சேர்ந்து எமது இனத்தில் அநீதியை மூடிமறைத்த வேளையில் வேறு நாட்டவராக இருந்தும் எமது பிரச்சினைகளுக்காக தொடர்ந்தும் குரல் கொடுத்தார்.

இன அழிப்பை அமெரிக்கா உட்பட ஐ.நா.சேர்ந்து மறைக்க முற்பட்ட வேளையில் அதை உலகிற்கு வெளிக்கொண்டு வந்த அவரை மனித உரிமைகள் பற்றி பேசும் ஐக்கிய நாடுகள் சபை வெளியேற்றியிருப்பது கண்டிக்கத் தக்கது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4-9)

## மணிவிழா

யாழ்.அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலய அதிபர் சீவகாருணியம் சிவநேசனின் மணிவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உப அதிபர் திருமதி லெஜினா குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையினை அருளிய நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு கிரியாயத்துவ நிதி பிரம்மஸ்ரீ சு.முரளீதரக்குருக்கள் வழங்கவுள்ளார். வரவேற்புரையினை நலன்புரிக்கழக ஆசிரியர் சு.பன்னீர்ச்செல்வன் நிகழ்த்தவுள்ளதுடன் தலைமையுரையினை பதில் அதிபர் திருமதி லெஜினா குகதாசன் நிகழ்த்தவுள்ளார்.

வாழ்த்துரைகளை யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.வரதராஜமூர்த்தி ,எஸ்.மாணிக்கராசா மற்றும் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)

## கட்சி பேதம் பார்க்காமல் ஆதரவு வழங்க முன்வாருங்கள்

### அரசியல் கைதிகளின் பெற்றோர் உருக்கமான கோரிக்கை

உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் எமது உறவுகளுக்காக கட்சி பேதம் பார்க்காமல் அனைத்து அரசியல் தலைவர்களும் உலகத்தில் உள்ள அனைத்து தமிழ் மக்களும் ஒன்றாக சேர்ந்து ஆதரவு வழங்க முன்வாருங்கள் என அரசியல் கைதிகளின் பெற்றோர்கள் தமது உருக்கமான கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

மகசின் சிறைச்சாலையில் தமது விடுதலையை வலியுறுத்தி உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் பெற்றோர் நேற்று முன்தினம் யாழ் ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றினை மேற்கொண்டிருந்தனர். இதில் கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த கால போரினால் அனைத்து உடைமைகளையும் இழந்து தற்போது அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றோம். இந்த நிலையில் எமக்கு துணையாக இருக்க வேண்டிய பிள்ளைகள் சிறையில் இருக்கின்றார்கள்.

ஒவ்வொரு நாளும் கண்ணீரில் தான் எமது வாழ்க்கையை கொணடு செல்கிறோம். எமது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக் குறியாகி உள்ளது. எமது உறவு கள் உணவின்றி உயிருக்கு போராடிக்கொண்டு இருக்கும் போது எம்மால் எப்படி உணவு உண்ண முடியும். எமது வலியை சிறிதளவேனும் சிந்திப்பதற்கு ஒருவரும் இல்லையா என்று ஒவவொருமுறையும் ஏங்குகிறோம்.

தந்தையை இழந்த குழந்தைகள் கல்வியில் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள், மகனை இழந்த பெற்றோர் ஆதரவின்றி அநாதரவாக நிற்கின்றனர். இந்த நிலை தொடர்ந்தால் எமது சந்ததியின் நிலை மிகவும் கொடூரமானதாகத்தான் அமையும். தமிழ் மக்களின் எதிர்காலத்தை சிந்தித்து எமது தலைவர்கள் எமது உறவுகளை விடுதலை செய்ய முன்வர வேண்டும்.

உலகத்தில் உள்ள அனைத்து தலைவர்களும் எமது ஜனாதிபதியிடம் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அவர்களின் உயிரைக்காப்பாற்ற வேண்டும். அவர்களை விடுதலை செய்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து உதவ முன்வாருங்கள்.

தொடர்ச்சியாக எம்மால் வலிகளையும் வேதனைகளையும் தாங்க முடியவில்லை. எமது துயரங்களைச் சொல்லி ஆற முடிய




வில்லை எமது உறவுகளின் போராட்டத்துக்கு முடிவு கிடைக்க வில்லை என்றால் அவர்கள் உயிரைவிட்டு விடும் நிலையில் உள்ளார்கள். எமது உயிர்களை காப்பாற்ற முன்வா ருங்கள். அவர் களின் விடுதலை க்கு மனமிரங்கி அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-9)

# இரட்டை பிரஜாவுரிமைக்கு 20,000 பேர் விண்ணப்பம்

இரட்டை பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் எதிர்வரும் 15ஆம் திகதியன்று வழங்கப்படவுள்ளன.

இதன்படி வெளிநாடுகளில் வசிக்கும் 2 ஆயிரத்து 500 இலங்கையர்களுக்கு இந்த சான்றிதழ்கள், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வின் போது வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே 4 ஆயிரத்து 500 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் மேலும் 20ஆயிரம் பேர் இரட்டை பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்துள்ளதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் எம். என். ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரட்டை பிரஜாவுரிமைக்கான சாதாரணக் கட்டணம் 3 இலட்சம் ரூபாவாகும். எனினும் விண்ணப்பதாரியின் வாழ்க்கைத் துணைக்கான கட்டணம் 50 ஆயிரம் ரூபாவாக அறிவிடப்படுகிறது. (இ)

ராஜபக்ஷவினர் போன்று நாங்கள்

# விவசாயிகளின் மானியத்தில் கொள்ளையடிக்கவில்லை ரவி

(கொழும்பு)

ராஜபக்ஷ குடும்பத்தைப் போன்று இந்த அரசாங்கத்தில் எவரும் விவசாயிகளின் மானியத்தொகையில் கொள்ளையடிக்கவில்லை என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் ரவி கருணாநாயக்க,ராஜபக்ஷ அரசாங்கத்தில் 350 ரூபா பெறுமதியான உரப்பை ஒன்றல் 150 ரூபா கமிஷனாக பெறப்பட்டிருந்தது. ஆனால் இந்த அரசாங்கத்தில் யாரும் அப்படி கமிஷன் பெறுவதில்லை.

கடந்த வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் ஒரு உரப்பையின் பெறுமதி 2500 ரூபா வீதம் மதிப்பிடப்பட்டு ஒரு போகத்துக்கு பத்து உரப்பைகளுக்கான 25 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது.

இது நேரடியாக விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுடன், விவசாயிகளிடமிருந்து யாரும் கமிஷன் பெறுவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இன்று நள்ளிரவு முதல் இறக்குமதி உருளைக் கிழங்குக்கான வரி அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் அறிவித்துள்ளார். (இ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07.02.1928

மறைவு
13.03.2015

## அமரர் சிதம்பரப்பிள்ளை- தங்கம்மா

திதி:02.03.2016

அம்மாவே எங்களைப் பெற்றவள் நீ என
நாங்கள் பெருமை கொள்ள
கற்றவரைத் தந்த காவியத்தாயே
புண்ணிய தாயாய் புகழ் கொண்டு
புண்ணிய உலகம் காண சென்ற
எம் அன்னைக்கு எம் கண்ணீர் மழையினை
காணிக்கையாய் தருகின்றோம் அம்மா
ஆண்டுகள் பல கடந்தாலும்
உன்னையே எண்ணி வாடும்

உன் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

சி.நடராஜா,
சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,சுன்னாகம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3711) ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

# இராசி பலன்

02.03.2016
(மாசி 19, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
அட்டமி பிற்பகல் 1.59 மணிவரை
கேட்டை பின்னிரவு 1.10 மணிவரை
சுபநேரம் 4.57-6.27 மணிவரை
இராகுகாலம் 12.27-1.57 மணிவரை
அட்டமி-நவமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சூரி புத கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பரணி, கார்த்திகை இரவு 12.49இற்கு தனு-சந் | | |
| சுக் | | | குரு ராகு |
| | சனி செவ் சந் | | |

**மீனம்** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,பயணங்களால் பலனுண்டு.

**மேடம்** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், பகைவர்களின் தொல்லைகள் ஏற்படலாம்,புதிய விடயங்களை யோசித்து செய்வது நல்லது.

**இடபம்** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், களஸ்திர நன்மையுண்டு.

**மிதுனம்** செய்தொழிலில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும்,பகைவர்களின் தொல்லை அகலும், கௌரவமான நாள்.

**கும்பம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்,நிர்வாகத்திறமைகள் வெளிப்படும் நாள்,உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கடகம்** தாழ்ந்த சுபாவமுண்டு,புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும் நாள்.

**சிம்மம்** நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம்,பயணங்களால் பலனுண்டு,தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

**தனுசு** எடுத்த காரியங்களை முடிப்பதில் சில சிரமங்கள் ஏற்படலாம், அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள்,அமைதிக் குறைவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** பொறுமையாக இருந்து காரியம் சாதிக்க வேண்டிய நாள்,ரோகபயமுண்டு,பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**துலாம்** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது,புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்,தேக நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கன்னி** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும்,பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உடன்பிறப்புக்களின் உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

## அடிப்படை வசதிகளின்றி இயங்கும் முரசுமோட்டை பொதுச்சந்தை

(திருமுறிகண்டி)

முரசுமோட்டை பொதுச்சந்தையில் அடிப் படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு அப் பகுதி வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

கரைச்சி பிரதேச சபையின் கீழ் உள்ள முரசுமோட்டை பொதுச் சந்தை 2012 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது.

எனினும் சந்தையைச் சுற்றி வேலி அமைக்கப்படாது திறந்த வெளியாக காணப் படுவதால் கால்நடைகள் புகுந்து சந்தைக் கட்டடத் தொகுதியை நாசமாக்கி வருகின்றன.

அத்துடன் சந்தைக்கான மலசலகூட தொகுதி அமைக்கப்படாமையினால் அருகில் உள்ள பொதுநோக்கு மண்டப மலசல கூடத்தையே வர்த்தகர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே இச் சந்தையின் அடிப்படை வசதி களை உடனடியாக ஏற்படுத்தி தருமாறு சந்தை வர்த்தகர்கள் மற்றும் பிரதேச மக்கள் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-3-31)




### வெளிமாவட்ட மீனவர்கள் நாயாறில் அத்துமீறல்

## முல்லை. மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண வலியுறுத்து

### மாவட்ட செயலக கலந்துரையாடலில் பா.உறுப்பினர்கள் குரல்

(பனிக்கன்குளம்)

வெளி மாவட்ட மீனவர்கள் முல்லைத்தீவு நாயாறு இறங்குதுறையைப் பயன்படுத்தி அங்கு கடற்றொழிலில் ஈடுபடுவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது. இது விடயம் தொடர்பில் அடுத்து வரும் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கலந்துரையாடி தீர்வை எட்டுவதற்கு முடிவு செய்யப்பபட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறு பிரதேசத்தில் வெளிமாவட்ட மீனவர்களால் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜாவினால் மாவட்ட செய லாளருக்கு தகவல் வழங்கப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வைத்திய கலாநிதி சிவமோகன், காதர் மஸ்தான், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான துரை ராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், ஜெனோபர், பிரதி அவைத் தலைவர் அன் ரனி ஜெகநாதன், கடற்றொழிலாளர் சங்க சமாச பிரதிநிதிகள், பாதிக்கப்பட்ட மக்கள்



உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கடந்த மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் வெளி மாவட்ட மீனவர்கள் நாயாறுப் பகுதி யில் மீன்பிடித்தொழில் செய்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றல்ல என தெரிவிக் கப்பட்டது.

இந் நிலையில் யுத்தத்தால் பாதிக்கப் பட்டுள்ள நாயாறு மீனவர்களின் வாழ் வாதாரத்தை சீர்குலைக்கும் நோக்கில் இங்கு வந்து முல்லைத்தீவு நாயாறு மீன வர்களின் இறங்குதுறையிலேயே வெளி மாவட்ட மீனவர்கள் தங்களுடைய படகு களை இழுத்து மீன்படித் தொழிலை மேற் கொள் வதால் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இந் நிலையை வலியுறுத்தி இதற்கான சுமுகமான தீர்வை அடுத்து வரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் காணப் பட வேண்டும் என்பதை பாராளுமன்ற உறுப்பினர்கள், மீனவர்கள், மாகாணசபை உறுப்பினர் வலியுறுத்தினர்.

ஆரம்பத்தில் புகைப்படம் எடுக்க அனு மதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்ச்சி யாக கலந்துரையாடல் மண்டபத்திலிருந்து செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-3-281)

## கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தினால் சக்கர நாற்காலிகள் வழங்கி வைக்கப்பட்டன




கிளிநொச்சி றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் பெங்களூர் மேற்கு, அல்சூர் ஆகிய றோட்டறிக் கழகங்களின் அனுசரணையுடன் சக்கர நாற்காலிகள் 5, துவிச்சக்கர வண்டி ஒன்று என்பன நேற்று முற்பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி நண்பர்கள் விருந்தகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. இவை விசுவமடு, கிளிநொச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. (2-3-277)

## வவு. வர்த்தக நிலையங்களில் சில்லறை காசுக்கு தட்டுப்பாடு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் சில்லறைக் காசுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பொருட்களை கொள்வனவு, விற்பனை செய்யும் போது பணப்பரிமாற் றத்தை சரியாக மேற்கொள்ள முடியவில்லை என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சில்லறைக் காசு இன்மையால பல வர்த்தக நிலையங்களில் மிகுதிப் பணத் தற்கு சொக்கிலேட், தீப்பெட்டி போன்றன வழங் கப்படுவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் தாம் சிலவேளைகளில் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். (2-3-250)

## 199 சமுர்த்தி அங்கத்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை வாழ் வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியி னால் 199 சமுர்த்தி அங்கத்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

இவ்வுதவிகள் நேற்று முன்தினம் காலை தொடக்கம் மேற்படி வங்கியில் வைத்து சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி சி.கௌரி சங்கரியினால் வழங்கி வைக்கப்பட்டன.

அவற்றில் 25 இலட்சம் ரூபா பெறுமதி யான மானிய அடிப்படையிலான வாழ்வாதார உதவிகளாக ஆடுகள், கோழிகள், மாடுகள், தையல் இயந்திரங்கள் ஆகியன 46 பய னாளிகளுக்கும் 65 இலட்சம் ரூபா பெறு மதியான வாழ்வாதார சுழற்சிக்கடன்கள் 153 பயனாளிகளுக்கும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-3-310)

## சிறந்த பிரஜைகளை நாட்டிற்கு வழங்கும் உற்பத்தி நிலையங்கள் பாடசாலைகளாகும்

### வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

நல்ல பிரஜைகளை இந்த நாட்டிற்கு வழங் கும் உற்பத்தி நிலையங்கள்பாடசாலைகள் ஆகும் கல்விமான்கள், வைத்தியர்கள், பொறியிய லாளர்கள், கணக்காளர்கள், ஆசிரியர்கள், சட்ட வாளர்கள் என்பதற்கு அப்பால் சிறந்த மனிதர் களை உருவாக்கவேண்டிய கடமை பாடசாலை களுக்கு உண்டு. இன்று நமது சமூகத்தில் நடக்கும் வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம என்பன பற்றி நினைக்கும்போது நாமெல் லாம் வெட்கி தலைகுனிய வேண்டியுள்ளது. ஒருகாலத்தில் யுத்தம் நடைபெற்றுகொண்டிருந்த போது இவ்வாறான சம்பவங்கள் மாற்றுத்தரப் பினரால்நடந்தேறின. அவற்றிற்கு எதிராக போராட் டங்களை நடத்தினோம். ஆனால் இன்று நம் துரதிர்ஷ்டம் எமது சமூகத்தற்கு எதிராகவே கிளந்து எழும் நிலை உருவாகியுள்ளது என வட்க்குமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்திய லிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு புளியங்குளம் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

உலகின் மிகப்பழைமையானமொழி, கலா சாரம், பண்பாடுகள், சமூக கட்டுப்பாடுகளை கொண்ட நம் சமூகத்தின் இன்றைய நிலையை நினைத்து மனம் சஞ்சலப்படுகிறது. ஒரு மனிதனின் நடவடிக்கைகளை சட்டத்தால் மட்டும் கட்டுப்படுத்த முடியாது. சட்டமென்பது மனிதனால் மனிதனைக்கட்டப்படுத்த இயற்றப் பட்டதொன்றாகும் எனவே மனிதனுள்மனிதத்தன் மையை வளர்த்தெடுக்க பாடசாலைக்கல்வி மிக முக்கிய பங்காற்றுகின்றது. அதிலும் ஏட்டுக் கல்வக்கு அப்பால் இவ்வாறான விளையாட்டுப போட்டிகள் நடத்துவது மாணவர்களின் உடல், உளவளர்ச்சிக்கு மிக அவசியமாகும்.

இதனால் சிறுவர்கள் தமது மதக்கடமை களைக் கூட நிறைவேற்றுவதற்கு நேரம் கிடைப்பதில்லை. வெள்ளிக்கிழமைகளில் கோவிலில் பாருங்கள், கோவில்களில் பூசை நேரத்தில் பூசாரியைதவிரவேறுயாரும் இல்லை.

இந்த நிலைமை மாறவேண்டும். பாட சாலைக் கல்விக்கு சமாந்திரமாக விளையாட்டு, கலாசார நிகழ்ச்சிகள், சமய நடவடிக்கைகள் போன றவற்றில் மாணவர்களை ஈடுபடுத்து வதனூ டாகவே இந்த சமூகத்திற்கு சிறந்த பிரஜை களை வழங்க முடியும்.

சிறுநீரகம் செயலிழக்கும் பிரச்சினை தற் போது மோசமாக பரவி வருகின்றது. அதி கூடிய உரப்பாவனை, நஞ்சுமருந்து பாவனை என்பன இதற்குகாரணமாக கருதப்படுகின்றது. அதிலும் வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி, செட்டிகுளம், வவுனியா தெற்கு பகுதிகளில் இதன் தாக்கம் அதிகம கண்டறியப்பட்டுள்ளது. ஆகக் குறைந்தது இந்த சிறுவர்களுக்காவது பாசாலை நேரங்களில் சுத்திகரக்கப்பட்ட குடிநீரை வழங்க படிப்படியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவித்தார். (2-3-281)

## தீக்காயங்களுக்குள்ளான நிலையில் கணவன், மனைவி வைத்தியசாலையில்

(திருமுறிகண்டி)

சமையல் எரிவாயு கசிவினால் தீப் பற்றியதில் தீக்காயக்களுக்குள்ளான நிலை யில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச் சம்பவம் வவுனியா கருவேப்பங்குளம் பகுதியில் கடந்த 28 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

இதில் செல்லையா அர்ச்சுனராசா, அவரது மனைவி பிரதீபா ஆகியோரே காயமடைந்த வர்களாவர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வீட்டில் சமையல் வேலையில் இருவரும் ஈடுபட்டிருந்தவேளை எதிர்பாராத விதமாக சமையல் எரிவாயு கசிவு ஏற்பட்டு தீப்பற்றியது.

இவர்களின் மேல் தீப்பற்றியதால் ஏற்பட்ட தீக்காயங்களை அடுத்து அவர்கள் இருவரும் உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் அர்ச்சுனராசா பிரதீபா அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணையை வவுனியா பொலி ஸார் மேற்கொண்டனர். (2-3-311)

# பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கெதிராக இடம்பெறும் வன்முறைகளைத் தடுப்போம்

## மன்னாரில் கண்டனப் பேரணி






பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக இடம்பெறும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் மற்றும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தக்கோரி மன்னாரில் கண்டன பேரணி ஒன்று இடம்பெற்றது. மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் இந்த பேரணி முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் ஆரம்பமாகிய பேரணி மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்தது.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் மன்னார் மாவட்டச் செயலக பிரதான வீதியில் ஒன்று கூடி பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.




இதனைத் தொடர்ந்து கண்டன பேரணி இடம்பெற்ற இடத்திற்கு வருகை தந்த மன்னார் பொலிஸ் நிலையத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் அதிகாரியிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

அதன் பின்னர் ஊர்வலமாக சென்ற பெண்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரியாவிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.

குறித்த கண்டன பேரணியில் பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை, மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பி.ஏ. அந்தோனி மார்க் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, பெண்கள் மற்றும் சிறுமிகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுகின்ற பாலியல் வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் படுகொலைகள் காரணமாகப் பெண்கள், சிறுமிகள் சுதந்திரமாக நடமாட முடியாதுள்ளது. அத்துடன் சிறுமிகள் பாடசாலை செல்ல முடியாத அபாயகரமான சூழலும் தோன்றியுள்ளது.

அதேநேரம் வீட்டிலே தனித்திருக்கவோ அல்லது இரவு வேளைகளில் உறங்கவோ முடியாத துர்ப்பாக்கிய நிலையை இன்று எமது நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு பெண்களும் அனுபவிக்கின்றனர்.

எமது நாட்டு மக்கள் அதிலும் குறிப்பாக வடகிழக்கு மக்கள் கடந்த 30 வருடங்களாக வன்முறைக்கு உட்பட்ட கலாசாரத்திற்குள்ளேயே வாழ்ந்து வந்தனர்.

இந்த யுத்தமில்லாத காலத்திலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்ந்தும் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது.

அத்துடன் யுத்தத்துடன் தொடர்புபட்ட பெண்களுக்கெதிரான பாரிய குற்றங்கள் தண்டிக்கப்படாது காணப்படுகின்றது. அத்துடன் பெண்களுக்கெதிரான குற்றங்களை அரசும் அதன் கட்டமைப்புக்களும் உதாசீனம் செய்வதையும் காண முடிகின்றது.

இந்த யுத்தத்தின் கோர வடுக்களை அதிகளவில் சுமந்து வாழ்பவர்கள் பெண்களே. இப்பெண்கள் மீண்டும் பாதுகாப்பின்றி வாழ்வதற்குப் பலவந்தப்படுத்தப்பட்டுள்ளனர்.

எல்லா சமூகத்தினரும் குறிப்பாக தமது பெண்பிள்ளைகளது பாதுகாப்புக் குறித்து அச்சத்துடனும் கலவரமான மனநிலையுடனும் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எமது நாட்டில் வாழ்கின்ற பெண்கள் தமது குடும்பத்தின் பொருளாதாரத் தேவைக்காகத் தாமும் ஒரு தொழிலைத் தேடிச் செய்யவேண்டிய அத்தியாவசியத் தேவையில் உள்ளனர்.

குறிப்பாக வடக்குக்கிழக்குப் பகுதிகளில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் பெண்கள் தமது பெண்பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக தொழில் செய்யச்செல்வதுக்கூட அச்சப்படவேண்டியுள்ளது.


இது இவர்களது வாழ்க்கையைப் பசிபட்டினியுடன் வாழ்வதற்குத் தள்ளுவதுடன் அதனூடாக பெணகளது பாதுகாப்பு மற்றும் கௌரவமும் கேள்விக்குட்படுத்தப்படுகின்றது.

இது இவர்களின் சுய கௌரவத்துடனான வாழ்தலுக்கான உரிமையைப் பறிக்கும் செயலாகும்.

பாலியல் வல்லுறவு வழக்குகளில் மிகவும் வெளிச்சத்திற்கு வருகின்ற சில வழக்குகளைத் தவிர ஏனைய வல்லுறவுச் சம்பவங்களில் வன்செயலை நிகழ்த்தியோர் அரிதாகவே சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

தற்காலத்தில் அரசால் முன்னெடுக்கப்படும் நிலை மாற்றுக்கான நீதி சம்பந்தமான திட்டங்களில் பின்வரும் வழி மொழிதல்களை உள்வாங்குவது அத்தியாவசியமானதென நீதிக்காகப் போராடுகின்ற வடக்கைச் சேர்ந்த பெண்களாகிய நாங்கள் கருதுகின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-3-281)

# பூந்தோட்டம் முகாமில் புனர்வாழ்வளிக்கப்பட்ட 14பேர் குடும்பத்தினருடன் இணைக்கப்பட்டனர்

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் ஒரு வருட கால புனர்வாழ்வைப் பூர்த்தி செய்த 14 பேர் நேற்று முன்தினம் வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் வைத்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணியமை மற்றும் நீதிமன்ற உத்தரவுக்கமைய புனர்வாழ்வளிக்கப்பட்டு வருபவர்களில் 14 பேர் தமது ஒரு வருட புனர்வாழ்வை பூர்த்தி செய்த நிலையில் அவர்களுக்கு பல்வேறு தொழில் பயிற்சிகளும் வழங்கப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

புனர்வாழ்வு, மீள்குடியேற்ற, இந்து விவகார அமைச்சின் ஏற்பாட்டில் புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஆர்.எம். ஜே.வி.ரத்னாயக்காவினால் அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்நிகழ்வில் புனர்வாழ்வு நிலைய பொறுப்பதிகாரி, இராணுவ அதிகாரிகள், புனர்வாழ்வு பெற்று வெளியாகியவர்களின் உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(2-3-250)

# வவு.வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவுக்கு நவீன 2 மாடிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்

### சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நாட்டினார்



வவுனியா வைத்தியசாலையில் விபத்துக்கள் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான புதிய நவீன வசதிகளுடன் கூடிய இரண்டு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டது.

சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி உதவியின் கீழ் அமைக்கப்படவுள்ள இக் கட்டடத்திற்கான அடிக்கல்லினை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நாட்டி வைத்தார்.

180 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்க உத்தேசித்துள்ள இந்த இரு மாடிக் கட்டடத்திற்கு போதியளவிலான நிதி இன்மையால் 109 மில்லியன் ரூபாய் செலவில் அதன் முதற்கட்ட வேலைகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்குமாகாண சபை உறுப்பினர்களான எம்.பி.நடராஜா, ம.தியாகராசா, வடக்குமாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன், வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் கு.அகிலேந்திரன், வைத்தியர்கள், தாதிமார் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(2-3-250)

# மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு குழு விரைவில் அமைக்கப்படும்

### முல்லைத்தீவு மாவட்ட செயலாளர்

முல்லைத்தீவு, நாயாறு கடலில் மீன்பிடியில் ஈடுபடும் வெளிமாவட்ட மீனவர்களால் பாதிக்கப்பட்டுள்ள உள்ளூர் மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக குழுவொன்று அமைத்து விரைவில் தீர்வு காணப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாயாறு கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளுடன் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்துரைத்த மாவட்ட செயலர், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்க சமாசத்தின் பிரதிநிதிகள், கடற்படை, பொலிஸார் ஆகியோரை இணைத்து உருவாக்கப்படும் இந்தக் குழு மூலம், நாயாறு பிரச்சினைக்கான தீர்வு காணப்படும். இந்தக் குழு அமைப்பதற்கான கூட்டம் விரைவில் மாவட்டச் செயலகத்தில் நடைபெறும் என்றார். (2-3)

# கிளி.காணி பிணக்குகளுக்கு விசேட மத்தியஸ்த சபை

மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவால் கிளிநொச்சி மாவட்டத்திற்கான காணிப் பிணக்குகள் தொடர்பான விசேட மத்தியஸ்த சபை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இச் சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதிவரை தொடர்ந்து ஆறு நாட்கள் கிளிநொச்சி மாவட்ட செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஏசியன் பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் இப் பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது. ஏற்கனவே காணிப்பிணக்கு தொடர்பான விசேட மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கான பயிற்சி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கான நிதிசார் பிணக்குகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 15, 16, 17 ஆகிய திகதிகளில் தொடர்ந்து 3 நாட்கள் கொண்ட பயிற்சிகள் கரைதுறைப் பற்று பிரதேச செயலக மண்டபத் தில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (2-3-134)

# மூன்றாம் மட்டத் தலைமை பற்றிய பிரதமரின் ஆலோசனை!



கம்பவாரிதி இ.ஜெயராஜ்

உன்னதமான கருத்தொன்றை முன்வைத்திருக்கிறார், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அவரால் அக்கருத்து நாட்டை நோக்கிச் சொல்லப்படவில்லை. அவரது கட்சியை நோக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது.மூன்றாம் தலைமுறைத் தலைவர்களை,இனி நாம் உருவாக்கவேண்டும் என்பதே அக்கருத்து.இது பிரதமரால் தனது கட்சியை நோக்கிச் சொல்லப்பட்ட கருத்து எனினும், இன்றைய நிலைமையில் இக்கருத்து,

அனைத்துக் கட்சிகளாலும் கருத்தில் கொள்ளப்படவேண்டிய ஒன்றேயாம்.முக்கியமாக நம் தமிழர் தலைமைகள் இதுபற்றி ஆழச் சிந்திக்கவேண்டும்.

தலைமை என்பது பொறுப்புமிக்க ஓர் பதவி.அதனை ஏற்கவும், தாங்கவும், சரியாய் நடைமுறைப்படுத்தவும்,ஒருவர் தனனை இழந்து மிகவும் சிரமப்பட வேண்டும்.கிட்டத்தட்ட ஓர் துறவி போல, தன் தனிவாழ்க்கைச் சுகங்களை மறந்து,நேரம்., காலம் நினையாமல் சமூகத்திற்காக வாழ எவரால் முடியுமோ,அவரே உண்மைத் தலைவராக முடியும். தலைமைப்பதவியின் பாரத்தை உணர்ந்ததால்தான்,"ஆட்சி உனக்கில்லை", என்று கைகேயி சொன்னதும்,வண்டிலால் கழற்றி விடபபட்ட எருது போல,சிலிர்த்துச் சிரித்துச் சென்றானாம் இராமன். கழுத்தில் ஏற்றப்பட்ட வண்டிச் சுமையாக அரசபாரத்தை இராமன் கருதியிருக்கிறான் என்பது, கம்பனது இவ உவமையால் தெரிய வருகிறது.

இன்றோ நம் தலைவர்கள் தலைமைப்பதவிக்காய் போராடி நிற்கின்றனர்.பதவி வந்தால் ஒற்றுமையும், பதவி போனால் பகைமையுமாக,அவர்களின் சிறுமைச் செயல்கள் விரிந்து கொண்டே செல்கின்றன.இராமனைப் போல தலைமைப் பதவியின் பாரம் அறிந்தவர்களாய்,இன்று நம் தலைவர்கள் எவருமே இல்லை. பதவிக்காகக் கட்சி மாறுதல்,பதவிக்காகக் காட்டிக் கொடுத்தல், பதவிக்காக காலில் விழுதல், பதவிக்காகப் பொய்ம்மை பேசுதல், பதவிக்காகப் போட்டுக் கொடுத்தல் என,இங்கு தலைமைப்பதவிக்காக,நம்மவர்கள் செய்யும் கூத்துக்கு ஓர் எல்லையில்லை. அவர்களது அத்தனை முயற்சிகளும், அவர்கள் தலைமைக்குப் பொருத்தமானவர்கள் அல்லர், என்பதனையே எடுத்துக்காட்டுகின்றன.

தேர்தலில் தோற்றபின்னும், தனக்குப் பதவி வழங்கப்படவில்லை என்பதற்காக,ஒரு தலைவர் அதுவரை ஆதரித்தவர்களை எதிர்த்தும்,எதிர்த்தவர்களை ஆதரித்தும் செய்த கூத்து சில நாட்களின் முன் நடந்தது.வாக்கு எண்ணிக்கையின் போதுதான் தோற்று வருவதாய் வந்த செய்தி கேட்டு, மற்றொரு தலைவர் மார்பைப் பிடித்து மயங்கி விழுந்தாராம். மக்களுக்காகப் பாடுபட எத்தனை துடிப்பு என்று பாருங்கள்?

வேடிக்கை மனிதர்கள்.இன்று இவர்கள் மத்தியில் தலைமைப் பதவி என்பதன் அர்த்தம்,புகழ், வருமானம், வசதி என்பனவாய் ஆகிவிட்டது.உண்மைத் தியாகத் தலைவர்களாய் உள்ளவர்களை, தேடிக்காணும் அளவிற்கு இன்று நம் இனத்தின் நிலை உள்ளது.

தமிழ்நாட்டில் காமராஜர் முதலமைச்சராய் இருந்தபோது, கிராமத்தில் இருந்த அவரது தாயாரிடம் இருந்து,அவருக்கு ஓர் கடிதம் வந்ததாம்.'நீ முதலமைச்சராகி விட்டபடியால்,என்னைப் பார்க்கப் பலரும் வருகிறார்கள்,அவர்களை உபசரிக்க நீ மாதாந்தம் அனுப்பி வைக்கும்,நூற்று ஐம்பது ரூபாய் பணம் போதவில்லை,முடிந்தால் இன்னும் ஓர் ஐம்பது ரூபாய் சேர்த்து அனுப்பு' என்று,அக்கடிதத்தில் அவர் கோரிக்கை வைத்திருந்தாராம்.அதற்குக் காமராஜர் ,

'இனி உன்னைக் காண வருகிறவர்களுக்கு,தேநீர் முதலியவை கொடுத்து உபசரிக்காதே, தேவைகளைப் பெருக்கிக் கொண்டால், வருமானம் எவ்வளவு வந்தாலும் போதாமல்தான் இருக்கும்,எனவே வருமானத்தைப் பெருக்க நினைக்காமல்,தேவைகளைச் சுருக்கப் பழகிக்கொள்' என்று,பதில் எழுதினாராம். அவர்தான் உண்மைத் தலைவர்.

நம் நாட்டில் இனப்போர் மூளுவதற்கு முன்பான தமிழர்தம் அரசியலில்,பேச்சாற்றல்,சிறிதேனும் தியாகம்,சமூகத் தொடர்பு, அறிவாற்றல் என்பவற்றை, அடிப்படையாய் கொண்டுதான் தலைமைப் பதவிகள் வழங்கப்பட்டிருந்தன. விடுதலைப்போர் தொடங்கிய பின்பு, ஆயுதந்தாங்கிய இளைஞர்களிடம்,விரும்பியோ விரும்பாமலோ அத்தலைமைப்பதவிகள் கைமாற்றப்பட்டன.ஆயுதப்போர் ஆரம்பித்ததன் பின்னர்,தியாகம் மட்டுமே தலைமைப் பதவியின் தகுதியாய் மாற,அங்ஙனம் உருவாகிய தலைவர்களும்பின்னர் வேறு வேறு காரணங்களால்,தமக்குள் தாமே மோதி ஒருவரை ஒருவர் அழித்தும்,பிள்ளைப்பூச்சிகளாய் அடங்கி இருந்தபழைய ஜனநாயகத் தலைவர்களைக் கொன்றொழித்தும்,தமிழர்தம் அரசியலில் தலைமைக்கான ஒரு வறுமையை உருவாக்கினர்.

ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்றிருந்த வேளையில்,

தம் பலத்தால் தலைமையைத் தம் கைக்குத் தனித்து வரப்பண்ணியவர்கள்,உலகத் தொடர்புக்கு ஜனநாயக முகமும் தேவை என்றுணர்ந்து,அடங்கிக் கிடந்த முன்னைத் தமிழ்த் தலைவர்களையும்,ஒதுங்கிக் கிடந்த ஆயுதப் போராட்டக் குழுத்தலைவர்களையும் ஒன்றிணைத்து,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் ஓர் கட்சியாக்கி,குறித்த சிலரை தலையாட்டிப் பொம்மைத் தலைவர்களாய், பாராளுமன்றத்துள் தம் சொல்கேட்டு இயங்க அனுப்பி வைத்தனர்.அப்போது அவர்களால் நியமிக்கப்பட்ட சில தலைவர்களும்,எத்தகுதி கொண்டு பாராளுமன்றத்துள் நுழைந்தனர் என்று, எவர்க்கும் தெரியவில்லை.

நூற்றாண்டுகளாய் நீடிக்கப்போகிறது என எதிர்பார்த்த,ஈழத்தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம்,யாரும் எதிர்பாராதவண்ணம் 2009 இல் திடீரென முடிந்து போக, ஆளுமைமிக்க தலைவர்களைத் தேடி தமிழர்கள் அலைய வேண்டியதாயிற்று.அதுவரை ஒப்புக்குச் சப்பாணியாய் இயங்கி வந்த, கூட்டமைப்புத் தலைவர்கள் உயிர் பெற்று நிமிர்ந்தனர்.தாமே தலைவர்கள் என மார்தட்டி மகிழ்ந்தனர். இருந்த ஓரிரு மூத்த தலைவர்களுக்கோ தாம் சார்ந்த அணியை ஒரு பெருங்கட்சியாக்கி,உலகுக்குத் தம் பலத்தைக் காட்டவேண்டிய தேவை.அதனால் புதியவர்கள் பலர் எந்தத் தகுதியுமின்றி, பாராளுமன்றத்தினதும் மாகாண சபையினதும் படியேறினர்.இன்று தமிழர்தம் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்வோர் பலரும் இங்ஙனமாய் உள் நுழைந்தவர்களே.

தேவைக்குத் தலைவர்களான, அல்லது தலைவர்களாய் ஆக்கப்பட்ட அவர்தம்மை,ஒரேயடியாய் நாம் குறைசொல்ல முடியாது. ஆனால் யானை தூக்கி முதுகில் வைத்த பட்டத்தரசர்களாய்,அதிர்ஷ்டத்தால் தலைவர்களாய் ஆக்கப்பட்ட அவர்கள்,தம் தலைமைப் பதவியை தமது முதுசச் சொத்தாய் நினைந்ததோடு,தலைமைக்கான தமது தகுதியை வளர்த்துக் கொள்ளாமலும்,மற்றவர்க்கு அத்தலைமையை விட்டுக்கொடுக்க மறுத்தும்,உடும்புப் பிடியாய் அவ் இருக்கையில் உட்கார்ந்து.செய்யும் சேட்டைகள் சகிக்கமுடியாதவை.

போர் முடிந்ததன் பின்பான இரண்டு தேர்தல்களிலும், பெரும்பாலும் ஆரம்பத்தில் இருந்த தலைவர்களே மீண்டும் இருக்கையை நிரப்பியுள்ளார்கள்.இவர்களது இந்த மீள் பிரவேசம் பல கேள்விகளை நம் மனதில் கிளப்புகின்றன.


❖ இவர்கள், குறித்த பாராளுமன்றக் காலத்தில் சாதித்தவை எவை?

❖ இவர்கள் சாதித்தவற்றைச் சாதிக்கக்கூடிய வேறு தலைவர்கள் இனத்துக்குள் இலரா?

❖ குறித்த ஒரு துறையில் மாற்றீடு இல்லாத இவர்தம் ஆற்றல்தான் என்ன?

❖ இப்படியே இப்பதவிகள் குடும்பச்சொத்தாய் இவர்களுக்கு ஆக்கப்பட்டால் புதியவர்களுக்கான இடம் கட்சிக்குள் எங்ஙனம் வழங்கப்படும்?

மேற்கேள்விகளுக்கு சரியான பதில் சொல்ல முடிந்தாலே அன்றி,



ஒரு கட்சியின் ஒரே முகங்கள் திரும்பத் திரும்பப் பாராளுமன்றம் செல்வதற்கும்,

அவ் உரிமை அவர்களின் குடும்பச் சொத்தாக்கப்படுவதற்கும், எவராலும் எந்த நியாயமும் கூற முடியாதென்பது திண்ணம்.நம் இனம் வரலாற்றின் முக்கிய ஒரு திருப்புமுனையின் விளிம்பில் நிற்கிறது.

கரணம் தப்பினால் மரணம் எனும் நிலை நம் இனத்தாருக்கு. இந்நிலையில் ஆற்றலும், ஆழ்ந்த சிந்தனையும்,தியாக மனப்பான்மையும், உண்மைத் தொண்டும் நிறைந்த,பதவிமேல் ஆசையில்லாத தலைவர்களின் தேவை மிக அவசியமானது.அத்தகைய தலைவர்களை உருவாக்க நாம் என்ன முயற்சி செய்திருக்கிறோம்? இதுதான் இன்று நம்முன்னிற்கும் பூதாகரமான கேள்வி.

**'அரசியல் என்பது ஒரு சாக்கடை'** என்று சொல்லிச் சொல்லி, நல்லவர்கள் ஒதுங்கிக் கொள்ள புல்லர்கள் அவ் அரசியல் இடங்களை மெல்ல மெல்ல தமதாக்கிக் கொண்டுவிட்டனர்.இந்நிலையில் மாற்றம் வராவிட்டால் நம் இனம் தாழப்போவது திண்ணம்:.தகுதி நிறைந்த இனப்பற்றுள்ளவர்களை, நாம் தலைவர்களாக்கவேண்டும். இல்லாவிட்டால் மின்னிமுழங்கி வந்து சேர்ந்த,மாகாணசபை இன்று படும்பாடாய்த்தான் நம் இனத்தின் பாடும் முடியும்.

பிழைகளைச் சுட்டுவதோடு கடமைகள் முடிந்துவிடாது,சரி, நிகழ்வதற்கான வழியைச் சொல் என்பீர்கள்.சொல்கிறேன்.

♦ தேர்தல் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க சமூக அக்கறையும் நடுநிலையும் கொண்ட அறிஞர்களை உட்கொண்ட ஓர் குழு அமைக்கப்பட்டு அவர்களாலேயே தேர்தல் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

♦ அத்தேர்வுக்குழுவில் இருக்கும் எவரும் தேர்தலில் போட்டியிடக்கூடாது.

♦ ஒருதரம் பாராளுமன்றப் பதவி வகித்தவர் அப்பதவிக் காலத்தில் தான் செய்த சாதனைகளை எழுத்து மூலமாக அச்சபைக்கு வழங்கவேண்டும்.

♦ அவருடைய மக்கள் ஆதரவு பற்றிய ஒரு கணிப்பீட்டை அவரது தொகுதியில் நடுநிலைகொண்ட ஒருகுழு கணித்து அவ் அறிக்கையை தேர்வுக்குழுவுக்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

♦ பாராளுமன்றம் சென்று, தான் சாதிக்கப்போவது எதை? என்பது பற்றி குறித்த வேட்பாளரிடம் தேர்வுக்குழு நேர்முக விசாரணை நடத்தவேண்டும்.

♦ குறித்த விடயத்தைச் சாதிக்க, இவரை விட்டால் ஆளில்லை எனும் நிலை இருந்தாலே அன்றி எக்காரணம் கொண்டும் ஒருவரை இரண்டு தரத்திற்கு மேல் தேர்தலில் நிற்க அனுமதிக்கக் கூடாது.

♦ ஒருவர் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் போதே குறித்த காலப்பகுதியில் அவரது செயற்பாடு சிறப்பாக இல்லையெனின் அவரை அப்பதவியிலிருந்து நீக்குவதாக நிபந்தனை விதித்து அதற்கு வாய்ப்பாக முன்னரே அவரிடம் இராஜினாமாக் கடிதத்தை கட்சி பெற்று வைத்துக் கொள்ள வேண்டும்.

♦ ஆளுமையும் நேர்மையும் சமூக அக்கறையும் உள்ள இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு உயர் அறிஞர்களைக் கொண்டு ஆளுமைப் பயிற்சி வழங்கப்படவேண்டும்.


♦ ஆளுமைப் பயிற்சி பெற்றவரிடம் கட்சியின் சில பொறுப்புக்களைக் கொடுத்து அதன் பெறுபேறுகளைக் கொண்டு படிப்படியாக அவர்களைத் தரவரிசையில் உயர்த்தி வரவேண்டும்.

♦ அத்தரவரிசையில் முதல் நிலை பெறுவோரை மெல்ல மெல்ல உள்ளூராட்சி சபை, மாகாண சபை போன்றவற்றில் அறிமுகப்படுத்தி அதிலும் அவர்களுடைய ஆற்றலை இனங்கண்டபின்னரே பாராளுமன்றத்தலைவர்களாய் அவர்களை ஆக்கவேண்டும். இங்ஙனமாய் நம் இனத்திற்கான புதிய தலைமை மாற்றத்தை,நாம் நெறிப்படுத்தத் தவறுவோமேயானால்,(சுயநலமிக்க முட்டாள்களின் கைவயப்பட்டு,குரங்கின் கைப்பட்ட பூமாலையாய் நம் இனம் உதிர்ந்து போகும்).

அதனால் இந்நேரத்தில்,பிரதமர் தன் கட்சிக்கு சொல்லியிருக்கும் அறிவுரையை,நம் இனத் தலைமைகளுக்குச் சொன்ன அறிவுரையாய் ஏற்று,உடன் நம் தமிழ்த்தலைமைகள் செயற்பட வேண்டும்நல்ல விடயத்தை எவர்சொன்னால என்ன?அதனை நமது ஆக்க வேண்டும்என்பதே அறிவுடைமையாம்.

**"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்**
**அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு."**

# சிங்கராஜ வனப் பகுதியில் புது வகையான விலங்கு



சிங்கராஜ வனாந்திரப் பகுதியில் அடையாளம் தெரியாத விலங்கு ஒன்று இனங்காணப்பட்டுள்ளது.

வனப் பகுதியின் வெத்தாகல மற்றும் பொதுபிடியவுக்கு இடையிலுள்ள பனபொல கோஸ்குலன பிரதேசத்தில் இந்த விலங்கு காணப்பட்டுள்ளது.

வால் இன்றி மஞ்சள், கறுப்பு, பழுப்பு நிற ரோமங்களுடனுள்ள அந்த விலங்கு 3 கிலோ 300 கிராமளவிலான நிறையுடையது எனவும் 60 சென்றிமீற்றர் வரையான நீளமுடையது எனவும் வனஜீவராசிகள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

# லெபனானுக்கான இடைக்கால படையில் பணியாற்ற இராணுவக் குழு பயணம்

ஐ. நா. வின் லெபனானுக்கான இடைக்கால படையில் பணியாற்ற 10 ஆவது இராணுவ குழு இலங்கையிலிருந்து நேற்று முன்தினம் காலை லெபனானுக்குப் பயணமானது.

பாதுகாப்பு அலகிற்கான இலங்கைப் படையில் 10 அதிகாரிகள் மற்றும் 140 படை வீரர்கள் உள்ளிட்ட 150 பேர் அடங்குகின்றனர். இதற்கு முன்னர் 49 பேர்களைக் கொண்ட குழுவினர் இம்மாதம் 16 ஆம் திகதி மேற்படி நடவடிக்கைகளுக்காக சென்றிருந்தனர்.

மேலும், இக்குழுவில் இலங்கை பொறியியல்ாளர்கள், சமிக்ஞை படையணி , கஜபா காலாட்படை , விஜயபா ஆயுத காலாட்படை , இயந்திர ஆயுத காலாட்படை, கொமாண்டோ படைப்பிரிவு, விசேட படையணி, பொறியியல் சேவைகள் படையணி, சேவைகள் படையணி, மருத்துவ சேவைகள் படையணி, இராணுவ தளபாடங்கள் பராமரிப்பு படையணி, இலங்கை பொறியியலாளர்கள் மற்றும் இயந்திர பொறியியலாளர்கள், இலங்கை இராணுவ பொலிஸ் படையணி மற்றும் பொது சேவைகள் படையணி உள்ளிட்ட படைப்பிரிவுகள் உள்ளடங்குகின்றன.

மேலும், சிறப்புப் படை பிரிவில லெபனானில் விசேட முக்கியஸ்தர்கள் நடவடிக்கைகளுக்கான 4 மோப்ப நாய்களும் உள்ளடங்குகின்றன. அத்துடன், மேற்படி இராணுவ குழுவின் சம்பிரதாயபூர்வமான பிரியாவிடை அணிவகுப்பு சாலியபுரவில் அமைந்துள்ள கஜபா காலாட்படையின் தலைமையகத்தில் ஜனவரி மாதம் 16 ஆம் திகதி இடம்பெற்றது.

ஐ. நா. வின் லெபனானுக்கான இடைக்கால படையினரின் வேண்டுகோளுக்கிணங்க இது போன்ற 9 இராணுவ குழுக்களை 2010 ஆம் ஆண்டு முதல் இலங்கை இராணுவம் அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# பருவகால மாற்றத்தால் ஏற்படும் சளித் தொல்லைக்கு மூலிகையின் பயன்பாடு

சித்த மருத்துவத்தில் பருவத்தை 6 பருவங்களாக பிரித்து பருவகாலங்களுக்கேற்ப வாத, பித்த, கபங்களில் ஏற்படும் மாறுபாடுகளால் உடல் நிலையில் ஏற்படும் மாற்றங்களை இயற்கையிலிருந்து எவ்வாறு பாதுகாத்து கொள்ளலாம் என்ற வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன.

இந்த மாசி மாதம் பின்பனிக் காலத்தில் அடங்குவதுடன் உத்தராயண காலத் தொடக்கமாய் இருப்பதால் அதிக குளிர்ச்சியாய் இருப்பதன்றி அதிக வரட்சியாயும் இருக்கும்.

அதாவது பின்பனிக்காலத்தில் தன்நிலை மிகுதிபெற்ற கோழை அல்லது கபம் இளவேனில் காலத்தில் சூரிய வெப்பத்தால் தன்னிலை பிறழ்ந்து மிகவும் அதிகப்படுவது இயல்பு.

இக்கோழையின் அதிகரிப்பு பசித்தீயை கொடுத்து பலபல கபப் பிணியை விளைவிக்கும்.

ஆகவே இக்கோழையை தணிக்கவேண்டும். ஆகையால் இப்பருவகாலத்தில் குளிர்ச்சியான நீராகாரங்கள், உணவுகளை நீக்க வேண்டும்.

ஆகவே பின்பனிக்காலத்தில் சளியை கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் இளவேனில் காலத்தில் வரும் நோய்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

◆ சுக்கு , கராம்பு, எருக்கலம் பூ எடுத்து நீர்விட்டரைத்து கொடுத்தல். இரைப்பு நீங்கும்.

◆ மஞ்சள், சுக்கு தட்டிப்போட்டு காய்ச்சல்–நீர்கோவை நீங்கும்.

◆ மிளகை தூள் செய்து அரைத்த விழுதையும் நெய்யும் சேர்த்து கொடுத்தல்– சளி, இருமல் நீங்கும்.

◆ மிளகை நெய்யில் கலந்து வறுத்து தூள் செய்து கலந்து வெல்லப் பாகில் கொடுத்தல் – தொண்டை கம்மல் நீங்கும்.

◆ துளசிச் சாறும் இஞ்சிச் சாறும் சம அளவு கலந்து 8 மில்லி லீற்றர் 2 நேரம் கொடுக்க ஜலதோசம் நீங்கும்.

◆ துளசியை வேரோடு எடுத்து கழுவி பொடித்து 1–2கிராம் அளவு தேனில் கலந்து கொடுக்க வறட்டு இருமல் நீங்கும்.

◆ தூதுவளைக் கீரை, சுக்கு, மிளகு, திப்பிலி, தாளிசபத்திரி ஆகியவற்றை 5 கிராம் அளவு எடுத்து 4 மடங்கு நீர் விட்டு 1/4 ஆக காய்ச்சி தேன் கலந்து கொடுக்க ஆஸ்துமா குணமாகும்.


◆ இரவுப் படுக்கைக்கு போகும் முன் தூதுவளைப் பூவை பாலில் போட்டு குடித்தாலும் ஆஸ்துமா குணமாகும்.

◆ தூதுவளைக் கீரை– 3 இலை, அதிமதுரம் –1, கொத்தமல்லி– 1 தேக்கரண்டி மூன்றையும் நீரில் போட்டு கொதிக்க வைத்து குடித்தால் வரட்டு இருமல் குணமாகும்.

◆ தூதுவளைக் கீரைச் சாறை எடுத்து அதிமதுரவேரை சுவற வைத்து சுவற வைத்த அதிமதுர வேரில் சுவறியதும் உலர்த்தி 2 கிராம் அளவு எடுத்து தேனும் கலந்து கொடுக்க லசுனதாம்பிதம் சுகமாகும்.







◆ தூதுவளைக்கீரை –3 , மஞ்சள் தூள் சிறிதளவு , மிளகு–3 இம் மூன்றையும் பொடித்து 2 கிராம் அளவு சாப்பிட சளி ,இருமல் குணமாகும்.

◆ மொசுமொசுக்கை கீரைச் சாறு எடுத்து அதில் திப்பிலியை ஊற வைத்து உலர்த்தி பொடித்து 3 சிட்டிகை தேனில் குழைத்து சாப்பிட ஆஸ்துமா குணமடையும்.

◆ மொசுமொசுக்கை கீரைச் சாறில் கோரோசனை கலந்து கொடுக்க மூச்சிரைப்பு நீங்கும்.

◆ மொசுமொசுக்கை கீரையை தொடர்ந்து சாப்பிட கசம் நீங்கும்.

◆ மொசுமொசுக்கை சாற்றில் அதிமதுரத்தை ஊறவைத்து உலர்த்தி பொடித்து சாப்பிட இருமல் நீங்கும்.

◆ இக்கிரிவேர் , துளசியிலை , தூ து வ ளை யி லை , மொசுமொசுக்கை, வேர்க்கொம்பு ஒரே அளவு எடுத்து நான்கு பங்கு நீர் விட்டு 1/4 ஆக காய்ச்சி 30 –60 மில்லி லீற்றர் காலை,மாலை சாப்பாட்டின் முன் குடிக்க இருமல் குணமாகும்.

◆ கண்டங்கத்தரி வேர் , இக்கிரி வேர், கொத்தமல்லி, வேர்க்கொம்பு சம எடை எடுத்து 4 பங்கு 1/4 ஆக வற்றக் காய்ச்சி 30 மில்லி லீற்றர் காலை ,மாலை கொடுத்தல்

◆ மண்டைச் சளி உள்ள நிலையில் வெந்நீரில் நொச்சி இலையை போட்டு ஆவி பிடித்தல்.

◆ மண்டைப்பாரம் ,தலையிடி உள்ள நேரம் மஞ்சளை சுட்டு வரும் புகையை ஒவ்வொரு மூக்குத் துவாரத்திலும் பிடிக்க வேண்டும்.

◆ தலைக்கு வைக்கும் எண்ணெயை சிறிது சூடாக்கியே வைத்தல் வேண்டும்.

◆ கற்பூரவள்ளி இலையை வாட்டி சாறெடுத்து பனங்கற்கண்டை (கள்ளக்காரம்) போட்டுக் காய்ச்சி கற்பூரவள்ளி பாணியாக 2.5 மில்லி லீற்றர் – 5 மில்லி லீற்றர் வரை கொடுத்து குழந்தைகளுக்கு ஏற்படும் சளியைக் குறைக்கலாம்.

◆ தூதுவளைக்கீரை–3 , சிற்றரத்தை ஒருதுண்டு, உலர்திராட்சை – 10 இவற்றை பாதி எலுமிச்சம் சாறு விட்டரைத்து குடிக்க இருமல் சுகம் வரும்.

◆ அடிக்கடி சளித் தொல்லைக்கு ஒரு தேக்கரண்டி இஞ்சிச் சாறு, ஒரு தேக்கரண்டி தூய தேன், ஒரு சின்ன வெங்காயம் மூன்றையும் கலந்து குடிக்க வேண்டும்.

◆ எலுமிச்சம் பழச்சாறு, தூய தேன் கலந்து குடிக்க இருமல் சுகம் வரும்.

◆ வேர்க்கொம்பு சேர்த்த கோப்பியில் எலுமிச்சம் பழச்சாறில் கலந்து கொடுக்க இருமல் சுகமாகும்.

◆ இம்பூரர் வேர் , சுக்கு, அதிமதுரம் ஒவ்வொன்று 10 கிராம் எடுத்து ஒரு லீற்றர் தண்ணீரில் போட்டு 1/4 ஆக காய்ச்சி 60 மில்லி லீற்றர் காலை, மாலை , மதியம் கொடுத்து வர சளி ,இருமல் இரைப்பு தீரும்.

◆ இம்பூரார் இலையை பொடி செய்து அதனுடன் 2 மடங்கு சிவத்தைப் பச்சையரிசி மா கலந்து அடை தட்டி நெய்யில் போட்டு பொரித்தெடுத்து உப உணவாக எடுக்க சளி, இருமல் , ஆஸ்துமா போகும்.

◆ ஆடாதோடை இலையை நடு நரம்பு நீக்கி சிறுசிறு துண்டாக வெட்டி தேனில் வதக்கி எடுத்து திப்பிலியையும் சேர்த்து குடிநீர் செய்து 30–60 மில்லி லீற்றர் காலை, மாலை கொடுக்க இருமல் , சளித் தொல்லை நீங்கும்.

◆ குழந்தைகளிற்கு ஏற்படும் சளிக்கு கற்பூரவள்ளியிலையை வாட்டி சாறு பிழிந்து துளிக்கணக்கிலும் பாலர்களிற்கு தேக்கரண்டியளவு தேனில் எடுத்தல்.

◆ மொசுமொசுக்கைக் கீரை வெங்காயம் இரண்டையும் நெய் சேர்த்து வதக்கி பகலுணவோடு சேர்த்து சாப்பிடால் மூச்சுத் திணறல், ஆஸ்துமா தீரும்.





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# படுகாயத்துடன் இரு இளைஞர்கள் வைத்தியசாலையில்

இருவருக்கிடையில் ஏற் பட்ட வாய்த்தர்க்கம் மோத லில் முடிவடைந்தது.

இருவரும் போத்தல் தாக் குதலில் படுகாயமடைந்த நிலை யில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் நெல்லியடியில் இடம் பெற்றுள்ளது.நெல்லியடி பெற் றோல் நிலையத்தின் அருகில் உள்ள இரு கடை உரிமை யாளர்களுக்கிடையில் நடை பெற்ற வாய்த்தர்க்கமே இவ் வாறு உடைந்த பீங்கான்போத் தல் தாக்குதலில் முடிவடை ந்தது.காயமடைந்த இருவ ரில் ஒருவர் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையிலும் மற்றொருவர் யாழ். போதனா வைத்தியசாலையிலும்அனுமதி க்கப்பட்டுள்ளனர். (இ-5-60)

# கழிவுவாய்க்கால் இடிந்து வீழ்ந்தது

யாழ்ப்பாணம் ஆடியபா தம் வீதியில் புதிய ஒழுங்கை க்கும் சரஸ்வதி அரைக்கும் ஆலைக்கும் இடைப்பட்ட பகு தியில் காணப்படுகின்ற கழிவு மற்றும் மழைநீர் ஓடும் வாய் க்காலின் ஒருபகுதி முற்றாக இடிந்து வீழ்ந்து மிகவும் ஆப த்தான நிலையில் காணப் படுவதாக சுட்டிக்காட்டப்பட் டுள்ளது. கடந்த ஆண்டின் இறுதியில் பெய்த மழையு டன் இவ்வாய்க்கால் இவ் வாறு இடிந்துள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் விரை ந்து நடவடிக்கை எடுக்க வேண் டுமென பொதுமக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (இ-5)

# பன்முக ஆளுமை கொண்ட நிர்வாகி கலாநிதி குணராசா

## பல்கலைக்கழகப் பதிவாளர் காண்டீபன் இரங்கல்

எமது யாழ்ப்பாணப் பல் கலைக்கழகம் சந்தித்த பதி வாளர்களுள்பன்முக ஆளுமை கொண்ட பதிவாளராக கலா நிதி குணராசா அவர்களை இனம் காணமுடியும். இல ங்கை நிர்வாக சேவையின் திறன்மிக்க அதிகாரியான அவர் அத்துறையில் இருந்து முறைவிடுப்புப் பெற்று நமது பல்கலைக்கழகத்தின் பதி வாளர் பதவியைப் பொறுப் பேற்று அதனை 1997 ஆம் ஆண்டிலிருந்து திறம்பட ஆற்றியவர். இலங்கைப் பல்க லைக்கழக வரலாற்றில் முதன முதலில் கலாநிதிப்பட்டம் பெற்று கடமையாற்றிய பதி வாளராக அவர் திகழ்ந்தார்.

அவரது நிரம்பிய நிர்வாக ஆளுமையினாலும் ஆழ மான கல்விப் புலம் சார்ந்த அறிவாலும் இலக்கியத் துறை யில் அவரின் வீச்சினாலும் பதிவாளர் பதவிக்கு பெருமை சேர்த்தவர் அவர். பதிவாளர் பதவிக்கு தேவையான தகை மைகளில் இரட்டைத் தகை மைகளை ஒருங்கே கொண் டவர். அத்தகைய உயர் ஆளுமை மிக்க மனிதரை இன்று நாம் இழந்திருக்கின் றோம்.

செங்கை ஆழியான் எனும் புனைப் பெயரினால் இலக்கிய உலகில் ஆழமான அழுத்தமான பதிவுகளைத் தந்தவர் அமரர் அவர்கள். அவரது இலக்கிய பதிவுகள் ஒவ்வொன்றும் நம் வரலாற் றைப் பதிந்த முயற்சிகள். ஒருகாலத்தை பிரதிபலிக்கும் காலக் கண்ணாடிகள். 'வாடை க்காற்று', 'யானை', 'கங்கைக் கரையோரம்', 'கடல்கோ ட்டை' எனும் நாவல்கள் நம் மன நாவில் இன்றும் தித்திக் கின்றவை. நாம் மறந்த, தொலைத்த ஈழத்தின் குறிப் பாக வன்னிப் பிரதேசத்தின் விருத்தி வரலாற்றின் விவ சாய குடியேற்றத் திட்டங் களையும் அம்மாந்தரின் முயற்சி, செயற்றிறன், பண்பு, வெற்றி, வீரம், இன்னல்கள், சோகம் என்பவற்றையும் அவை ஒருங்கே அநாயாச மாகப் பிரதிபலித்தன. பல விடயங்களை நமக்குள் மீட் டுக் கொள்ள அவரது இலக் கியங்கள் இன்று அவசியமாகி விட்டன.

அவரே மிகவும் கூடிய ளவில் எழுதிய ஈழத்து எழுத் தாளர் எனவும் கூறப்படு கின்றார்.

தமிழ் நவீன இலக்கியத் துறையில் தனி அத்தியா யங்களாகத் திகழும் அவரது இலக்கிய செழுமையும் நிர் வாகத் துறையில் நிமிர்ந்த திறனும் பின்வருவோருக்கு வழிகாட்டும் வல்லமை மிக் கன.

அவரது நினைவுக ளைத் தாங்கிப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் எனும் முறையில் எமது பல்கலை க்கழக சமூகத்தின் அஞ்ச லிகளைத் தெரிவித்து அன் னாரின் ஆத்மா சாந்திக்குப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

வி.காண்டீபன்,
பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இந்திய மீனவர்கள் 20 பேர் கைது

## பாகிஸ்தான் நடவடிக்கை

(கராச்சி)

எல்லை தாண்டி வந்து மீன் பிடித்ததாக கூறி குஜராத் மாநில மீனவர்கள் 20 பேரை பாகிஸ்தான் கடற் படையினர் கைது செய்தனர். அரபிக்கடல் பகுதியில் இந் தியாவுக்கும், பாகிஸ்தானு க்கும் இடையே கடல் எல்லை உள்ளது. எல்லைதாண்டி வந்து மீன் பிடித்ததாக கூறி பாகிஸ்தான் கடலோர காவ ற்படை அடிக்கடி இந்திய மீனவர்களை கைது செய்து வருகின்றது. அண்மையில் 48 மீனவர்கள் இதுபோன்று கைதாகினர். இந்நிலையில் குஜராத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற 20 மீன வர்களை பாகிஸ்தான் கட லோர காவற்படை கைது செய்துள்ளது. மேலும் நான்கு படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது. (இ)

# கெற்பேலி, விடத்தற்பளை கிராமங்களில் குரங்குகளால் பெரும் தொல்லை

தென்மராட்சி கெற்பேலி, விடத்தற்பளை போன்ற கிரா மங்களுக்கு படையெடுத்து ள்ள குரங்குகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை அங்குள்ள விவ சாய நிலங்களில் பயிரிடப் பட்டுள்ள பயிர்களை நாசம் செய்வதாக சுட்டிக்காட்டப்ப ட்டுள்ளது.

அத்துடன் அங்குள்ள வீடு களில் ஏறி கூரைகளையும் சேதப்படுத்துவதுடன் வீடுக ளுக்குள் புகுந்து தொல்லை கொடுப்பதாகவும் தெரிவிக்க ப்பட்டுள்ளது.

சமையலறைகளுக்குள் புகுந்து உணவுப் பொருட்களை எடுத்துச் செல்கின்றன. இத னால் அங்குள்ளவர்கள் எந் நேரமும்வீடுகளில்நிற்கவேண் டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குரங்குகளின் தொல்லை யால்அங்குள்ளமக்கள்பெரும்சிர மத்தினை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-83)

# நள்ளிரவில் கற்கள் விழும் மர்மத்தால் கங்வெலவில் மக்கள் பயப்பீதியில்

(கொழும்பு)

கொழும்புக்கு அண்மித்த பகுதியான கங்வெல எல கந்த பகுதியில் வசித்துவரும் சுமார் 200குடும்பங்கள் நள் ளிரவில் தமது வீடுகளுக்கு மேல் கற்கள் விழுவதால் தூக்கம் இன்றிப் பயத்துடன் நாட்களைக் கழித்து வரு கின்றனர்.

சுடுகாடு அமைந்துள்ள திசையிலிருந்து நள்ளிரவு ஆரம்பமாகும் இந்த மர்ம மான கல்வீச்சு அதிகாலை வரை தொடர்கிறது.இது ஆவி களின் வேலையாக இருக் கலாம் என அப் பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர். ஆயி ரக்கணக்கான மக்கள் வீதி யோரத்திலிருந்து கற்கள் வருகின்ற திசையை பார்த்த வண்ணம் இருந்ததைபொலி ஸார் உறுதிப்படுத்தி உள் ளனர்.

இவ் விடயம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்க ப்பட்டுள்ளதுடன் இதற்கு திட் டமிடப்பட்ட சில குழுவினர் காரணமாக இருக்கலாம் எனவும் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படுவர் எனவும் கங்வெல பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (3)

# இந்துசமய அறநெறிப் பாடசாலைகள் அனைத்திலும் திருவள்ளுவர் குருபூசை வழிபாடுகளிற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத் தின் இந்துசமய விவகார ப்பிரிவும் இந்து சமய அற நெறிக் கல்விப் பிரிவும் இணை ந்து இவ்வாண்டு 12 குரு முதல்வர்களது பூஜை தினங் களை நாடு முழுவதிலும் உள்ள இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் ஒவ்வொரு குரு முதல்வர்களுக்கும் உரிய குருபூஜை தினங்களையொ ட்டி தனித்தனியாக வழி பாடாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது வரை காலமும் இந்து சமய விவகாரப்பிரிவின் அனு சரணையுடன் தவசீலர்க ளின் குருபூஜை வழிபாடுகள் வருடத்திற்கு சுமார் 100 இற் கும் குறைவான அறநெறிப் பாடசாலைகள்,இந்து சமய நிறுவனங்கள், ஆலயங்க ளில் மட்டுமே இடம் பெற் றன.இவ்வருடம் முதல் அகில இலங்கை முழுவதும் உள்ள 1000இற்கும் மேற்பட்ட அற நெறிப் பாடசாலைகளில் நட த்து வதற்கு ஒழுங்குகள் மேற் கொள்ளப்படுகின்றன. இதன் முதற்கட்டமாக திருவள்ளு வர் தினத்தையொட்டி எதி வரும் மார்ச் மாதம் மாதம் 6ஆம் திகதி அனைத்து இந்து சமய அறநெறிப் பாடசாலை களிலும் திருவள்ளுவர் குரு பூசை வழிபாடுகளும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் திருக்குறள் மனனம், திரு வள்ளுவர், திருக்குறள் என் பன தொடர்பாக பேச்சு ஆகி யன சிறப்பாக இடம் பெறு வதற்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.இதில் பங்கு பற்றும் மாணவர்க ளிற்கு இந்து சமய கலாசார திணைக்களத்தால் பாராட்டு சான்றிதழ்களும் வழங்க ப்படவுள்ளன. மேலும் இவ் வாண்டின் இறுதிப்பகுதியில் இவ்வாண்டிற்கு தெரிவு செய் யப்பட்ட 12 குரு முதல்வர்க ளில் ஒருவரான ஆறுமுக நாவலர் பெருமானுக்கு யாழ். மாவட்டத்தில் அவரது குரு பூசையை சிறப்பிக்கும் மு கமாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவ லர் மாநாடு நடைபெ றவு ள் ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 | 28 |
| 08 | 02 |
| 1947 | 2016 |

## திருமதி சுதந்திர இலட்சுமி மாரிச்செட்டியார்

திருமதி சுதந்திர இலட்சுமி மாரிச்செட்டியார் 28.02.2016 அன்று இந்தியாவில் காலமானார். இவர் காலஞ்சென்ற குருசாமி செட்டியார் தங்கம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பன் செட்டியார் பட்டம்மாளின் மருமகளும் முத்துமாரி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு.மாரிச்செட்டியாரின் அன்பு மனைவியும் இராஜேந்திரன் (முத்துமாரி ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்), சுப்பிரமணியம் (சுவிஸ்), சுமதி (லண்டன்), சின்னம்மாள் (இந்தியா),குமரேஸ்வரி (இந்தியா), பிரபாகரன் (லண்டன்), வேணுகோபால்(இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் வெங்கடேஸ்வரி, லலிதா (சரஸ்வதி,சுவிஸ்), கதிரவேல் (லண்டன்), காலஞ்சென்ற அரவிந்தன்(இந்தியா), காஞ் சனா(லண்டன்), கவிதா(இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் உசியம்பிட்டி மதுரை இந்தியாவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (3740)

தகவல்:-
மகன் மா.இராஜேந்திரம்.

# ஒன்றரை இலட்சம் சிரியா குழந்தைகள் துருக்கியில் பிறந்துள்ளதாக தகவல்

(ஜெனிவா)

**சிரியாவில் உள்நாட்டுப் போர் தொடங்கியதில் இருந்து இதுவரையில் ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான சிரியா குழந்தைகள் அயல் நாடான துருக்கியில் பிறந்திருப்பதாக துருக்கி துணை பிரதமர் லுப்தி எல்வன் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தொடக்க கூட்டத்தில் துருக்கி துணை பிரதமர் எல்வன் பேசுகையில், "5 ஆண்டுக்கும் மேலாக சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டு போர் காரணமாக மனிதாபிமான பேரழிவின் மிகப்பெரிய பகுதியை துருக்கி தன்னால் முடிந்த அளவுக்கு ஏற்றுள்ளது.

துருக்கியில் பிறக்கும் சிரியா குழந்தைகள் எண்ணிக்கை கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 52 ஆயிரமாக உள்ளது. எந்த அயல் நாடுகளிலும் இல்லாத வகையில், 2.7 இலட்சத்துக்கும் அதிகமான சிரிய அகதிகள் எங்கள் நாட்டில் உள்ளனர்" என்றார்.

சிரியாவில் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேறிவிட்ட நிலையில் சர்வதேச சமுதாயம் அதனை எதிர்கொள்ள பெரிய அளவில் செய்யவில்லை என துருக்கி தொடர்ந்து கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் நேற்று, உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ள துணை பிரதமர் எல்வனும், மேற்கத்தேய நாடுகள் உள்ளிட்ட உலக நாடுகள் இந்த சுமையை பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். (இ)

## போகோஹராம் தீவிரவாதிகள் 100 பேர் சுட்டுப் படுகொலை

நைஜீரியாவில் அரசுக்கு எதிராக செயற்பட்ட போகோஹராம் என்ற 100 தீவிரவாதிகளை அந் நாட்டு இராணுவம் சுட்டுக்கொன்றது.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் அரசுக்கு எதிராக போகோஹராம் என்ற தீவிரவாத அமைப்பினர் செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் பொது இடங்களில் வெடிகுண்டு தாக்குதலில் ஈடுபடுவதும், அப்பாவி மக்களை சுட்டுக் கொல்வதும், வீடுகளுக்கு தீ வைப்பதும் போன்ற நாச வேலைகளில் போகோஹராம் தீவிரவாதிகள் ஈடுபட்டு வந்தனர்.

அவர்களை ஒடுக்க நைஜீரிய மற்றும் கமரூன் நாடுகளை சேர்ந்த இராணுவ வீரர்கள் ஈடுபட்டனர்.

போகோஹராம் தீவிரவாதிகள் கமரூன் நாட்டு எல்லை அருகே பதுங்கி இருப்பதாக நைஜீரிய இராணுவத்திற்கு இரகசிய தகவல் கிடைத்தது. தகவல் கிடைத்ததன் பேரில் கமரூன் நாட்டு எல்லை அருகே உள்ள பகுதியில் அதிரடி தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் சுமார் 100 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு நைஜீரிய அரசு அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. (இ)

## கிரீஸ் எல்லையில் அகதிகள் மீது கண்ணீர்ப்புகை குண்டுகள் வீச்சு



(ஏதென்ஸ்)

கிரீஸ் மற்றும் மசிடோனியாவுக்கு இடையே அமைக்கப்பட்டிருந்த வேலியை அகதிகள் தகர்க்க முயன்றதையடுத்து இராணுவத்தினர் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் மூலம் அவர்களை விரட்டியடித்தனர்.

ஐரோப்பியாவுக்கு அகதிகளாக வரும் மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதனால் பல்வேறு ஐரோப்பிய நாடுகளும் அகதிகளுக்கான கதவுகளை அடைத்து வருகின்றன. ஐரோப்பியாவுக்குள் வருபவர்கள் கிரீஸ் வழியாகவே வருகின்றனர்.

இந்நிலையில் கிரீஸுக்கு அருகில் உள்ள மசிடோனியா தங்கள் நாட்டிற்கு அகதிகள் வராத வண்ணம் வேலியை அமைத்துள்ளது.

மேலும் தினமும் 500 அகதிகளுக்கு மட்டுமே அனுமதி அளித்துள்ளது.

இதனால் உணவுக்குக் கூட வழியில்லாமல் ஏராளமான அகதிகள் வேலியின் அருகில் காத்துக் கிடக்கின்றனர்.

இந்நிலையில் எல்லையை திறக்க வேண்டும் என்று கோஷமிட்டபடி திங்களன்று அகதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது நூற்றுக்கும் மேற்பட்ட அகதிகள் வேலியை தகர்த்து மசிடோனியாவுக்குள் செல்ல முயற்சி செய்துள்ளனர்.

இதனையடுத்து கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி இராணுவத்தினர் அகதிகளை விரட்டியடித்தனர். அகதிகளும் இராணுவத்தினரை நோக்கி கற்களை வீசினர்.

இதனால் எல்லையின் அருகே பெரும் பரபரப்பு ஏற்பட்டது. தற்போது வரை 7 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் மசிடோனியாவுக்குள் செல்வதற்காக கிரீஸ் நாட்டின் எல்லையில் காத்திருப்பதாக கூறப்படுகிறது. (இ)

## 100 ஆவது வயதில் 25 ஆவது பிறந்தநாள்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் உள்ள மிஸ்சோரி மாகாணத்தில் சிகெஸ்டன் நகரை சேர்ந்த பெண் லுயெல்லா டங்கன். தற்போது இவருக்கு 100 வயது ஆகிறது. இவர் பெப்ரவரி 29 ஆம் திகதி பிறந்தார்.

இதனால் அவரால் தனது பிறந்த நாளை ஒவ்வொரு வருடமும் கொண்டாட முடியவில்லை. 4 வருடங்களுக்கு ஒரு முறை 'லீப்' வருடத்தில் தான் கொண்டாடி வருகிறார்.

உண்மையில் நேற்று முன் தினம் அவருக்கு 100 ஆவது பிறந்த நாள். ஆனால் அவரால் தனது 25ஆவது பிறந்த நாளாக மட்டுமே அதை கொண்டாட முடிந்தது.

ஏனெனில் பெப்ரவரி 29ஆம் திகதி பிறந்ததால் இந்த ஆண்டு 'லீப்' வருடத்தில் கொண்டாடினார்.


இதுகுறித்து அவர் கூறும் போது, 4 வருடத்துக்கு ஒரு முறை பிறந்த நாள் கொண்டாடுவது தனக்கு வருத்தமளிக்கவில்லை. மகிழ்ச்சியாகவேயுள்ளது என்றார்.

அவரைப் போன்றே சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரை சேர்ந்த மோனா மற்றும் லெரினா என்ற 20 வயது நிரம்பிய இரட்டை சகோதரிகள் தங்களது 5 ஆவது பிறந்த நாளை நேற்று முன்தினம் கோலாகலமாக கொண்டாடினார்கள்.

இவர்களை போன்று பெப்ரவரி 29 ஆம் திகதி பிறந்த 934 பேர் சூரிச் நகரில் வசித்து வருகின்றனர். (இ)




## ஆளுநரைக் கொலை செய்த அதிகாரியை தூக்கிலிட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து போர்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஆளுநரை கொலை செய்த அதிகாரியை தூக்கிலிட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்லாமிய குழுக்கள் தரப்பில் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

பாகிஸ்தானில் கடந்த 1980 ஆம் ஆண்டு முதல் மத நிந்தனை தடுப்பு சட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது.

அப்போதைய இராணுவ ஆட்சியாளர் ஜியா-உல்-ஹக் இந்த சட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

பஞ்சாப் மாகாணத்தின் ஆளுநராக இருந்த டசீர் இந்த சர்ச்சைக்குரிய மத நிந்தனை தடுப்பு சட்டத்தை மாற்றியமைக்க குரல் கொடுத்து வந்தார். இதனால் அவர் மதவாதிகளிடையே பெரும் எதிர்ப்பை சந்தித்து வந்தார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மூத்த உறுப்பினரான சல்மான் டசீர் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட கிறிஸ்தவ பெண்ணுக்கு மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் எனக் குரல் கொடுத்தமையால் சர்ச்சைக்குரியவராகப் பார்க்கப்பட்டார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி டசீரின் பாதுகாவலரும் பொலிஸ் அதிகாரியுமான மும்தாஜ் காத்ரி அவரை சுட்டுக்கொன்றார்.

மும்தாஜ் காத்ரி தாமே முன்வந்து குற்றத்தை ஒப்புக் கொண்டதை தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்த வழக்கை விசாரித்த தீவிரவாத தடுப்பு நீதிமன்று அவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. மும்தாஜ் காத்ரி தனது தூக்கு தண்டனையை இரத்து செய்ய கோரி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை இஸ்லாமாபாத் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

இந்நிலையில் நேற்று முன் தினம் ராவல்பிண்டியில் உள்ள அடியாலியா சிறையில் மும்தாஜ் காத்ரிக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதுதொடர்பான செய்திகள் வெளியாகியதை தொடர்ந்து காத்ரி ஆதரவு இஸ்லாமிய குழுக்கள் தரப்பில் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

போராட்டங்களில் வன்முறைகளும் நடைபெற்றன. கராச்சி, இஸ்லாமாபாத் உள்ளிட்ட இடங்களில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. போராட்டம் நடத்தியவர்கள் வாகனங்களை அடித்து நொறுக்கியுள்ளனர். (இ)

## வெள்ளத்தால் தவிக்கும் மக்கள்

(பெரு)

பெரு நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் மக்கள் வீடுகளின்றி தவித்து வருகின்றனர்.

அந்நாட்டின் தென்மேற்கு பகுதியான அரிகியூபா உள்ளிட்ட நகரங்கள் வெள்ளத்தால் கடும் சேதமடைந்துள்ளன. கனமழையால் ஆறுகள் நிரம்பி குடியிருப்பு பகுதிகளுக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளதால் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு இடங்களில் மண்சரிவு ஏற்படுவதுடன் ஆர்ப்பரித்து வரும் நீரில் அங்குள்ள கார்கள் அடித்துச் செல்லப்படுகின்றன.

அரிகியூபாவில் மட்டும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்துள்ளனர். யூனோ பகுதியும் வெள்ளத்தால் கடுமையாக சேதமடைந்துள்ளன. வெள்ளம் பாதித்த பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் மக்கள் இருளில் வசிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. (இ)

# அதிபர் போட்டிப் பரீட்சையில் போதியளவானவர்கள் சித்தியடையவில்லை

## கல்வியமைச்சு தகவல்

அண்மையில் நடைபெற்ற அதிபர்களைத் தெரிவு செய்யும் போட்டிப் பரீட்சையில் அதிகளவானோர் சித்தியடையவில்லை என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தரம் மூன்று அதிபர் பதவி வெற்றிடத்திற்காக இணைத்துக் கொள்ளும் நோக்கில் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது.

இந்தப் போட்டிப் பரீட்சையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையானவர்கள் சித்தியடையவில்லை. அதிபர் சேவையில் இணைந்து கொள்வதற்காக 19 ஆயிரம் பரீட்சார்த்திகள் போட்டிப் பரீட்சையில் தோற்றிய போதிலும், 4070 பேர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர். இதன்படி, வெற்றிடமாக காணப்படும் 5600 அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதியளவானவர்கள் சித்தியடையவில்லை. இதனால் தொடர்ந்தும் 1524 அதிபர் வெற்றிடங்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

இதேவேளை, மார்ச் மாத இறுதிக்குள் அதிபர் பரீட்சையில் சித்தியடைந்த அனைவருக்கும் நியமனங்களும் இரண்டு வார கால பயிற்சியும் அளிக்கப்பட உள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (இ)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-01.03.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.62 | 146.64 |
| பவுண்ட் | பிரிட்டன் | 197.90 | 204.95 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 154.22 | 160.39 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 142.01 | 147.94 |
| டொலர் | கனடா | 104.66 | 108.90 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 100.56 | 105.30 |
| டொலர் | சிங்கப்பூர் | 101.13 | 105.00 |
| ரூபா | இந்தியா | 2.1080 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.7920 |
| குவைத் | டினார் | 477.7311 |
| ஓமான் | ரியால் | 373.7994 |
| கட்டார் | ரியால் | 39.5266 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3762 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1812 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 80 | 80 | 60 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 100 | 60 | 65 | 60 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 110 | 110 | 140 | 160 | 100 |
| தக்காளி | 30 | 50 | 25 | 30 | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 35 | 40 | 50 | 50 | 40 |
| கோவா | 50 | 50 | 50 | 60 | 60 | 80 | 70 |
| கரட் | 100 | 120 | 130 | 150-200 | 160 | 200 | 120 |
| பூசணி | 40 | 40 | 35 | 50 | 50 | 60 | 70 |
| புடோல் | 50 | 40 | 20 | 50 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 | 40 | 60 | 40 | 70 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 60 | 50 | 80 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 60 | 100 | 50 | 60 | 60 | 80 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 70 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 60 | 80 | 80 | 140 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 50 | 80 | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 80 | 100 | 60 | 80 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 90 | 100 | 90 | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 60 | 50 | 50 | 60 | 80 | 70 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 120 | 120 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 500 | 250 | 250 | 240 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 80 | 100 | 60 | 60 | 80 | 120 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 60 | 70 | — | 60 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 10 | 15 | 30 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 60 | 20 | 50 | 60 | 60 | 40 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-35 | 50 | 40 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 100 | 200 | 100 | 150 | 140 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 50 | 80 | 60 | 60 | 100 | 60 |
| முள்ளங்கி | 20 | 30 | 30 | 40 | 60 | 60 | 25 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## 'வயர்லெஸ்' கருவிகளை ஒப்படைக்க எம்.ஜி.ஆர்.உத்தரவு 118

**கேள்வி:-** உண்ணாவிரதம் இருப்பது பற்றி விடுதலை இயக்கங்களிடம் தெரிவித்தீர்களா?

**பதில்:-** இல்லை. இது ஒருவரின் சுய எண்ணத்தில்தான் நடக்கிறது. இதுபற்றி அவர்களாகத்தான் முடிவு எடுக்க வேண்டும்.

**கேள்வி:-** நாட்டுக்குப் போகிறேன் என்று சொல்கிறீர்களே. இந்தியாவின் உதவி இல்லாமல் வெற்றி பெற முடியும் என்று கருதுகிறீர்களா?

**பதில்:-** எங்கள் குறிக்கோள் போராடுவது. யார் உதவி இருந்தாலும் இல்லாவிட்டாலும் போராடித் தமிழ் ஈழத்தை அடைய வேண்டும் என்பது கொள்கை. அந்த வகையில் நாங்கள் தொடர்ந்து போராடுவோம்.

**கேள்வி:-** இந்தியா தவிர வேறு நாடுகள் உதவி செய்ய முன்வந்தால் ஏற்றுக்கொள்வீர்களா?

**பதில்:-** இதுபற்றி இன்னும் முடிவு செய்யவில்லை.

**அவமானம்**

**கேள்வி:-** நீங்கள் தமிழ் நாட்டு மக்களிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

**பதில்:-** தமிழக மக்கள் எங்களைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. விருந்தாளிகளாக வந்த எங்களை அவமானப்படுத்துவதைத் தமிழக மக்கள் தெரிந்துகொள்ளத்தான் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கேள்வி:-** இந்தியாவில் இருந்து உங்களால் செயற்பட முடியவில்லை என்று கருதுகிறீர்களா?

**பதில்:-** அது எங்கள் மனதில் நன்கு படுகிறது.

**கெட்ட பெயர்**

**கேள்வி:-** உண்ணாவிரதம் தவிர வேறு ஏதாவது நடவடிக்கையைத் தேர்ந்தெடுக்காதது ஏன்?

**பதில்:-** ஏற்கனவே எங்கள் இயக்கங்கள் மீத சில திட்டமிட்ட சதி வேலைகளால் கெட்ட பெயரை ஏற்படுத்தியுள்ளனர். எனவே, இந்த நாட்டுக்கே உரிய வழியில் எங்கள் எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்பதற்காக உண்ணா விரதம் இருக்கிறேன். இப்போது பாலசிங்கம் வீட்டில்தான் உண்ணா விரதம் இருக்கிறேன். அவசியம் ஏற்பட்டால் பொது இடத்தில் இருப்பேன்.

**கேள்வி:-** வேதாரண்யத்திலும் சென்னையிலும் உங்களுக்கு எதிராக இந்தியாவை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று சுவரெட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதே?

**பதில்:-** இங்கேயும் இலங்கை உளவாளிகள் உள்ளனர். அவர்களின் செலாகத்தான் இருக்கும் என்று எண்ணுகிறோம்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன் நிருபர்களிடம் கூறினார்.

அப்போது அந்த இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் உடன் இருந்தார்.

வயர்லெஸ் கருவிகளை ஒப்படைக்க முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உத்தரவிட்டதைத் தொடர்ந்து பிரபாகரன் உண்ணா விரதத்தைக் கைவிட்டார்.

பிரபாகரன் உண்ணாவிரதம் தொடங்கிய நேரத்தில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கோவையில் இருந்தார். உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு பிரபாகரனுக்கு எம்.ஜி.ஆர். தந்தி அனுப்பினார். அதில் அவர் கூறி இருந்ததாவது:-

**கைவிட வேண்டும்**

அன்புள்ள சகோதரருக்கு,

தங்கள் இயக்க அலுவலகத்தில் இருந்து பொலிஸார் பறிமுதல் செய்த தொலைத் தொடர்புக் கருவிகளைத் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்பதற்காக, தாங்கள் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்து இருப்பதைக் கேள்விப்பட்டு வருத்தப்படுகிறேன்.

தமிழக மக்களும் தமிழக அரசும், ஈழத் தமிழர்களுக்கு அளித்து வரும் ஆதரவை நீங்கள் நன்றாகவே அறிவீர்கள். மேலும் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண நாங்கள் தீவிரமாக எடுத்து வரும் நடவடிக்கை பற்றியும் நீங்கள் அறிவீர்கள். எனவே உண்ணா விரதம் இருப்பது என்கிற முடிவைக் கைவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நான் சென்னை திரும்பியதும் இதுபற்றி விவரமாக விவாதிக்கலாம்.

மேற்கண்டவாறு தந்தியில் எம்.ஜி.ஆர். கூறியிருந்தார்.

**எம்.ஜி.ஆர். உத்தரவு**

இந்த நிலையில் பிரபாகரன் உண்ணாவிரதம் பற்றி, எம்.ஜி.ஆரிடம் நிருபர்கள் கேட்டனர்.

விடுதலைப்புலிகளிடம் இருந்து கைப்பற்றிய கருவிகளைத் திருப்பிக்கொடுக்கும்படி போன் மூலம் உத்தரவிட்டு இருக்கிறேன் என்று எம்.ஜி.ஆர்.கூறினார்.

**ஒப்படைப்பு**

இதைத் தொடர்ந்து தமிழ் ஈழ விடுதலைப்புலிகளிடம் இருந்து கைப்பற்றிய வயர்லெஸ் கருவிகள் 23.11.1986 அன்று ஒப்படைக்கப்பட்டன.

பிற்பகல் 3 1/2 மணிக்கு ரகசிய பொலிஸ் அதிகாரி ஒருவர் தமிழீழ விடுதலைப் புலி தலைவர் பிரபாகரனிடம் வயர்லெஸ் கருவிகளைப் பெற்றுக்கொள்ளும்படி தொலைபேசியில் கூறினார்.




(தொடரும்)

## தாஜுடீன் கொலை குறித்து

# ஊகங்களின் அடிப்படையில் விசாரணை நடத்த வேண்டாம்

நாமல் ராஜபக்ஷ அரசிடம் கோரிக்கை



(கொழும்பு)

**தாஜுடீன் கொலை சம்பந்தமாக நடத்தப்படும் விசாரணைகளை ஊகங்களின் அடிப்படையில் நடத்த வேண்டாம் என தாம் அரசிடம் கேட்டுக்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

சம்பவம் தொடர்பான விசாரணை முடிவுக்கு வரும் முன்னர், இந்த கொலையுடன் தனக்கு தொடர்பிருப்பதாக சில தரப்பினர் குற்றம் சுமத்துவதாகவும் சம்பவம் தொடர்பான விசாரணைகளை தான் அவதானித்து வருவதாகவும் நாமல் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் தாஜுடீன் கொலை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை கைது செய்ய போவதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் பொலிஸ் தலைமையகத்திற்கு உறுதிப்படுத்தி கூறவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

ஒரு நபரை கைது செய்யும் முன்னர், அந்த நபரை கைது செய்ய போவதாக பொலிஸார் கூறுவதில்லை. இவ்வாறு கைதுகள் எதிர்காலத்தில் நடக்கலாம் நடக்காமலும் இருக்கலாம் என ஊடகங்களிடம் கூறமுடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை தாஜுடீன் கொலை தொடர்பில் 4 தொலைபேசிகள் மூலம் பெறப்பட்ட விபரங்களுக்கு அமைய கொலை தொடர்பான முக்கியமான பல தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த 4 தொலைபேசிகளும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் பயன்படுத்தியது எனவும் தெரியவந்துள்ளது. (இ)

---

## அ.இ.மு.காங்கிரஸ்

# தமிழருக்கு சிறந்த தீர்வு கிடைக்கும் போது ஆதரவு

## அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த தீர்வு கிடைக்கும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட, எங்களுடைய கட்சி ஒரு படி மேலாகச் சென்று அதற்கு ஆதரவு அளிக்குமென கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை சுயதொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பட்டிருப்பு தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் சோ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராக கிராமிய பொருளாதார பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர்அலி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த மாவட்டத்திலுள்ள அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் தங்களின் நலனுக்காக இனவாதங்களை ஏற்படுத்தி அரசியலில் இலாபம் ஈட்டுகின்றனர். தமிழ் மக்கள் 30 வருடங்கள் ஏமாற்றமடைந்தது போதும். இனியும் நீங்கள் அடிமை வாழ்க்கை வாழக்கூடாது.

தமிழ் அரசியல் தலைவர்களும், முஸ்லிம் அரசியல் தலைவர்களும் முன்னர் பிரிந்திருக்கவில்லை. முஸ்லிம் அரசியல் தலைவர்களை, தமிழ் அரசியல் தலைவர்கள் இணைத்துக்கொண்டே அரசியல் செய்தார்கள். ஒரு காலகட்டத்தில் பிரிந்தபோது, இந்த நாட்டின் பல பாகங்களிலும் செறிந்து வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் நலன் கருதி மறைந்த எம்.எச்.எம்.அஷ்ரப் தனியான கட்சியொன்றை ஆரம்பித்திருந்தார்.

நாங்கள் எவருக்கும் எதிரானவர்கள் அல்லர். இந்த நாட்டில் தீர்வு வழங்கப்படும் போது அது ஏற்றுக்கொள்ளக் கூடிய, நியாயமான, நீதியான தீர்வாக இருப்பின் அதனை நாங்கள் கேட்பதற்கு, பெற்றுக்கொள்வதற்கு, அதற்காக போராடுவதற்கு எங்களின் கட்சி தயாராக உள்ளது.

ஆனால், இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் பிளவுகளை ஏற்படுத்தி இரத்த ஆறு ஓடுவதை தாங்குகின்ற சக்தி இந்த நாட்டிலுள்ள எந்தவொரு இனத்துக்கும் கிடையாது.

இழக்க வேண்டிய எல்லாவற்றையும் இழந்துவிட்டோம். 30 வருட வரலாற்றில் எதனை பெற்றுள்ளோமெனக் கேட்டால் இழந்தவைகளே அதிகம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருக்கலாம், தேசிய நல்லாட்சியாக இருக்கலாம் தமிழ் மக்களுக்கு நல்ல தீர்வைக் கொண்டுவரும் போது,

த.தே.கூ. வை விட எங்களுடைய கட்சி ஒருபடி மேலாகச் சென்று அதற்கு ஆதரவு அளிக்கும். அது சம்பந்தமாக பேசுவதற்கு, அவற்றைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு தயாராக உள்ளோம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

---

# மகிந்த குழுவிலிருந்து விலகினால் பிரசன்னவுக்கு அமைப்பாளர் பதவி

## ருவான் கூறுகிறார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து தற்போதைய கட்சித் தலைமையை ஏற்று செயற்பட சகோதரர் பிரசன்ன ரணதுங்க தயாராக இருந்தால், மினுவாங்கொட தொகுதி அமைப்பாளர் பதவியை அவரிடம் ஒப்படைக்கத் தான் தயார் என ருவான் ரணதுங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதிதாக கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொட தொகுதி அமைப்பாளராக நியமனம் செய்யப்பட்ட முன்னாள் முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் சகோதரர் ருவான் ரணதுங்கவிடம் ஊடகங்கள் வினவிய போது அவர் இவ்வாறு பதிலளித்தார்.

இந்தப் பதவி தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்கவிடமே காணப்பட்டது.

இவர் தற்போது மகிந்த சார்ப்பு குழுவில் காணப்படுவதனால், இவரது சகோதரர் ருவான் ரணதுங்கவுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

---

## இன்று ஒரு தகவல்

### சுபாவம்

ஒவ்வொருவருக்கும் என்று தனித் தனி சுபாவம் உண்டு. விரல் ரேகைகள் எப்படி ஒரே மாதிரியாக இராதோ, அதே போன்று பல்வேறு மனிதர்களின் சுபாவங்களும் மாறுபட்டே இருக்கும்.

நம்மோடு பழகுபவர்களின் சுபாவங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பமோ தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நினைப்போ என்றேனும் நமக்கு ஏற்பட்டது உண்டா என்று நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மற்றவர்களின் இயல்பை ஆழமாக அறிந்து உணர்வதன் மூலமாக நமக்கு ஏராளமான நன்மைகள் இருக்கின்றன.

முதலாவதாக அவரிடம் நம்முடன் கூடிய நட்பு- உறவு இறுகுகிறது. அதே நபர் எதிரியாக இருந்தால் அவரை வெற்றி கொள்ள முடிகிறது. பொதுவாகவே இதன் மூலம் நமக்கு ஆக வேண்டிய காரியங்கள் நம் விருப்பப்படியே நடக்க ஆரம்பிக்கின்றன. இன்னும் சொல்லப் போனால் நம் இஸ்ரப்படியெல்லாம் மற்றவர்களை ஆட்டிப் படைக்க முடிகிறது.

மற்றவர்களின் சுபாவத்தைப் புரிந்து கொள்வது என்றால் ஏதோ மேலோட்டமான ஏரோட்டம் போன்றதல்ல. இது ஓர் ஆழ்ந்த நோக்காக இருக்க வேண்டும். கூர்ந்து கவனிக்கும் இயல்பு வேண்டும்.

ஆடுகிற மாட்டை ஆடிக்கறக்கணும்; பாடுகிற மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும் என்றுள்ள பழமொழியின் விளக்கமே மேற்கூறியவையாகத்தான் இருக்க முடியும்.

நம் இயல்போடு ஒத்துப் போகிறவர்களிடம் நாம் இயல்பாகவே பழகலாம்.

ஆனால் மற்றவர்களது இயல்புக்கு ஏற்ப நாம் நம் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும். மாறாக, எல்லோரிடத்திலும் நம் சுபாவம் எப்படியோ அதே வழியில் அணுகினால் தோல்வியே மிஞ்சும்.

இத்தகைய அணுகுமுறை எல்லோர் விடயத்திலும் வெற்றியைத்தராது என்று வாதாடுபவர்களின் கருத்தை நான் மதிக்கிறேன். ஆனால் பெரும்பாலானவர்களின் விடயத்தில் அது கைகூடும் விடயமாக இருக்கும் என்பதில் இரண்டாம் கருத்தே இருக்க முடியாது.


மற்றவர்களுக்கு ஏற்ப நான் என் இயல்பை மாற்றிக் கொள்ள முடியாது என்று சொல்லுபவர்கள் சரியான பத்தாம் பசலிகளாக இருப்பார்கள். அல்லது தலைக்கனம் பிடித்து அலைபவர்களாக இருப்பார்கள்.

**லேனா தமிழ்வாணன்**




# குதிரையும் குப்புசாமியும்!





...குதிரை வியாபாரம் பற்றி ஒன்றுமே தெரியாது. ஆனாலும, 'தெரியாது' என்று சொல்ல முடியாதே என்பதற்காக எதையாவது வாயில் வந்ததை அவர்கள் சொல்லி வைத்தார்கள்.

குப்புசாமியும் 'நல்ல யோசனை!' என்று சொல்லி, அப்படியே செய்வான். வியாபாரம் தொடர்ந்து நட்டத்தில் ஓடியது.

செந்தாமரை சொல்வதையும் குப்புசாமி கேட்பதாயில்லை.

"இவ பெரிய மனுஷி. புத்தி சொல்ல வந்துட்டா!" என்று செந்தாமரையை அருகே வர விடாமல் விரட்டினான்.

எவ்வளவு நாள்தான் தொழில் நட்டத்திலேயே ஓடும்? குதிரை வியாபாரம் படுத்தேவிட்டது.

அவனுடன் இருந்த நால்வரும் கையில் கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டார்கள்.

கடைசியில் ஒரேயொரு குதிரை மட்டும் மிச்சமிருந்தது.

அதற்கும் வந்தது ஆபத்து.

மீதமிருந்த ஒரு குதிரையையும் விற்க முடிவுசெய்து, பக்கத்து ஊர் சந்தைக்குக் கிளம்பினான் குப்புசாமி.

"அண்ணே நம்மகிட்டே மிஞ்சியிருக்கிறதே இந்தக் குதிரை தான். இதை வச்சுக்கிட்டு ஏதாவது செய்ய முடியுமான்னு பாப்போம்ண்ணே!" என்று கெஞ்சிப் பார்த்தாள் செந்தாமரை.

ம்ம்ம்..! கேட்கவேயில்லை குப்புசாமி.

"சரிண்ணா நானும் உன் கூட சந்தைக்கு வர்றேன்" என்று செந்தாமரை கேட்க, அரைமனதோடு அவளையும் குதிரையில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டான்.

போகிற வழியில் ஒரு வயதானவர் வந்தார். போட்டிருந்த கண்ணாடியைக் கழற்றிவிட்டு, குதிரையைத் தடவிப் பார்த்தார்.

"ஏந்தம்பி, பார்த்தா வயசான குதிரை மாதிரி இருக்கு. இது மேலே இப்படி ரெண்டு பேரு உக்காந்து போறீகளே?" என்றார் அந்தப் பெரியவர்.

உடனே, குதிரை மேலிருந்த குப்புசாமி கீழே இறங்கிக் கொண்டான். தங்கையை மட்டும் குதிரை மேலேயே இருக்க வைத்தான். கூடவே நடந்து போனான்.

கொஞ்ச தூரம் போயிருப்பார்கள்.

எதிரே வந்த ஒருவர் கையிலிருந்த ஊன்றுகோலை நீட்டியபடி, "ஏம்பா, இப்படிப் பொம்பளப் புள்ளைய குதிரை மேல உக்கார வச்சிட்டு, ஆம்பளை நீ நடந்து போறீயே இது நல்லா வாயிருக்கு?" என்றார்.

உடனே, தங்கையைக் கீழே இறக்கி நடந்து வரச் சொல்லிவிட்டு, குப்புசாமி குதிரை மேல் ஏறிக்கொண்டான்.

பாதி தூரம் வந்துவிட்டார்கள்.

தண்ணீர்க் குடம் தூக்கிக் கொண்டு வந்த ஒரு பெண், இவர்களைப் பார்த்தாள்.

"ஏந்தம்பி, பாவம் சின்னப் புள்ளைய நடந்து வரச் சொல்லிட்டு, நீ மட்டும் குதிரை மேல உக்காந்து வர்றீயே உனக்கு மனசு குத்தல!" என்றாள் அந்தப் பெண்.

குப்புசாமியால் எதுவும் பேச முடியவில்லை. சடக்கென்று குதிரை மீதிருந்து கீழிறங்கி விட்டான்.

இருவரும் குதிரையைப் பிடித்துக்கொண்டே நடந்தே போனார்கள். எதுவும் பேசாமல் கூடவே நடந்தாள் செந்தாமரை.

மர வியாபாரி ஒருவர் இவர்கள் பின்னாலேயே வந்தார். மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியபடி நடந்து வந்தவர், இவர்களைப் பார்த்ததும் நின்றார்.

"எங்கே, இந்தப் பக்கமா போறீங்க?"என்று கேட்டார்.

"குதிரையைச் சந்தையில விக்கிறதுக்காகப் போறோம்!" என்றான் குப்புசாமி.

"நான் குதிரை வாங்கத்தான் சந்தைக்குப் போறேன். உங்க குதிரையைப் பாக்க நல்லாத்தான் இருக்கு. ஆனா, வாங்கறதுக்கு எனக்குக் கொஞ்சம் தயக்கமா இருக்கு!" என்றார் மர வியாபாரி.

"உங்களுக்கு என்ன தயக்கம்?" செந்தாமரை கேட்டாள்.

"வேறொண்ணுமில்லே. நீங்க ரெண்டு பேருமே குறைஞ்ச எடை உள்ளவங்களாத்தான் இருக்கீங்க. ரெண்டு பேரும் குதிரை மேலே ஏறிச் சந்தைக்குப் போயிருக்கலாம். அதைச் செய்யாம, இம்புட்டுத் தூரம் குதிரையப் புடிச்சிக்கிட்டே ரெண்டு பேரும் நடந்தே வர்றீங்கன்னா, உங்க குதிரை நோஞ்சானா இருக்குமோன்னு எனக்குச் சந்தேகமா இருக்கு!" என்றார் அந்த மர வியாபாரி.

குப்புசாமிக்குத் தலை சுற்ற ஆரம்பித்தது.

"அய்யோ நாம எதையும் சுயமா சிந்திக்காம, வர்ற போறவங்க சொல்ற கருத்தைக் கேட்டுட்டு செஞ்சா இப்படித்தான் நடக்கும் போலிருக்கேன்னு" நொடிஞ்சுப் போய் உட்கார்ந்து விட்டான் குப்புசாமி.

அண்ணனுக்கு இப்போதாவது புத்தி வந்ததே என்று எண்ணியபடி, அந்த மர வியாபாரியைப் பார்த்து மெலிதாகச் சிரித்தாள் செந்தாமரை. நாம சொல்றதைக் கேட்கலை. மர வியாபாரி சொன்ன பிறகாவது அண்ணனுக்குப் புத்தி வந்ததே என்று செந்தாமரை நிம்மதி அடைந்தாள்.

(முற்றும்)

## 03.2016 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 986 - பிரான்சின் மன்னனாக ஐந்தாம் லூயி முடிசூடினான.
- 1807 - அடிமைகளை நாட்டுக்குள் கொண்டு வருவதை தடை செய்யும் சட்டமூலம் அமெரிக்க காங்கிரசில் கொண்டு வரப்பட்டது.
- 1815 - கண்டி ஒப்பந்தம் என வழங்கப்படும் ஒப்பந்தத்தின் மூலம் கண்டி இராச்சியம் பிரித்தானியருக்குக் கொடுக்கப்பட்டது. சிறை பிடிக்கப்பட்ட ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் என்ற கண்ணுச்சாமி தென்னிந்தியாவில் உள்ள வேலூர்க் கோட்டைக்கு அனுப்பப்பட்டான்.
- 1823 - தமிழ் நாடு, ஸ்ரீபெரும்புதூரில் நிலநடுக்கம் ஏற்பட்டது.
- 1836 -டெக்சாஸ் குடியரசு மெக்சிக்கோவிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1855 -இரண்டாம் அலெக்சாண்டர் ரஷ்யாவின் சார் மன்னனாக முடிசூடினான்.
- 1896 - எதியோப்பியா ஆட்வா என்ற இடத்தில் வைத்து இத தாலியைத் தோற்கடித்தது. ஓர் ஆபிரிக்க நாடொன்றினால் காலனித்துவ நாடொன்றின் படைகள் தோற்கடிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும்.
- 1917 - புவேர்ட்டோ ரிக்கன்களுக்கு ஐக்கிய அமெரிக்கக் குடியுரிமை வழங்கப்பட்டது.
- 1919 - அனைத்துல கம்யூனிஸ்ட்டுகள் முதற் தடவையாக மாஸ்கோவில் கூடினர்.
- 1930 - மகாத்மா காந்தி உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பிப் பதற்காக் அகமதாபாத்திலிருந்து குஜராத் கடலோர த்திலிருந்த தண்டி நோக்கி 240 மைல் நடைப் பயணத்தை துவக்கினார்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: முதலாவது ஜேர்மனியப் படைகள் பல்கேரியாவினுள் நுழைந்தனர்.
- 1946 - ஹோ சி மின் வட வியட்நாமின் அதிபரானார்.
- 1956 - மொரோக்கோ பிரான்சிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1958 - தி.மு.க. மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டது.
- 1962 - பர்மாவில் இராணுவ ஜெனரல் நெவின் (Ne Win) இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி னார்.
- 1970 - ரொடீசியா பிரித்தானியாவிடமிருந்த பிணைப்பைத் துண்டித்து தன்னைக் குடியரசாக அறிவித்தது.
- 1972 - நாசாவின் பயனியர் 10 விண்கலம் வெளிக் கோள்களை ஆராய்வதற்காக புளோரிடாவிலிருந்து ஏவ ப்பட்டது.
- 1990 - ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவராக நெல்சன் மண்டேலா தெரிவு செய்யப்பட்டார்.
- 1992 - உஸ்பெக்கிஸ்தான், மல்தோவா ஆகியன ஐ.நா வில் ணைந்தன.
- 1998 - ஜுப்பிட்டரின் சந்திரனான "யூரோப்பா"வில் அடர்ந்த பனிக்கட்டியின் கீழ் திரவநிலையில் கடல் இருப்பதாக கலிலியோ விண்கலம் தகவல் அனுப்பியது.

### பிறப்புக்கள்

- 1896 - ரா. பி. சேதுப்பிள்ளை, தமிழறிஞர் (இ. 1961)
- 1931 - மிக்கைல் கொர்பசோவ், சோவியத் ஒன்றிய முன்னாள் தலைவர்
- 1935 - குன்னக்குடி வைத்தியநாதன், வயலின் இசைக் கலைஞர் (இ. 2008)

### இறப்புக்கள்

- 1791 - ஜோன் வெஸ்லி, மெதடிஸ்தத்தை அறிமுகம் செய் தவர். (பி. 1703)
- 1930 - டி. எச். லோறன்ஸ், ஆங்கில எழுத்தாளர் (பி. 1885)
- 1949 - சரோஜினி நாயுடு, இந்திய சுதந்திரப் போராட்ட வீராங்கனை, கவிக்குயில் (பி. 1879)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துமாறு கூட்டு எதிர்க்கட்சியினர் கோரிக்கை

(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலதாமதமின்றி நடத்துமாறு, கூட்டு எதிர்க்கட்சி சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. கூட்டு எதிர்க்கட்சியின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் சுயாதீன தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவை சந்தித்து கலந்துரையாடிய போதே, இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான காலம் எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், அந்த காலப்பகுதிக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அறிவிக்க வேண்டுமென கூட்டு எதிர்க்கட்சியினர் வலியுறுத்தியுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அறிவிப்பை அறிவிக்கும் அதிகாரம், சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேர்தல்கள் செயலகத்திற்கு கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் தினேஸ் குணவர்தன, விமல் வீரவனச, உதய கம்மன்பில, ஜீஎல்பீரிஸ, குமார வெல்கம, பந்துல குணவர்தன மற்றும் வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட மேலும் பலர் பிரசன்னமாகியுள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சியின் கோரிக்கை தொடர்பான அறிவிப்பை எதிர்வரும் வெள்ளிக்கிழமை. சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் அறிவிப்பார் என கூட்டு எதிர்க்கட்சியின்தலைவர்தினேஸ்குணவர்தன தெரிவித்துள்ளார். (இ)

# குமார் குணரட்னத்தின் அரசியலை அரசு திட்டமிட்டு அழித்து வருகிறது

(கொழும்பு)

குமார் குணரட்னத்தின் அவுஸ்திரேலிய குடியுரிமை தொடர்பான பிரச்சினையை முன்வைத்து, அவரது அரசியல் வேலைத்திட்டத்தை அரசாங்கம் திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக முன்னிலை சோசலிசக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

மருதனை சீ.எஸ்.ஆர். மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அந்த கட்சியின் அரசியல் சபை உறுப்பினரான துமிந்த நாகமுவ இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த திட்டத்தை தோற்கடிக்க நாட்டில் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ள சகல சக்திகளும் அணிதிரள வேண்டும்.

அவ்வாறு அணிதிரளாவிட்டால், இந்த இடத்தில் ஆரம்பிக்கும் அரசாங்கத்தின் பயணம் பெரும் ஆபத்தான திசை நோக்கி நாட்டை இட்டுச் செல்லும் எனவும் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

முன்னிலை சோசலிக் கட்சியின் அரசியல் சபை உறுப்பினரான குமார் குணரட்னம் குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 100 நாட்களுக்கு மேல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சிறுநீரக வங்கியொன்றை நிறுவுமாறு கோரிக்கை

நாட்டில் சிறுநீரக வங்கி ஒன்றை ஏற்படுத்துவதற்கு கட்டளையிடுமாறு கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஸ்வர்ணா போபிட்டிய மன்றத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குறித்த மனுவில், சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார அதிகாரிகளை கட்டளையிடுமாறு கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த மனுவில், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன மற்றும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மருத்துவர் பி.ஜீ மஹிபால ஆகியோர் பிரதிவாதிகளாகக் பெயரிடப்பட்டுள்ளனர்.

சுகாதார துறையினை அபிவிருத்தி செய்வதற்கு சுகாதார அதிகாரிகள் கட்டுப்பட்டுள்ளதாகவும் அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவர்களின் கடமை என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.


இதேவேளை, நாட்டில் வடமத்திய மாகாணத்தில் அதிகளவான சிறுநீரக நோயாளர்கள் இருப்பதுடன் ஏனைய மாகாணங்களிலும் சிறுநீரக நோயாளர்கள் இருப்பதாகவும் அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மரணத்தின் பின்னர் சிறுநீரகங்களைத் தானம் செய்வதற்குப் பலரும் விரும்பம் தெரிவிக்கும் நிலையில் அதனை சேமித்து வைப்பதற்கு உரிய இடம் ஒன்று நாட்டில் இல்லை எனவும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. எனவே, குறித்த விடயத்தினை கருத்திற்கொண்டு தேசிய இரத்த வங்கிக்கு நிகரான வகையில் சிறுநீரக வங்கியொன்றை உருவாக்குமாறும் அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 649

Search for people, places and things  Nagendram  Home

அருள்ராஜ்





கிசானா




சந்துரு





ஜீவி தர்சன்




சில்மா



பாலேஸ்வரி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



# முஸ்லிம்களுக்கு வலை வீசும் புதிய அரசியல் வியூகம்

முஸ்லிம்களின் சுயநிர்ணயம், அரசியல் அதிகார அலகுகளை அடியோடு பிடுங்கியெறிந்த மகிந்த ராஜபக்ஷ அரசுக்கு சிறுபான்மையினரைப் பற்றிப் பேசும் எந்த உரிமையும் கிடையாது. அவ்வாறு அவர்கள் பேசினால் அதன் பின்னணிக்குள் மர்மங்கள் மறைந்திருக்கும் என்பதே உண்மை. போர் முடிந்து களத்திலிருந்து வெளியேறிய மகிந்த அரசு, முப்பது வருடங்கள் பழைமை வாய்ந்த பெரும் வீரனை வீழ்த்தி விட்டோம். இனி யார் உரிமைக்காக எம்மோடு மோதுவது என்ற வீராப்புடன் தான் நடந்து கொண்டது.

இந்த வீராப்பின் எதிரொலிகளே முஸ்லிம்கள் மீதான வன்முறைகள், அடக்குமுறைகள் என்பவையாகும். சிங்கள, பௌத்த தேசப்பற்றை பெரும்பான்மை மக்களிடையே விதைத்து தேசிய வாதத்தை வளர்ப்பதினூடாக ராஜபக்ஷக்களின் ராஜ்யக் கனவுகளை நிலைப்படுத்தவும் உறுதிப்படுத்தவுமே மகிந்த அரசில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்காக தேசத்துக்கு மகுடம், யுத்த வெற்றி தினம், ரணவிரு (படை வீரர் தினம்) என்பவற்றை அறிமுகப்படுத்தி வருடத்துக்கு மூன்று முறை சிங்கள தேசியத்தின் சிந்தனைகளுக்கு உயிரூட்டப்பட்டது. இவ்விழாக்களில் சிறுபான்மைச் சமூகங்களை ஏளனம் செய்யும் வகையில் அரச தலைவர்களால் கருத்துக்களும் வெளியிடப்பட்டன.

விடுதலைப் புலிகளுக்கு உயிரூட்டும் புலம்பெயர் தமிழர்கள் (டயஸ் பொராக்கள்) மற்றும் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு (ஐ.எஸ்.ஐ) எச்சரிக்கையூட்டவே அடிக்கடி இராணுவ விழாக்கள் நடத்தப்படுதாகவும் அப்போது கூறப்பட்டது.

இத்தனைக்கும் ராஜபக்ஷவின் தேசப்பற்றுக்குள் சிறுபான்மையினரோ, மிதவாத சிந்தனையுள்ள சிங்களவர்களோ இருக்கவில்லை. மாறாக கடும்போக்குடைய பௌத்த கோட்பாடுடையவர்களே தேசப்பற்றுக்குள் உள்வாங்கப்பட்டிருந்தனர். இந்நிலைமைகளின் யதார்த்தம் மகிந்தவை ஆட்சியிருந்து அகற்றியது.

மகிந்தவை ஆட்சியிலிருந்து வீழ்த்த சிறுபான்மையினர் எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள் போன்று மகிந்தவை ஆட்சியிலிருந்து காப்பாற்ற- தக்க வைக்க ஒட்டுமொத்த சிங்களவர்களும் ஓரணியில் திரளவில்லை. அவ்வாறு திரண்டிருந்தால் ஜனவரி 08 தேர்தலின் முடிவுகள் வேறுவிதமாக இருந்திருந்திருக்கும்.

இதிலிருந்து ஓர் உண்மையைப் புரிந்துகொண்ட மகிந்த, சிறுபான்மையினரை மீண்டும் நெருங்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். போரின் கொடுமை, கடும் போக்குவாதம் என்பவை தன்னை தமிழர்களிடமிருந்து தூரமாக்கியுள்ளதை உணர்ந்து கொண்டதால் முஸ்லிம்களை வளைத்துப் பிடிக்க புதுக்கதை சொல்கிறார் மகிந்த.

பள்ளிவாசல் உடைப்பு, பர்தா விவகாரம், ஹலால் பிரச்சினை, கிறீஸ் மனிதன் போன்ற பிரச்சினைகள் தனது ஆட்சிக்காலத்தில் நிலவினாலும் அதற்கு தான் பொறுப்பில்லை என்றும் இதற்கு மன்னிப்புக் கோருவதாகவும் இப்போது மகிந்த கூறுகின்றார். இப்பிரச்சினைகள் 2012-2014 காலப்பகுதியில் இடம்பெற்ற சிறிய பிரச்சினைகள். இதை முஸ்லிம்கள் மறக்க வேண்டும். இதையும் விட எத்தனை பெரிய உதவிகளை முஸ்லிம்களுக்கு செய்துள்ளேன். வடக்கிலிருந்து 72 பள்ளிவாசல்களை மீட்டது நான். கிழக்கில் விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்த முஸ்லிம்களின் ஆயிரக் கணக்கான காணிகளை மீட்டது எனது அரசு. பாலஸ்தீன மக்களுக்காக இன்றும் நான் குரல் கொடுக்கிறேன். எனவே முஸ்லிம்கள் என்னை நம்பலாம் என பிராயச்சித்தத்துக்கான புதிய பிரசாரங்களை முஸ்லிம்கள் மத்தியில் மகிந்த கட்டவிழ்த்துள்ளார்.

**பள்ளிவாசல் உடைப்பு, பர்தா விவகாரம், கிறீஸ் மனிதன், அளுத்கம வன்செயல்... மறக்கச் சொல்கிறாரா மகிந்த?**

மகிந்தவின் பிரசாரத்தில் இரண்டு சிறுபான்மை சமூகங்களையும் (தமிழ், முஸ்லிம்) பிரித்தாளும் தந்திரமும் காணப்படுகிறது.

டயஸ்பொராக்களினதும் மேற்குலகினதும் தயவினால் ஆட்சிக்கு வந்துள்ள மைத்திரி- ரணிலின் நல்லாட்சி அரசில் விடுதலைப் புலிகளின் சிந்தனை ஓங்கியுள்ளது. எனவே, முஸ்லிம்களின் அரசியல், சமூக பிரச்சினைகளுக்கு நிச்சயம் தீர்வு கிடைக்காது என்பதே சிறுபான்மையினரைப் பிரித்தாளும் மகிந்தவின் பிரசாரமாக உள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசாக நல்லாட்சி அரசாங்கத்தை விமர்சித்தால் பல காய்களை பறித்துக் கொள்ளலாம் என்பதே ராஜபக்ஷவின் யுக்தி, விடுதலைப் புலிகளால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் வாக்கு, முஸ்லிம் மக்களின் வாக்கு, சிங்களவர்களின் வாக்குகளை குறி வைத்தே இப்பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது. எனவே இவ்விடயத்தில் முஸ்லிம்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். மகிந்த உண்மையில் முஸ்லிம்களின் பிரச்சினையைத் தீர்க்க விரும்பியிருந்தால் பள்ளி, ஹபாயா, ஹலால், கிறீஸ் மனிதன் அச்சுறுத்தல்களை அவரின் ஆட்சிக்காலத்தில் தீர்த்திருக்கலாம். முற்றாக இல்லாவிட்டாலும் முஸ்லிம்களின் சமூகக் கொதிப்பை சற்றுத் தணித்திருக்கலாம்.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பொதுபல சேனாவின் காரியாலயத்தை காலியில் திறப்பதை தவிர்த்திருக்கலாம். சரி... சமூகப் பிரச்சினையை விடுவோம். முஸ்லிம்களின் அரசியல் பிரச்சினைக்கு நிச்சயம் மகிந்த தீர்வை முன்வைத்திருக்க முடியும். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் மேலான பலம் (160 எம்.பிக்கள்), நிறைவேற்று அதிகாரம்.... இவற்றை விடவும் என்ன தேவை?

2015 தேர்தலின் போது மு.கா.தலைவர் ஹக்கீம் ம.கா.தலைவர் ரிஷாட் ஆகியோர் மகிந்தவை விட்டு வெளியேறிய போது சிங்களவர்களை சூடேற்றும் வகையில் இவர்களின் வெளியேற்றத்தை வைத்து காய் நகர்த்தினார் ராஜபக்ஷ.

அம்பாறை மாவட்டத்தை முஸ்லிம்களுக்காக வழங்காததற்கு ஹக்கீமும், மன்னாரில் முஸ்லிம் கொலனியைக் கொடுக்காததற்காக ரிஷாட்டும் தன்னை விட்டு வெளியேறியதாகச் சொன்ன மகிந்த, சிங்கள நாட்டின் தலைவிதியை தமிழர்களும், முஸ்லிம்களும் தீர்மானிக்கும் விதியை மாற்றுவதற்கு சிங்களவர்கள் அனைவரும் தனக்கு வாக்களிக்க வேண்டும் என்றார்.

இதிலிருந்து மகிந்தவின் சுயரூபமும் சிங்கள, பௌத்த கடும்போக்கும் வெளியாகின்றன. ஆட்சி அதிகாரத்தோடு இருக்கையில் முஸ்லிம்களுக்கான உரிமையை வழங்காத மகிந்த மீண்டும் கடும்போக்கு சிங்களவர்களின் துணையோடு ஆட்சிக்கு வந்து முஸ்லிம்களின் உரிமையை வழங்குவாரா?

இதையும் விட வேதனையானது முஸ்லிம் தலைமைகளின் நிலைப்பாடு. அம்பாறை மாவட்டத்தில் தனியலகு கோரும் முஸ்லிம் தலைமைகள் எவ்வாறான அதிகாரங்கள் வேண்டுமென்பதை தெளிவுபடுத்துமா? பொத்துவில், சம்மாந்துறை, கல்முனை ஆகிய மூன்று தொகுதிகளையும் உள்ளடக்கியதாகவே தென்கிழக்கு அலகு அடையாளம் காணப்பட்டுள்ளது. இதை மேலும் விஸ்தரிப்பதா? இந்த அலகுக்குள் (எல்லை) மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களையும் ஒன்றிணைப்பதா? என்பதை மு.கா. தெளிவுபடுத்தவில்லை. கிழக்கில் 40 வீத தமிழர்களும் 37 வீத முஸ்லிம்களும் 23 வீத சிங்களவர்களும் வாழும் போது தனி முஸ்லிம் மாகாண கோரிக்கை எந்த எல்லைக்குள் சாத்தியம்?

தென்கிழக்கு அலகுக்குள் 20 வீத முஸ்லிம்கள் வந்துவிட்டால் கிழக்கில் எஞ்சியுள்ள 17 வீத மட்டக்களப்பு, திருமலை மாவட்ட முஸ்லிம்களை எங்கு சேர்ப்பது? மாறாக குறித்த தென்கிழக்கு அலகுக்குள் பெருந்தெருக்களோ, காணிகளோ, பெரும் ஆறுகளோ, அணைக்கட்டுக்களோ, நீர்த்தேக்கங்களோ இல்லை. இவ்வாறான நிலையில் தென்கிழக்கிற்குள் வரும் முஸ்லிம்களின் நெற்செய்கை, பயிச்செய்கை காணிகளுக்கு எங்கிருந்து நீரைப் பெறுவது? அம்பாறையில் உள்ள டி.எஸ்.சேனநாயக்க சமுத்திரம், ஊவா அல்லது அம்பாறை அலகுக்குள் சென்று விடுமானால் முஸ்லிம்களின் காணிகளுக்கான நீரைப்பெறவும், கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களைப் பெறவும் சிங்கள மாகாணத்தின் தயவைக் கோர வேண்டி வரும். இது இன்னும் இந்தியாவிலுள்ள தமிழ்நாடு, கர்நாடக காவிரி நீர்ப்பிரச்சினை போன்று மாகாண அரசுகளிடையே முறுகல் நிலையையும் தோற்றுவிக்கலாம். எனவே, முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வுத் திட்டத்தை முஸ்லிம் தலைமைகள் தெளிவுபடு த்த வேண்டும்.

-ஏ.ஜீ.எம்.தெளபீக்-

## வடபகுதி ஊடகவியலாளர்களின் குறைகளை கேட்டறிய

# தென்பகுதி ஊடகவியலாளர்களுடன் ஊடக அமைச்சர் கயந்த யாழ்.வருவார்

வடபகுதி ஊடகவியலாளர்களின் குறை நிறைகளைக் கேட்டறிவதற்காகவும், தென்பகுதி ஊடகவியலாளர்களுக்கும் வடபகுதி ஊடகவியலாளர்களுக்கும் இடையில் நட்புறவை ஏற்படுத்தும் நோக்கிலும் எதிர்வரும் 26 ஆம் திகதி ஊடகத்துறை அமைச்சர் தலைமையில் தென்பகுதி ஊடகவியலாளர் குழுவொன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது என ஊடகத்துறை மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

பாராளுமன்ற ஊடகவியலாளர் சங்கம் அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த "டிஜிற்றல் ஊடகம் மற்றும் தொழில்நுட்பத்தின் செயற்பாடு"எனும் தலைப்பிலான செயலமர்வில், சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வட பகுதிக்கு மூன்று நாட்கள் விஜயம் மேற்கொள்ளும் இக்குழுவினர் யுத்தத்தால் உயிரிழந்த மூன்று ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் வேலைத்திட்டத்தையும் ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பின்னர் தமது தொழிலை முன்னெடுப்பதில் வடபகுதி ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து கொள்வதற்கும், அவர்களின் நலன்புரகள் குறித்து அறிந்து கொளவதற்கும் இந்தப் பயணம் வழிவகுக்கும் என வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார். தென்பகுதி ஊடகவியலாளர்கள் வடக்கிற்குச் சென்று அங்குள்ள ஊடகவியலாளர்களுடன் நட்புடன் பழகுவதற்கான சந்தர்ப்பம் இதனூடாக கிடைக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 26ஆம் திகதி கொழும்பிலிருந்து புகையிரதம் மூலம் தென்பகுதி ஊடகவியலாளர்களுடன் வடக்கு நோக்கிப் புறப்படவுள்ளோம். இடைவெளியில் குருநாகல், அநுராதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் பிராந்திய ஊடகவியலாளர்களையும் அழைத்துச் செல்லவுள்ளோம்.

26,27,28ஆம் திகதிகளில் இடம்பெறும் இந்த வடக்கு விஜயத்தின் போது வடபகுதி ஊடகவியலாளர்கள், மதத்தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரைச் சந்திக்கவிருப்பதாகவும் அவர் கூறினார். அங்குள்ள ஊடகவியலாளர்களின் நலன்புரிகள் தொடர்பில் கேட்டறியவிருப்பதுடன், உயிரிழந்த மற்றும் காணாமற்போன ஊடகவியலாளர்களின் உறவினர்களையும் சந்திக்கவிருப்பதாக அமைச்சர் கூறினார்.

உயிரிழந்த ஊடகவியலாளர்கள் மூவரைத் தேர்ந்தெடுத்து அவர்களின் குடும்பங்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு வீட்டை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும், ஒரு வீட்டை சுயாதீன தொலைக்காட்சியும் மற்றைய வீட்டை லேக்ஹவுஸ் நிறுவனமும் அமைத்துக் கொடுப்பதற்கு இணங்கியுள்ளன.

இந்த வீடுகளை அமைக்கும் பணிகளும் ஆரம்பித்து வைக்கப்படவிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். இவற்றுக்கும் அப்பால் கலாசாரங்களை பரிமாறிக் கொள்ளும் வகையிலான நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஊடகவியலாளர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தில் முதற்கட்டமாக தியகம பகுதியில் காணிகளை அளவிடும் பணிகள் இவ்வாரத்தில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகச் சுட்டிக்காட்டிய ஊடகத்துறை அமைச்சர், அடுத்த கட்டமாக பிராந்திய ஊடகவியலாளர்களுக்கென சகல மாவட்டங்களிலும் ஊடகவியலாளர் வீட்டுத்திட்டமொன்று அமைத்துக் கொடுக்கப்படவிருப்பதாகவும் கூறினார்.

பாராளுமன்ற ஊடகவியலாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த செயலமர்வில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பீடத்தின் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி லோச்சந்தக்க ரணதுங்க, "டிஜிற்றல் ஊடகம் மற்றும் தொழில்நுட்பத்தின் செயற்பாடு" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றியிருந்தார். (இ)

# இலங்கையிலுள்ள அச்சு ஊடகங்கள் நீண்டகாலம் நிலைத்திருக்கும் அறிகுறி

## எனினும் உலக சனத்தொகையில் 29 வீதமானோரே பத்திரிகை வாசிக்கின்றனர்

ச்ர்வதேச தொலைத் தொடர்பு அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் உலக சனத்தொகையில் 29வீதமானவர்களே பத்திரிகைகளை வாசித்து செய்திகளை அறிந்து கொள்கின்றனர். அத்துடன் டிஜிற்றல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக அச்சு ஊடகங்கள் தேவையில்லை என்ற நிலைமை உருவாகலாம் எனவும் எதிர்வு கூறியுள்ளனர்.

ச்ர்வதேச தொலைத் தொடர்பு அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள் தொடர்பாக ஊடகத்துறை அமைச்சு மற்றும் பாராளுமன்ற செய்தியாளர் சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த பயிற்சிப்பட்டறையில் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர்.லோகன்டாக நேற்று முன்தினம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சனத்தொகையில் 33வீதமானவர்கள் வானொலிச் செய்திகளைக் கேட்கின்றனர்.39 வீதமானவர்கள் டிஜிற்றல் தொழில்நுட்பங்களூடாக செய்திகளை அறிந்து கொள்கின்றனர்.

உலகின் மொத்த சனத்தொகையான 7.395 பில்லியன் சனத்தொகையில் 3.4119 பில்லியன் மக்கள் இனரநெற் வசதிகளைக் கொண்டுள்ளனர்.2.307 பில்லியன் மக்கள் கையடக்கத் தொலைபேசி இணைப்பைக் கொண்டுள்ளனர்.2.307 பில்லியன் மக்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துகின்றனர்.

இலங்கையை எடுத்துக் கொண்டால் 20.3 மில்லியன சனத்தொகையில் 4.79 மில்லியன் மக்கள் இன்ரநெற் இணைப்பைக் கொண்டுள்ளனர்.2.8 மில்லியன் மக்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர்.

உலகளவிலான இன்ரநெற் மற்றும் சமூக ஊடகங்களின் பயன்பாட்டுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் குறைவாகவே உள்ளது.இது இலங்கையில் அச்சு ஊடகங்கள் நீண்டகாலம் நிலைத்திருப்பதற்கான அறிகுறியாக அமைகின்றது என்று தெரிவித்தார்.

இதேவேளை ஊடகத்துறை அமைச்சர் கஜந்த கருணாதிலக ஊடகங்களும் பாராளுமன்ற விவாதங்களும் எனும் கருப்பொருளில் கருத்துத் தெரிவிக்கையில்,

பாராளுமன்றில் இடம்பெறும் விவாதங்களில் இருந்து பயனுள்ள வகையில் ஒருவர் கேட்கவும் பார்க்கவும் முடியாதுள்ளது. அத்துடன் ஊடகங்களும் உரிய முக்கியத்துவம் கொடுப்பதில் மென்மைப்போக்கும் காணப்படுகிறது.எனக்கு ஞாபகமிருக்கிறது சில காலங்களுக்கு முன்னர் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நிறைய தகவல்களுடன் நலல தொரு உரையை பாராளுமன்றில் ஆற்றியிருந்தார். நான் அவரை இதற்காக வாழ்த்தியபோது அந்த பாராளுமன்ற உறுப்பினர் இந்த விடயம் ஊடகங்களில் இடம்பிடிக்காது.அர்த்தமின்றி குழறுபவர்களின் உரைகளுக்குத்தான் ஊடகங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன என்று தெரிவித்தார்.

அத்துடன் இந்த மாதம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து ஊடகவியலாளர்களைச் சந்திக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.(3)

# செந்தில் தொண்டமானுக்கு பிடியாணை



ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானுக்கு எதிராக ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு அமைச்சர் பழனி திகாம்பரத்தின் வாகனத்தை ஹற்றன் கினிகத்தேனை பகுதியில் வழிமறித்து இடையூறு விளைவித்தமை தொடர்பாக செந்தில் தொண்டமானுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்படி இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றபோது அமைச்சர் செந்தில் தொண்டமான் சுகயீனம் காரணமாக நீதிமன்றில் சமூகமளிக்கவில்லை என்று அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி எஸ்.ராம்மூர்த்தி தெரிவித்ததோடு, அதற்கான மருத்துவ அறிக்கையையும் சமர்ப்பித்தார்.

எனினும் அந்த மருத்துவ அறிக்கையை நிராகரித்த ஹற்றன் நீதவான் நீதிமன்ற நீதவான் பிரசாத் லியனகே, இந்த வழக்கு விசாரணைகளின் போது செந்தில் தொண்டமான் முன்னிலையாக தவறியதால் அவரை கைது செய்து முன்னிலைப்படுத்துமாறு பிடியாணையை பிறப்பித்து உத்தரவிட்டார்.

இதற்கமைய எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதிவரை இந்த வழக்கு மீதான விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் செந்தில் தொண்டமான் உட்பட ஊவா மற்றும் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான எம்.ராம், எஸ்.சக்திவேல், எம்.ரமேஸ், எம்.உதயகுமார் ஆகியோரும் இந்த முறைப்பாட்டில் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ)

# செய்தித்துளிகள்

## பண்டாரகம பகுதியில் விபத்து! மூன்று சிறுவர்கள் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பண்டாரகம பகுதியில் நேற்று முன்தினம் மாலை மூன்று சிறுவர்கள் பலியாகினர்.

பண்டாரகம- கெஸ்பேவ வீதியின் வெல்மில்ல என்ற இடத்தில் டிப்பர் வாகனம் ஒன்றும் ஆட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக் குள்ளானபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

பலியானவர்களில் இரண்டு சிறுவர்களும் ஒரு சிறுமியும் அடங்குகின்றனர். (இ)

## நான்காவது மாடியிலிருந்து விழுந்து இளைஞன் மரணம்

கிரான்பாஸ் பகுதியில் நேற்று முன்தினம் மாலை நான்காம் மாடியில் இருந்து விழுந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த 24 வயதான ஒருவரே இவ்வாறு பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை கிரானபாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## பேருந்து மோதியதில் பழக்கடைக்குச் சேதம்

நுவரெலியாவிலிருந்து ஹற்றன் நோக்கி பயணித்த சொகுசுபேருந்து ஒன்று ஹற்றன்பேருந்து தரிப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள பழக்கடை ஒன்றின் மீது மோதுண்டதில் பழக்கடை சேதமடைந்துள்ளது.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த சொகுசு பேருந்து நுவரெலியாவிலிருந்து புறப்பட்டு ஹற்றன்நோக்கி செனறு, பயணிகளை ஹற்றன் பேருந்து நிலையத்தில் இறக்கி விட்டதன் பின் வழமையாக பேருந்து தரிக்கும் இடத்திற்கு செலுத்தும் போது, முன்னோக்கி சென்ற பேருந்து தடுப்புக்கட்டை செயலிழந்ததன் காரணமாக குறித்த பழக்கடை மீது மோதியுள்ளது. (இ)

## வாகனேரியில் துப்பாக்கிச்சூடு பெண்ணொருவர் படுகாயம்

மட்டக்களப்பு, வாகனேரிப் பகுதியில் இடம்பெற்ற கட்டுத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில், வாகனேரியைச் சேர்ந்த 19 வயதான என். றேணுகா என்பவரே காயமடைந்துள்ளார்.

சம்பவத்தில், காயமடைந்த பெண் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## லொறி விபத்து-ஒருவர் படுகாயம்

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மஸ்கெலியா - அட்டன் பிரதான வீதியில் மஸ்கெலியாவிலிருந்து அட்டன் நோக்கி சென்ற சிறிய ரக லொறி ஒன்று வீதியை விட்டு விலகி நோர்வூட் - ரொக்வூட் பகுதியில் 20 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

எதிரே வந்த வாகனத்திற்கு இடமளிக்க சென்ற போதே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ)

## ஈரான்-இலங்கை உறவை மேலும் வலுப்படுத்த திட்டம்

(கொழும்பு)

ஈரானின் உயர்மட்ட பிரதிநிதிக் குழுவிற்கு தலைமை தாங்கி கடந்த வாரம் இலங்கை வந்திருந்த ஈரான் எரிசக்தி அமைச்சர் ஹாமித் ஷித்ஷியான் ஜனாதிபதி மைத்திரபால சிறிசேன உட்பட உயர்மட்ட தலைவர்கள் பலரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதன்போது, இருதரப்பும் பரஸ்பரம் ஆர்வம் கொண்ட பொதுவான விடயங்கள் குறித்து ஆராய்ந்ததுடன், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த முயற்சிப்பதாக ஈரான் உறுதியளித்துள்ளது. (இ)

## மாணிக்ககங்கையில் சுறா ஆச்சரியத்தில் பொது மக்கள்

(கொழும்பு)

உலகின் மிகவும் மோசமான சுறா ஒன்று மாணிக்ககங்கையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 3 அடி நீளமான இந்த சுறாவானது எவ்வாறு மாணிக்ககங்கைக்கு வந்தது என்று தெரியவில்லை.

மேலும் கடல் நீரில் மட்டும் வாழும் இந்த சுறா எவ்வாறு ஆற்று நீரில் வாழ்கின்றது என்று பல கேள்விகள் இருப்பினும், மாணிக்ககங்கையில் வாழ்வது உண்மை. (இ)

# தமிழ் சினிமா வரலாறு

**110**

## ஏவி.எம். பொன்விழா ஆண்டில் "மின்சாரக் கனவு" சாதனை

**2 கதாநாயகர்கள்**

இந்தப் படத்தின் 2 கதாநாயகர்களாக அரவிந்தசாமியும் பிரபுதேவாவும் நடித்தனர். கதாநாயகி- பிரபல இந்தி நடிகை கஜோல்.

புகழ்பெற்ற ஒளிப்பதிவாளர் ராஜீவ்மேனன். டைரக்ஷன் பொறுப்பை ஏற்றார். அவருடைய உதவியாளர் ரவி கே.சந்திரன், ஒளிப்பதிவாளராக உயர்ந்தார்.

வசனத்தை வி.வி.குகநாதன் எழுத, ஏ.ஆர்.ரகுமான் இசை அமைத்தார். ஏவி.எம். படத்துக்கு அவர் இசை அமைப்பது அதுவே முதல் தடவை.

ஏவி.எம்.சரவணனின் மகன் எம்.எஸ்.குகன், இந்தப் படத்தின் தயாரிப்பில் தீவிர பங்கெடுத்துக் கொண்டார்.

மினசாரக் கனவு 1997 பொங்கல் தினத்தன்று வெளியாகியது. 218 நாட்கள் ஓடி மகத்தான வெற்றி பெற்றது.

**4 தேசிய விருதுகள்**

1997 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் 4 தேசிய விருதுகளை மின்சாரக் கனவு அள்ளி வந்தது.

விருது பெற்றவர்கள்:-


1.எஸ்.பி.பாலசுப்பிரமணியம் (சிறந்த பின்னணி பாடகர்)

2. சித்ரா (சிறந்த பின்னணிப் பாடகி)

3.ஏ.ஆர்.ரகுமான் (சிறந்த இசை அமைப்பாளர்)

4. பிரபுதேவா (சிறந்த நடன டைரக்டர்)

மின்சாரக்கனவு, இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் டப் செய்யப்பட்டு சக்கைப் போடு போட்டது.



ஏவி.எம். தயாரித்த பேரழகன் படத்தில் சூர்யா-ஜோதிகா



ஏவி.எம். தயாரித்த ஜெமினி படத்தில் விக்ரம், கிரண்

**ஜெமினி**

21 ஆம் நூற்றாண்டு பிறந்தது. டைரக்ஷன், நடிப்பு, இசை முதலான அனைத்து துறைகளிலும் இளைஞர்கள் புகுந்து முத்திரை பதித்தனர். நடிப்பில் விக்ரம் விஸ்வரூபம் எடுத்தார்.

விக்ரமை வைத்து படம் எடுக்க சரவணன் தீர்மானித்தார். சேது படத்தில் மனநோயாளியாக- மாறுபட்ட வேடத்தில் விக்ரம் பிரமாதமாக நடித்து, திரை உலகில் தனக்கென தனி பாணியை உருவாக்கிக்கொண்டிருந்தார். அவரை மாறுபட்ட வேடத்தில் நடிக்க வைக்க ஒரு கதையை உருவாக்கினார்கள்.

படத்துக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்தார்கள். பலரும் பலவிதமான யோசனைகளைத் தெரிவிக்க, கடைசியில் ஜெமினி என்ற பெயர் சரவணனுக்குப் பிடித்துப் போயிற்று.

ஆயினும் ஜெமினி என்பது இன்னொரு புகழ்பெற்ற திரைப்பட நிறுவனத்தின் பெயராத, லால், அந்தப் பெயரை படத்துக்கு வைக்கலாமா என்ற கேள்வி எழுந்தது. இதுபற்றி ஜெமினி எஸ்.எஸ். வாசனின் மகனும், ஆனந்தவிகடன் ஆசிரியருமான எஸ்.பால சுப்பிரமணியனுக்கு சரவணன் கடிதம் எழுதினார். பால சுப்பிரமணியன், ஜெமினி என்று பெயர் சூட்ட முழு சம்மதம் தெரிவித்ததுடன், படத்தின் வெற்றிக்கு தன் ஆசியையும் வழங்கினார். ஜெமினியின் கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புக்களை சரண் ஏற்றார். இசை:- பரத்வாஜ்.

**விக்ரம் ஜோடியாக கிரண் நடித்தார்**

12.04.2004 அன்று வெளிவந்த ஜெமினி மிகப்பெரிய வெற்றிப் படமாக அமைந்தது. அதில் இடம்பெற்ற ஓ போடு என்ற பாடல் மூலை முடுக்கெல்லாம் எதிரொலித்தது.

ஜெமினி படத்துக்கு விநியோக உரிமை பெற்றவர்கள் பெரிய லாபமடைந்தனர். (தொடரும்)

# கேள்விக்குள்ளாகியுள்ள....

**(நேற்றைய கட்டுரையின் தொடர்ச்சி)**

...உயிலங்குளம், பாப்பாமோட்டை, மாந்தை பகுதிகளில் சண்டைகள் நடந்து கொண்டிருந்தபோது, அதிரடிப்படைப் பிரிவு -1 இற்குத் தலைமை தாங்கிய பிரிகேடியர் சாஜி கல்லகே சுகவீன முற்றதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதனால், அவசரமாக களமுனையிலிருந்து அகற்றப்பட்டார். அதற்குப் பின்னர்தான், அதிரடிப் படை- 1 என்ற பெயரில் செயற்பட்ட 58 ஆவது டிவிஷனுக்கு பிரிகேடியராக இருந்த சவேந்திர சில்வா தளபதியாக்கப் பட்டார்.

மருத்துவ சிகிச்சை முடிந்து திரும்பிய போதும் பிரிகேடியர் சாஜி கல்லகேயினால், தனது முன்னைய பதவியைப் பெற முடியவில்லை.

காரணம், மன்னார் களமுனையில், பிரிகேடியர் சவேந்திர சில்வாவின் தலைமையில் 58 ஆவது டிவிசன் கணிசமாக முன்னேறத் தொடங்கியிருந்தது.

இருவரும் ஒரே குழுவில் பயிற்சி பெற்றவர்கள். ஆனால் சாஜி கல்லகேயை விட சவேந்திர சில்வா ஒரு வயது இளையவர் என்றபோதும், இராணுவத்தில் இணைந்து கொண்டதன் அடிப்படையில், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா சற்று சேவை மூப்பு கொண்டவர்.

அதனாலும், மீண்டும் பிரிகேடியர் சாஜி கல்லகேயினால், அந்தப் பதவியைப்பெற முடியவில்லை. ஆனால், அவர் 58 ஆவது டிவிஷனின் துணைக் கட்டளை அதிகாரியாகவும், கொமாண்டோ படைப்பிரிவுகளை வழி நடத்தும் அதிகாரியாகவும், போர் முனையில் செயற்பட்டார்.

2009 பெப்ரவரி முதல் வாரம் விடுதலைப் புலிகள் புதுக்குடியிருப்பு பகுதியில் நடத்திய ஒரு பாரிய ஊடறுப்புத் தாக்குதலையடுத்து, 59 ஆவது டிவிஷன் நிலைகுலைந்து பின் வாங்கியது.

அந்தக் கட்டத்தில், நிலைகளை மீளமைத்து, அந்த படைப்பிரிவை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு, பிரிகேடியர் சாஜி கல்லகேயிடமே ஒப்படைப்பட்டது.

போர் முடிவுக்கு வந்த பின்னர், 59 ஆவது டிவிசனின் தளபதியாக நியமிக்கப்பட்டதுடன், மேஜர் ஜெனரலாகவும் பதவி உயர்த்தப்பட்ட அவர், பின்னர், புதிதாக உருவாக்கப்பட்ட இராணுவத்தின் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு தளபதியாக்கப்பட்டார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதையடுத்து, சில மாதங்களுக்கு முன்னர் இந்தப் படைப்பிரிவு கலைக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் தளபதியாகவும், பின்னர் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும் மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே பதவி வகித்திருந்தார்.

இவர் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவுடன், பிரித்தானியா சென்றிருந்த போது, அங்கு போர்க்குற்ற வழக்கு ஒன்று இவருக்கு எதிராக தொடுக்கப்பட்டது.

கோத்தபாய ராஜபக்ஷவுடன் கஜபா படைப்பிரிவில் இணைந்து செயற்பட்டவர் என்ற வகையில், அவரது நம்பிக்கையைப் பெற்றிருந்த சாஜி கல்லகே, ஜனாதிபதி பாதுகாப்புப் படைப்பிரிவிலும் இருந்தவர் என்ற வகையில், தற்போதைய அரசாங்கத்தினால் அவருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே, உள்ளிட்ட இறுதிப்போரில் முக்கிய பங்காற்றிய இராணுவ அதிகாரிகள் பலரும், தற்போதைய அரசாங்கத்தினால் அதிக முக்கியத்துவமற்ற பதவிகளிலேயே அமர்த்தப்பட்டுள்ளனர்.

அது அவர்களைப் பெரிதும் பாதிக்கின்ற விடயமாக காணப்படுகிறது.

மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா போன்ற போரில் முக்கிய பங்காற்றிய அதிகாரிகள், ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் பிரிகேடியராக இருந்த போது டிவிசன்களுக்குத் தலைமை தாங்கிய அதிகாரிகளாக இருந்தது போன்றுதான் இப்போதும் நியமிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மீறல்களுக்கு சில அதிகாரிகளைப் பொறுப்புக்கூற வைக்க அரசாங்கம் முனைகிறது என்ற தகவல்களும் வெளியாகியிருந்தன.

அதாவது ஒட்டுமொத்த இராணுவத்தின் பெயரையும் போர்க்குற்றச்சாட்டில் இருந்து பாதுகாக்க, சில படையினர் மற்றும் அதிகாரிகளை அவற்றுக்குப் பொறுப்பேற்க வைக்க அரசாங்கம் முனைகிறது என்ற கருத்தும் வலுவாக இருக்கிறது.

இப்படியானதொரு சூழலில்தான், மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேயின் விவகாரம் தீவிரம் பெற்றிருக்கிறது.

இராணுவத்தின் ஒரு பகுதியினர் மத்தியில் இருக்கின்ற அதிருப்திகள் அரசாங்கத்தை அச்சம் கொள்ள வைக்கும் அளவில் இருக்கின்றது.

அதாவது போர்முனையில் முக்கிய பங்காற்றிய அதிகாரிகள் தாம் ஓரம் கட்டப்பட்ட போது பொறுத்துக் கொண்டார்கள். ஆனால், குற்றச்சாட்டுகளுக்கும் பொறுப்பாக்கப் படுவதை சாதாரணமாக பொறுத்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது என்பதையே இந்த விவகாரம் எடுத்துக் காட்டியிருக்கிறது.

பொறுப்புக்கூறல் விவகாரத்தில், அரசாங்கம் சிக்கலானதொரு நிலையை விரைவிலேயே எதிர்கொள்ளும் என்பதைத்தான் இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டியிருக்கிறது,

அதேவேளை, இந்த விடயம் தொடர்பாக கடுமையான நடவடிக்கையில் இறங்கினால், அது நாட்டைப் பாதுகாத்த படை அதிகாரிகள் பழி வாங்கப்படுவதாக பிரசாரத்தை சிங்களத் தேசியவாத சக்திகள் தீவிரப்படுத்தும்.

அவ்வாறு கடும் நடவடிக்கை எடுக்கவில்லையாயின், இராணுவத்தில் ஒழுக்கக்கேடு அதிகமாவதுடன் அது இராணுவத்தின் பெயரை மேலும் நாசப்படுத்தி விடும்.

எனவே இந்த விவகாரம் அரசாங்கத்துக்கும் இராணுவத்துக்கும் முடிவுகளை எடுப்பதில் சிக்கலானதொரு சூழலை ஏற்படுத்தியிருக்கிறது என்றே கூறலாம்.

**சுபத்ரா**

(முற்றும்)

தமிழீழத்தை பேரினவாதிகள் வெள்ளித் தட்டத்தில் வைத்துத் தரப்போவதில்லை.
-தந்தை செல்வா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர் செங்கை ஆழியான்

ஈழத்தின் தலை சிறந்த படைப்பாளி செங்கை ஆழியானின் மறைவு தமிழ் கூறும் நல்லுலகுக்கு பேரிழப்பாகும்.

ஈழத்து ஆக்க இலக்கியப் படைப்பில் செங்கை ஆழியானுக்கு நிகர் எவரும் இல்லை என்று கூறும் அளவில் அவரின் அத்தனை எழுத்துருவாக்கங்களும் உன்னத படைப்புக்களாகும்.

செங்கை ஆழியான் எழுதிய நாவல்கள், சிறுகதைகள், வரலாற்று ஆக்கங்கள் அத்தனையும் மக்களால் விரும்பி வாசிக்கப்பட்டன.

ஒரு எழுத்தாளன் தான் சார்ந்த எழுத்துத்துறையில் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு நல்லதொரு உதாரணம் செங்கை ஆழியான் என்றால் அதில் மிகைப்படுத்தல் எதுவும் இருக்க முடியாது.

1990-ம் ஆண்டு, யாழ்ப்பாணத்துக் கோட்டையில் அகப்பட்டிருந்த இராணுவத்தை மீட்பதற்கான போர் வெடித்த காலம். தீவுப்பகுதியிலிருந்து மக்கள் வெளியேறிய நேரம். யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்த இராணுவத்தை மீட்பதற்காக நடந்த போரியல் சம்பவத்தை அப்போது இருந்த முரசொலி பத்திரிகையில் செங்கை ஆழியான் அவர்கள் **முற்றுப்பெறாத யுத்தத்தின் முதல் 108 நாட்கள்** என்ற தலைப்பில் தொடர் கட்டுரையாக எழுதினார். அந்த எழுத்துருவாக்கம் மக்களுக்கு நிறைந்த தகவல்களைக் கொடுத்தது.

இதுபோல வலம்புரி பத்திரிகையில் அவர் தொடராக எழுதிய **ஈழராஜா எல்லாளன்** என்ற சரித்திரம் வாசகர்கள் வரலாற்றை அறியப் பேருதவியாக அமைந்தது.

இதுபோல செங்கை ஆழியான் அவர்கள் நூற்றுக் கணக்கான சிறுகதைகள், நாவல்கள், சரித்திர நூல்கள் போன்றவற்றை எழுதி ஈழத் தமிழர்களின் இலக்கியப் படைப்புக்குப் பெரும் பங்காற்றினார்.

சுருங்கக்கூறின் ஈழத்தமிழர்களின் வாசிப்புப் பழக்கம் இடையறாமல் தொடர்வதற்கு செங்கை ஆழியானின் எழுத்தாக்கங்கள் மூல காரணமாக இருந்தன என்ற உண்மையை தமிழினம் என்றும் மறந்து விடாது.

அரச பதவியில் பிரதேச செயலர், மேலதிக அரச அதிபர், பல்கலைக்கழகப் பதிவாளர், யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் என பல தளங்களில் தனது நிர்வாகத் திறமையை வெளிப்படுத்திய செங்கை ஆழியான் எங்கள் மண்ணின் மிகச் சிறந்த புவியியல் ஆசான் என்ற பெருமைக்குரியவர்.

செங்கை ஆழியான் கலாநிதி குணராசா எழுதிய புவியியல் பாடப் புத்தகங்களால்தான் எங்கள் மாணவர்கள் புவியியல் பாடத்தை விரும்பிப் படிக்கவும் அதில் சித்தியடையவும் முடிந்தது என்பது நிதர்சனமான உண்மை.

இதேபோல், தமிழ் மாணவர்கள் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சைகளில் சித்தியடைவதற்கும் கலாநிதி கந்தையா குணராசா எழுதிய பொது அறிவுப் புத்தகங்களும் அவரின் வழிகாட்டல் கற்பித்தல்களும் உதவின என்பது மறக்க முடியாத உண்மை.

இதேவேளை ஈழத்தமிழ் மண்ணின் பெருமைக்குரிய எழுத்தாளராக விளங்கிய செங்கை ஆழியான், ஈழத்தமிழர்கள் எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து வெளியிடுவதிலும் ஈழத்து எழுத்தாளர்களை, கலைஞர்களைக் கௌரவிப்பதிலும் முன்னின்று பாடுபட்டவர் என்பதற்குள் அவரின் உயர்ந்த எண்ணப்பாடு உணரப்படக்கூடியது.

தன் வாழ்நாள் முழுவதிலும் எழுத்துத்துறையில் தன்னை அர்ப்பணித்து ஓய்வு உறக்கமின்றி காலத்தின் சூழலுக்கேற்ப ஆக்க இலக்கியப் படைப்புக்களைத் தந்த செங்கை ஆழியானுக்கு தமிழ் அன்னை தனது இதய அஞ்சலியைச் செலுத்தி விடை கொடுக்கின்றாள்.

அந்த விடைகொடுப்பில் ஈழத்து எழுத்தாக்கப் படைப்பில் செங்கை ஆழியானின் சரித்திரம் பதிவாகிக் கொள்கிறது. அவரின் படைப்பிலக்கியங்கள் தொடர்ந்து ஆய்வுப்பரப்பில் பரிணமிக்கப் போவது உறுதி.

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை, சங்கரத்தை, பிட்டியம்பதி வீரபத்திரர் சுவாமி சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 13-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 22-ம் திகதி செவ்வாய்கிழமை சப்பறத்திருவிழாவும் 23-ம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், 24-ம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (இ-17)

+++++++

யாழ்ப்பாணம்-வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகை சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தின் மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 05-ம் திகதி முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 22-ம் திகதி செவ்வாய்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 23-ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும்நடைபெறும். (இ-5)

## பாற்குட அபிஷேகமும் சிவராத்திரி விழாவும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஸ்ரீ சாந்தி லிங்கேஸ்வரர் திருக்கோவில் பாற்குட அபிஷேகமும் மஹா சிவராத்திரி விழாவும் எதிர்வரும் 07-ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமணிய கோட்டத்தில் இருந்து முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள பாற்குட பவனியானது ஸ்ரீ சாந்தி லிங்கேஸ்வரர் திருக்கோவிலைச் சென்றடைந்த பின்னரே பாலாபிஷேகம் இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து இரவு சிவராத்திரி பூஜைகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (இ-5)

# மகிந்த குற்றவாளியாக இருந்தால் சட்டப்படி அவருக்கும் தண்டனை!

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் மரணம் கொலையென நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ள நிலையில் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் சட்டத்தின்படி தண்டிக்கப்படுவர். இது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் பொருந்தும் என அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ரக்பி விளையாட்டு வீரர் தாஜுடீன் மரணம் தொடர்பில முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் கைதுசெய்து பழி தீர்க்கப் போவதாக முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ள நிலையில் அது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

ரக்பி வீரர் தாஜுடீன் மரணம் கொலை என்பதை நீதிமன்றம் நிரூபித்துள்ளது. இதையே நாம் கடந்த காலத்தில் இருந்து தெரிவித்து வந்தோம். இப்போது அந்த காரணிகள் உண்மையாகியுள்ளன. விளையாட்டு வீரரின் இந்த மரணம் எமது நாட்டிற்கு மிகப்பெரிய இழப்பாகும். கடந்த காலத்தில் இவ்வாறு பல நல்ல வீரர்களை நாம் இழக்க நேர்ந்தது. வீரர்களின புறக்கணிப்பு, அச்சுறுத்தல், கொலை என மிகவும் மோசமான முறையில் அடக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆகவே இவற்றை தடுக்கும் வகையில் செயற்படுவதுடன் மனித உரிமைகளை மட்டும் அல்லாது உயிர்களையும் பாதுகாக்க வேண்டியதும் அரசாங்கத்தின் கடமையாகும். அதேபோல் நடந்த மோசமான சம்பவங்களுக்கு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் பெற்றுத்தர வேண்டும். இந்த நல்லாட்சி அரசாங்கம் அந்த விடயத்தில் மிகச்சரியாக செயற்பட்டு வருகின்றது.

மேலும் இந்த சம்பவத்தில மகிந்த குடும்பத்தினரை கைது செய்யவுள்ளதாக இது வரையில் அரசாங்கம் தெரிவிக்கவில்லை. ஆனால் அவரே இது தொடர்பில் எனது குடும்பம் கைதுசெய்யப்படும் எனவும் அதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாகவும கூறுகின்றார். இப்போது ரகர் வீரர் தாஜுடீன் மரணத்தில் தனது மகன் நாமல் ராஜபக்ஷ தொடர்புபட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி வருகின்றன எனவும்.

அந்த சம்பவத்தில் சந்தேகத்தின் பெயரில் நாமல் ராஜபக்ஷவை கைதுசெய்யப் போவதாகவும் தனது மனைவி ஷிரந்தி ராஜபக்ஷவை கைது செய்யப்போவதாகவும் மகிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்.

இவர்கள் மீது தனிப்பட்ட கோபமோ பழி தீர்த்துக்கொள்ளும் நோக்கமோ எமக்கு இல்லை. யார்மீதும் பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி பழிதீர்க்கவேண்டிய அவசியம் எமக்கு இல்லை. இப்போது ரகர் வீரர் தாஜுடீன் மரணம் தொடர்பில் நாமல் ராஜபக்ஷவை கைது செய்வார்கள். அதன் பின்னர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்வார்கள். பின்னர் பஷில ராஜபக்ஷவை கைதுசெய்வார்கள். இறுதியில் தன்னை கைதுசெய்வார்கள் என்று அவர் கூறுவது வெறும் அனுதாபம் மட்டுமேயாகும்.

மக்கள் மத்தியில் தன்னை நியாயப்படுத்த இவ்வாறு நாடகம் போடுகின்றார். எவ்வாறு இருப்பினும் குற்றம் நடந்துள்ளது. அந்த குற்றத்தை யார் செய்தார் என்ற உண்மைகளை கண்டறிய வேண்டும் ரகர் வீரர் தாஜுடீன் கொலையில் யார் தொடர்புபட்டிருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு சட்டரீதியில் தண்டிக்கப்படுவர். இது மகிந்தவாக இருந்தாலும் அல்லது இந்த அரசாங்கத்தில யாராக இருந்தாலும் சட்டம் செயற்படும் என சம்பிக்க குறிப்பிட்டார். (செ-12)

## மின்தடை பற்றிய செய்தி

(யாழ்ப்பாணம்)

நாளை 03.03.2016 வியாழக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5மணி வரை யாழ்.பிரதேசத்தில் அம்பலவாணர் வீதி, உடுவில் பிரதேச செயலக வீதி, சபாபதிப்பிள்ளை வீதி, உரும்பிராய்ப் பிரதேசம் முழுவதும் ஆகிய இடங்களிலும், கிளிநொச்சிப் பிரதேசத்தில் நாவற்காடு, கேப்பாப்புலவு, வற்றாப்பளை, முல்லைத்தீவு விமானப்படை 01,02 மற்றும் முல்லைத்தீவு 59-வது படைப் பிரிவு (14ESR -01, 02), SF HQ வற்றாப்பளை ஆகிய இடங்களிலும், வவுனியாப் பிரதேசத்தில் சம்பல்தோட்டம் கிராமம் ஆகிய இடத்திலும், மன்னார் பிரதேசத்தில் பெரியமடு, சன்னார், ஈச்சலவக்கை, சன்னார் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும்,

நாளை மறுதினம் 04.03.2016 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்பிரதேசத்தில் தூதாவளை ஆகிய பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது. (செ)

## கடல்நீரில் மூழ்கி அருட்தந்தை மரணம்

(திருகோணமலை)

திருகோணமலை, நகர சபைக்கு அருகிலுள்ள கடற்கரையில் நீராடச் சென்ற அருட தந்தை ஒருவர் நீரில் மூழ்கி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர், லியோ மார்ங்கா ஆச்சிரமத்தின் இயக்குநரான பண்டாரவளை - இல. 121/01 புனித தோமையார் வீதியைச் சேர்ந்த அருட்தந்தை சந்தியாப்பிள்ளை கீத பொன்கலன் (69 வயது) என்பராவார்.

அவரது பூதவுடல் திருகோணமலை பொதுவைத்திய சாலை பிரேத அறையில்வைக்கப்பட்டுள்ளதுடன், சட்ட வைத்திய பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் பொலிஸார தெரிவித்தனர். (செ-12)

## கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தின் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தின் திறப்புவிழா நாளை மறுதினம் 4-ம் திகதி முற்பகல் 9மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை யாழ் மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ-5)

## புகைப்படக் கண்காட்சி ஹற்றனில்

(கொழும்புத்துறை)

பல்சமய கருத்தாடல்நிலையத்தின் ஏற்பாட்டில் புகைப்படக் கண்காட்சி இம்மாதம் 04,05,06-ம் திகதிகளில் ஹற்றன் கிறீன்கில் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொழும்புத்துறை, நல்லூர், நாயன்மார்கட்டு, நாவாந்துறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 45 இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் இளையவர்களின் புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

நமது கிராமம் நமது மக்கள் என்ற தலைப்பில் நடைபெறும் மேற்படி கண்காட்சியில் அநுராதபுரம், பொலநறுவை, மட்டக்களப்பு, யாட்டஸ்கலிய உட்பட இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து சர்வ சமயத்தையும் சேர்ந்த இளம் புகைப்படக் கலைஞர்களின் புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இக்கண்காட்சிகள் அடுத்த கட்டமாக ஒவ்வொரு பிரதேசங்களிலும் மேற்படி கண்காட்சி ஏற்பாடு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### எல்லாம் கடவுள் செயல்



✦ புதற்பெருமை கொண்டவன் கடவுளின் அருளைப் பெற முடியாது. பணிவு உள்ளவனையே கடவுள் விரும்புகிறார்.

✦ மனிதப்பிறவி மகத்தானது. இதில் கடவுளை அறிய முயலாவிட்டால், மனித வாழ்வு அர்த்தமில்லாததாகி விடும்.

✦ மனிதனுக்கு கர்வம் ஏற்படுவதாக இருந்தால், “நான் கடவுளின் தொண்டன்” அல்லது “குழந்தை” என்ற எண்ணத்தால் உண்டாகட்டும்.

✦ கடவுளின் கையில் இருக்கும் கருவியாக மாறி விடுங்கள். அப்போது நீங்கள் செய்யும் செயல் அனைத்தும் கடவுளின் செயலாகவே ஆகி விடும்.

# கரவெட்டி பிரதேச செயலக பெண்களுக்கான கிரிக்கெட் தொடர்

## பிரதீபா,சாயினி அதிரடியில் மைக்கல் சம்பியன்





கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான பெண்களுக்கான கிரிக்கெட் தொடர் ஞாயிற்றுக்கிழமை மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இந்த தொடரில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் கம்பர் மலையங்கம்பன்ஸ் அணியை வெற்றிபெற்று வதிரி டயமன்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது. இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து மாலு சந்தி மைக்கல் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி சாயினி, பிரதீபா ஆகியோரின் அதிரடி ஆட்டத்தின் மூலம் 5 ஓவர்களில் 88 ஓட்டங்களை பெற்றது.

இதில் சாயினி 50, பிரதீபா 31 ஓட்டங்களை பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய அல்வாய் மனோகரா அணி 30 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.மைக்கல் அணியின் பந்துவீச்சு சார்பாக சாயினி 3, பிரியவர்ணா, தர்மினி தலா ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இறுதியில் 59 ஓட்டங்களினால் மைக்கல் அணி வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது. இறுதிப்போட்டியில்வதிரியமன்ஸ்அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 5 ஓவர்களில் 83 ஓட்டங்களை பெற்றது. இதில் 14 பந்துகளில் சாயினி 51,பிரதீபா 30 ஓட்டங்களை பெற்றனர். பதிலுக்கு ஆடிய வதிரி டயமன்ஸ் அணி 36 ஓட்டங்களை பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது. மைக்கல் அணி பந்துவீச்சு சார்பாக சாயினி,பிரதீபா தலா 2 தர்மினி ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இறுதியில் 48 ஓட்டங்களினால் மாலு சந்தி மைக்கல் அணி வெற்றி பெற்று கரவெட்டி பிரதேச செயலக சம்பியனாகியது. (க)

## எல்லே போட்டி

கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான எல்லே சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க)

## முல்லை. மாவட்ட காற்பந்து முடிவுகள்

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலக காற்பந்து போட்டிகள் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் சென்ஜூட் அணியினரை எதிர்த்து யங்கஸ் அணி மோதியது. இந்தப் போட்டியில் சென்ஜூட் அணி 6-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் உடுப்புக்குளம் அலைஓசை அணியை எதிர்த்து செந்தமிழ் அணி 1-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# புத்தூர் வளர்மதி வி.கழக காற்பந்து சுற்றுத் தொடர்


யங்கென்றீஸ் வெற்றி



புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்துகின்ற மாபெரும் காற்பந்தாட்ட போட்டியின் அரை இறுதியில் கொலின்ஸ் அணியினை எதிர்த்து யங்கென்றீஸ் அணியினர் மோதினர். போட்டியில் யங்கென்றீஸ் அணியினர் 7-1 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

போட்டியில் மிகவும் சிறப்பாக விளையாடிய ஞானம், தனேஸ், மதுசன் ஆகியோர் ஆளுக்கு இரண்டு கோல்கள் வீதம் போட்டனர். அத்துடன் மகீபன் 1 கோலையும் போட்டு யங்கென்றீஸ் அணியின் வெற்றிக்கு உதவினர். (க)

# இங்கிலாந்து தேசிய கைப்பந்து அணியில் வடமராட்சி சிறுவன்



வல்வெட்டித்துறையைச் சேர்ந்த யோகச்சந்திரபோஸ் கீதன் 16 வயதிற்குட்பட்ட இங்கிலாந்தின் தேசியமட்ட (Handball) அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவில் லண்டன் மிச்சம் பகுதியில் வாழ்ந்து வரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த யோகச்சந்திரபோஸ் சுபாஷினி தம்பதிகளின் மகன் சிறுவயது முதல் விளையாட்டின் மீது தீவிர பற்றுக்கொண்ட கீதன் தனது முயற்சி மற்றும் தனது பெற்றோரின் ஆதரவுடன் Hand ball பயிற்சிகளில் ஈடுபட்டு இன்று தேசிய அணியில் இடம்பிடித்துள்ளார்.

Handball விளையாட்டு ஐரோப்பிய நாடுகளில் மிகவும் பிரபலமான விளையாட்டாகும்.நோர்வே.சுவீடன். டென்மார்க் .பின்லாந்து போன்ற நாடுகளில் உதைபந்தாட்ட த்தை விட பிரபலமான விளை யாட்டாக Handball விளங்கு கின்றது. (க)





பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டுவிழாவின் வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் அண்மையில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றபோது...

## குடும்பஸ்தர் குத்...

யாழ்ப்பாணம் கோப்பாயைச் சேர்ந்த இரத்தினம் மணிவண்ணன் என்பவரைக் கொலை செய்த வழக்கிலேயே இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தண்டப் புணம் செலுத்தத் தவறினால் ஒரு வருடம் கடுழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். கோப்பாய் பகுதியில் கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி இரத்தினம் மணிவண்ணன் என்பவரை கொலை செய்ததாக கிருஸ்ணபிள்ளை பிரேமன், கி.ரவிக்குமார், கி.ஜெயக்குமார், கந்தசாமி குயிலன் ஆகியோருக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டு சட்டமா அதிபரினால் யாழ்ப்பாணம் மேல் மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் முதலாவது எதிரியாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்த கி.பிரேமன் என்பவருக்கே குறித்த தண்டனை வழங்கப்பட்டுள்ளதோடு அவருடைய சகோதரர்களான 2ஆம், 3ஆம், 4ஆம் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவ தினத்தன்று இ.மணிவண்ணனை முதலாம் எதிரி கத்தியால் நெஞ்சில் குத்தி கொலை செய்தார் என்பதற்கு வழக்குத் தொடுநர் சாட்சியங்களை முன் வைத்திருந்தார். அந்த சாட்சிகளில் ஒருவராகிய இறந்தவரின் மனைவி மணிவண்ணன் பிரமிளா நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார்.

வெளிநாடு செல்வதற்கான பொலிஸ் அறிக்கை பெறுவதற்காக சம்பவம் நடந்த தினத்தன்று காலையில் எனது கணவர் இரத்தினம் மணிவண்ணன் பொலிஸ் நிலையம் சென்றிருந்தார். அப்போது எதிர் வீட்டுக்காரருடன் வாய்ச் சண்டை நடந்தது. சண்டை நடந்து கொண்டிருந்த நேரம் மதியம் 12 மணிபோல எனது கணவன் பொலிஸ் நிலையத்தில் இருந்து திரும்பி வந்தார். அப்போது, முதலாம் எதிரி எனது கணவரை கத்தியால் அவருடைய நெஞ்சில் குத்தினார். முதல் குத்து நெஞ்சின் வலது பக்கத்தில் விழுந்தது. அப்போது எனது கணவர் குனிந்தபோது, இரண்டாவது தடவையாக அவரை எதிரி முதுகில் கத்தியால் குத்திக் கொன்றார். அப்போது அவரைத் தடுப்பதற்காக நான் ஓடிச் சென்றபோது என்னையும் முதலாம் எதிரி கத்தியால் கையில் குத்தி காயப்படுத்தினார்.

அந்த நேரம் மற்ற எதிரிகள் மூன்று பேரும் கைகளில் வாள்களுடன் அந்த இடத்தில் நின்றிருந்தனர். ஆனாலும், அவர்களுடைய குடும்பத்தில் இருந்த பெண்கள், அவர்களுடன் இழுபறிபட்டு அவர்களிடம் இருந்த வாள்களைப் பறித்து எடுத்துவிட்டார்கள். அதனால் அந்த வாள்கள் குற்றச் செயலுக்குப் பயன்படுத்தப்படவில்லை என்று கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கத்தியை அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மருத்துவ பரிசோதனை நடத்திய மருத்துவர் சாட்சியமளிக்கையில், "இறந்தவரின் உடலில் மூன்று வெட்டுக்காயங்கள் காணப்பட்டன. அவற்றில் நெஞ்சில் குத்தியதால் ஏற்பட்ட காயம் பாரதூரமானது அது மரணத்தை ஏற்படுத்தக் கூடிய காயம்" என தெரிவித்தார்.

இந்த வழக்கில் இரண்டாம், மூன்றாம், நான்காம் எதிரிகளாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தவர்கள் சாட்சிக் கூண்டில் இருந்து சாட்சியமளித்தனர்.

"இறந்தவரைத் தாங்கள் கட்டிப் பிடிக்கவில்லை. எந்தக்குற்றச் செயலையும் நாங்கள் செய்யவில்லை" என தெரிவித்தனர். இந்த சாட்சியத்தின் பின்னர், அவர்களுடைய குற்றச் செயலின் செயற்கோர்வை மன்றினால் பரிசீலிக்கப்பட்டது.

அந்தப் பரிசீலனையில் இரண்டாம், மூன்றாம், நான்காம் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை வழக்குத் தொடுநர் சாட்சியங்களின் மூலம் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் எண்பிக்கவில்லை. எனவே, சந்தேகத்தின் பிரதிபலன் எதிரிகளைச் சென்றடைய வேண்டும் என்ற குற்றவியல் விதியின்படி, மணிவண்ணனின் இந்த எதிரிகள் மூவரும நேரடியாக ஈடுபட்டதற்கான சாட்சியங்கள் இல்லாத காரணத்தினால் அவர்களை விடுதலை செய்வதாக நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்து, அவர்களை விடுதலையாக்கினார்.

சாட்சிக்கூண்டில் ஏறிய முதலாம் எதிரி கிருஸ்ணபிள்ளை பிரேமன் சாட்சியமளிக்கையில் கொலைச் சம்பவத்தை ஒப்புக்கொண்டார்.

"இறந்தவர் எனது தாயாரைக் காலால் உதைத்தார். தாயார் கீழே விழுந்துவிட்டார். அதைக் கண்டதும் சமையலறைக்குள் ஓடிச் சென்று அவரை வெருட்டுவம் என்று கத்தியொன்றை எடுத்துக் கொண்டு வந்தேன். ஆனால் கத்தி குத்திவிட்டது. அவர் இறந்து போனார்" என பிரேமன் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

இதனையடுத்து இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்ததாவது:

இறந்தவராகிய இரத்தினம் மணிவண்ணனை முதலாம் எதிரி கத்தியால் குத்தி கொலை செய்தமை வழக்குத் தொடுநரின் சாட்சியங்களின் மூலம் எண்பிக்கப்பட்டுள்ளது. முதலாம் எதிரியும் கத்தியால் குத்தியதை ஒப்புக்கொண்டார்.

ஆனால் அவர் தவறுதலாகக் குத்திவிட்டேன் எனக் கூறுவதை ஏற்க முடியாது. ஏனெனில் இறந்தவருக்கு நெஞ்சில் ஒரு கத்திக்குத்து. முதுகிலும் கத்திக்குத்து இறந்தவரின் மனைவிக்கும் கையில் ஒரு கத்திக்குத்து என சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவைகள் எதிரியின் குற்ற வக்கிரத் தன்மையை நிரூபித்திருக்கின்றன. இருப்பினும் அங்கு சண்டை நடைபெற்றது என்பது மன்றினால் ஏற்றுக்கொள்ளப்படுவதால் கைமோசக் கொலைக் குற்றச்சாட்டில் முதலாம் எதிரி குற்றவாளி என கண்டு இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

சம்பவம் நடைபெற்றபோது, எதிரிக்கு 19 வயது. ஆனால் இறந்தவரின் மூன்று பிள்ளைகளில் ஒருவருக்கு பத்து வயது, மற்றவருக்கு ஐந்து வயது, மற்றுமொருவருக்கு மூன்று வயதாகும். இவற்றையும் நீதிமன்றம் கவனத்திற் கொள்கின்றது.

தீர்ப்பளிக்கும்போது, எதிரி மீதான கருணை நிலைப்பாட்டை மட்டும் மன்று கவனத்தில் எடுக்காமல், இறந்துபோன - பாதிக்கப்பட்டவரின் குடும்ப நிலைமை, இறந்தவரை, எதிரி, நெஞ்சில் குத்தியுள்ளமை, என்பவற்றையும் கவனத்தில் எடுத்து, எதிரிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றதுஎன தெரிவித்தார். (செ-9)

## வெலிக்கட 27...

சாலைக்குள் சென்று கைதிகளின் பெயர்களை அழைத்து அவர்களை தனித்தனியாக சுட்டுக் கொலை செய்துள்ளமை உறுதியாகியுள்ளதாகவும் முன்னணியினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த கொலை இடம்பெற்ற விதத்தை சிறைச்சாலைக்குள் அப்போதிருந்த சிறைக் கைதிகள் கூறுகின்ற போதிலும், அரசாங்கம இன்றுவரை அதற்கான நடவடிக்கைகளை எடுக்க தவறியுள்ளதாக முன்னணியின் தலைவர் உலபனே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கமும் குழுவொன்றை நியமித்து விசாரணைகளை நடத்தியுள்ள போதிலும், அதற்கான நடவடிக்கைகள் இன்றுவரை எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் குறித்து அனைத்து ஆதாரங்களும் இருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறும் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இந்த கொலை சம்பவம் அப்போதைய பாதுகாப்பு செயலாளரின் உத்தரவிற்கு அமையயே முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிறைக் கைதிகளே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாகவும், இது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-12)

## ஞானசார தேர...

மொன்றை, 2008ஆம் ஆண்டு தாக்கி சேதப்படுத்தியதற்காக கலகொட அத்தே ஞானசார தேரர் உட்பட 13 சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட மா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணையில் இருந்த நிலையில், 2014ஆம் ஆண்டு சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேல் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு சட்ட விரோதமானது என மேல்முறையீடு செய்த சட்ட மா அதிபர், சந்தேக நபர்களுக்கு தண்டனை வழங்க போதுமான ஆதாரங்கள் இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

சட்ட மா அதிபரின் வேண்டுகோளை கருத்திற்கொண்ட மேல் முறையீட்டு நீதிமன்றம், இந்த வழக்கை மீள விசாரிக்க தற்போது அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை வரும் 28ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், நாட்டில் பௌத்தர்களின் உரிமை பறிக்கப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

எத்தகைய இடையூறு வந்தாலும் பௌத்தர்களின் உரிமையை காக்க தொடர்ந்து தான போராடப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## பிள்ளைகளை...

யடுத்தே, பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைப்பதை தவிர்த்து வருகின்றனர்.

இந்த சிறுவனின் தந்தை நோய் காரணமான மரணமான நிலையில், அவர் எச்.ஐ.வி. தொற்றுக் காரணமாகவே உயிரிழந்தார் என அந்த பிரதேசம் முழுவதிலும் வதந்தி பரவியது.

இதனால் அச்சிறுவனுக்கு பாடசாலையில் அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து அவரது தாயார் போராடினார்.

இறுதியாக இந்த சிறுவனுக்கு எச்.ஐ.வி. தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டதன பின்னர், கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளால் சிறுவனை பாடசாலையில் சேர்க்க அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால் இந்தச் சிறுவன் தமது பிள்ளைகளுடன் இருப்பதை விரும்பாத பெற்றோர் தமது பிள்ளைகளை அந்தப் பாடசாலைக்கு அனுப்ப மறுக்கின்றனர் இதனால் மாணவர்கள் அற்ற நிலையில், அந்தப் பாடசாலை வெறிச்சோடி காணப்படுகிறது. புதன்கிழமை வரையில் தனது மகனை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என பாடசாலையின் அதிபர் தன்னிடம் தெரிவித்ததாக அந்த சிறுவனின் தாயார் தெரிவித்தார்.

பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இச்சம்பவம் குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக குழுவின் அதிகாரிகள் பாடசாலைக்கும், சிறுவனின் வீட்டுக்கும் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(செ-12)

## சர்வதேச நீதி...

யாழ்.மாவட்டத்திற்கான காணாமல் போனோரினை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அமர்வு நேற்றைய தினம் சாவகச்சேரி பிரதேச சபையில் நடைபெற்றது. இம்மவர்வின் முடிவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எமது ஆணைக்குழுவின் விசாரணைகள் மூன்று கட்டமாக நடைபெற்று வருகின்றது. முதலாவதாக வாய் மூல முறைப்பாடு பெறப்பட்டு வருகின்றது. அடுத்ததாக அந்த முறைப்பாடுகள் எழுத்து மூலமாக்கப்படுகின்றன. இந்த முறைப்பாடுகள் ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

எம்மால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு பெறப்படும் தகவல்களை கொண்டு, விசாரணைக்குழுவால் விசாரணை மேற்கொள்ளப்படும். இந்த விசாரணைக்குழு ஏற்கெனவே வடக்கில் தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. தற்போது மக்கள் வெறுமனே குற்றச்சாட்டுக்களை மாத்திரமே முன்வைத்துள்ளனர்.

இந்த குற்றச்சாட்டுக்கள் மாவட்டத்துக்கு மாவட்டம் மாறுபட்ட நிலையில் உள்ளன. இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழு யார் குற்றவாளிகள்? என்பது தொர்டர்பில் விசாரணை செய்து அறிக்கை ஒன்றினை எம்மிடம் சமர்ப்பிக்கும்.

எம்மிடம் சாட்சியங்களை வழங்கிய மக்கள் இராணுவ முகாம்கள் மற்றும் ஒட்டுக் குழுக்கள் தொடர்பில் நேரடியான, ஆதாரங்கள் மூலம் தகவல்களை வழங்கியுள்ளனர். இவை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளோம். மேலும் எம்முடைய ஆணைக்குழுவின் காலம் நீடிக்கப்பட்டது அரசாங்கத்தினது முடிவேயாகும்.

உள்ளகரீதியான விசாரணைகளின் மூலம் இதற்கு நீதியான தீர்வை காணமுடியும் என நம்புகிறேன்.

நாங்கள் எங்களுடைய அறிக்கையில் சர்வதேச நீதிபதிகள் வேண்டாம் என்றே கோரினோம். அவர்கள் எங்கள் நாட்டினை விசாரணை செய்து தீர்ப்பு கூறுவதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. வேண்டுமென்றால் வெளிநாட்டு அவதானிப்பாளர்கள், பொறியியலாளர்களை நாட்டிற்குள் அனுமதிக்க முடியும். மாறாக வெளிநாட்டு நீதிபதிகளை எமது நாட்டுக்குள் அழைத்து அவர்களை எமது நாடு தொடர்பில் தீர்ப்பு கூற அனுமதிக்க முடியாது என ஆணைக்குழுவின் தலைவர் பரணகம திட்டவட்டமாக தெரிவித்தார். இச்சந்திப்பில் ஏனைய ஆணையாளர்களும் உடனிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## காணாமல் போ...

எம்மிடம் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அந்த உறவினர்களின் சாட்சிய விசாரணை அறிக்கையை நாடாளுமன்றத்தில் கையளிப்பேன். அங்கு அதற்கான அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டு, மேலதிக நடவடிக்கைகளை அவ்வமைச்சு முன்னெடுக்கும் என்றார்.

இந்த அமைச்சு அரசாங்கத்தின் ஆலோசனையின் படியே உருவாக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ள பரணகம, இந்த அமைச்சு தொடர்பான மேலதிக தகவல்களை தற்போது கூற முடியாது என தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோரினை கண்டறிவதற்கு இதுவரை எத்தனையோ ஆணைக்குழுக்கள் வந்தும் அவர்களை கண்டுபிடிக்கவுமில்லை. அவர்கள் தொடர்பில் எந்த நடவடிக்கைகளும் எடுக்காமலேயே அனைத்து தரப்பினரும் இருந்து வருகின்றனர். இப்போது அமைச்சு ஒன்றினை உருவாக்கப்போவதாக கூறியுள்ளார்கள். இதுவும் காலத்தை இழுத்தடிப்பு செய்யும் ஒரு தந்திர நோக்கமே என காணாமல் போனோரின் உறவினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (செ-4)

## 5 அரசியல் கை...

உள்ள 15 அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 23 ஆம் திகதியில் இருந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

அதில் ஒரு கைதி கடந்த 27 ஆம் திகதி அனை ஸ்ரீத்து வழக்குகளிலும் இருந்து விடுதலை செய்யப்பட்டிருந்தார். ஏனைய 14 கைதிகளும்இன்றையதினம்9ஆவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்து ள்ளனர்.

இந்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சிவசுப்பிரமணியம் தில்லைராஜ், நடேஸ் குகநாதன், பற்குணசிங்கம் தயாபரன், பாலசுந்தரம் மனோகரன், மார்க்கண்டு நேவிநாதன் ஆகியோர் உடல்நிலை மிகவும் பாதிப்படைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தமக்கு சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்த்து உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள இவர்கள் தமக்கு பொதுமன்னிப்பு தேவையில்லை எனவும் பிணையில் அல்லது புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலைசெய்யுமாறு கோரி தமது போராட்டத்தை தொடர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

## ஊழல் மோசடி குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் புதிய செயலராக குணதாஸ

(கொழும்பு)

பாரிய ஊழல் மற்றும் மோசடி தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் புதிய செயலாளராக எச்.டப்ளியூ. குணதாஸ நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக அந்தப் பதவியில் இருந்த லெசில் டி சில்வா பதவி நீக்கப்பட்டுள்ளதாக கூறிய கடிதம் ஒன்று தனக்கு கிடைக்கப்பெற்றதாக நேற்று தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலாளர் பி.பீ அபேசுந்தரவின் கையெழுத்துடன் கூடிய கடிதம் கிடைத்துள்ளதாகவும், பதவி நீக்கத்துக்கான காரணம் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை எனவும் லெசில் டி சில்வா கூறியிருந்தார்.

இந்நிலையில் எச்.டப்ளியூ. குணதாஸ பாரிய ஊழல் மற்றும் மோசடி தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (செ-12)

## கச்சாய் இராணுவ...

பேரில் யுவதி ஒருவரும் உள்ளதோடு, அனைவரும் முப்பது வயதுக்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இருபத்து நான்கு பேருக்கும் என்ன நடந்தது என்று எமது பிள்ளைகள் மற்றும் கணவரை பிடித்து சென்ற இராணுவத்திடம் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி ஆணைக்குழுவினரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் யாழ்.மாவட்டத்திற்கான இறுதி அமர்வு நேற்றைய தினம் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி தகவல் வெளியிடப்பட்டுள்ளது. எனினும் இது குறித்து ஜனாதிபதி ஆணைக்குழுவினர் மௌனம் சாதித்ததனை மட்டும் காணமுடிந்தது.

1996ஆம் ஆண்டு யூலை மாதம் பத்தொன்பதாம் திகதி மறவன்புலோ மற்றும் கச்சாயில் மேற்கொண்ட இராணுவ சுற்றிவளைப்பில் இருநூறுக்கும் மேற்பட்டோர் கைதாகியதாகவும் அவர்கள் பின்னர் படிப்படியாக விடுதலை செய்யப்பட்ட போதிலும், அவர்களில் இருபத்து நான்கு பேர் எங்கே போனார்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் இதுவரை தெரியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்ப பெண் ஒருவர் சாட்சியமளிக்கையில்,

மேற்படி திகதியில் இராணுவம் மறவன்புலோவில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் எனது கணவர் இராமநாதன் என்பவர் உட்பட இருநூறுக்கும் அதிகமானோரினை பிடித்து சென்று நாவற்குழி இராணுவ முகாமில் வைத்து தலையாட்டி மூலம் இருபத்து நான்கு பேரினை மட்டும் பிடித்து வைத்துக் கொண்டு ஏனையவர்களினை விடுதலை செய்துவிட்டனர்.

இவ்வாறு பிடித்து வைக்கப்பட்டவர்களில் எனது கணவனும் ஒருவர், எனது கணவர் இராணுவத்தால் பிடித்து வைக்கப்பட்டு மூன்று நாட்களின் பின்னர், நாவற்குழியில் உள்ள மில் ஒன்றில் எனது கணவன் வாய் மற்றும் கைகள் கட்டப்பட்ட நிலையில் இருந்தார். அப்போது எனது இரண்டு வயது மகள் அப்பா? அப்பா? என அழுத போதும் கூட எம்மை எனது கணவர் அருகே செல்ல மறுத்து விட்டனர்.

அதன் பின்னர் எனது கணவன் எங்கே என்று எமக்கு தெரியவில்லை. என கூறி, குறித்த இராணுவ சுற்றிவளைப்பில் காணாமல் போனவர்களது பெயர் விபரங்களையும் சமர்ப்பித்தார். அதில் கைதடியை சேர்ந்த தர்மலிங்கம் சுவேந்திரராஜன், தச்சன்தோப்பினை சேர்ந்த பொன்னம்பலம் கண்ணதாசன், நாவற்குழியை சேர்ந்தவர்களான ஆரோக்கியநாதன் அன்ரன் பெனடிக்ற், ஜேசுதாஸ் ஸ்ராலின் ஜீவா, ஜோவன் பிள்ளை அன்ரன் அமலநாதன், இம்மானுவேல் ஹிரிட் ஜெயசீலன், தச்சன்தோப்பினை சேர்ந்த ரட்ணம் செல்வக்குமார், நாவற்குழியை சேர்ந்தவர்களான பொன்னையா ஜெயராஜ், கோபால கிருஸ்ணன் அம்பிகை ஜெயபாலன், தச்சன் தோப்பினை சேர்ந்த கந்தையா புஸ்பராஜா, கொடிகாமத்தை சேர்ந்தவர்களான பரமானந்தன் தவேஸ்வரன், சின்னத்துரை திருவருட செல்வன்,

தச்சன்தோப்பினை சேர்ந்த சின்னத்தம்பி சிவகுமார், நாவற்குழியை சேர்ந்தவர்களான கணேசலிங்கம் கிருபாகரன், கதிரவேற்பிள்ளை கேதீஸ்வரன், சிதம்பரப்பிள்ளை பேரினபநாதன், கணேஷ் ரமேஸ், நாவற்குழியை சேர்ந்தவரான அன்ரனி திலகரட்ணம், கைதடியை சேர்ந்த பொன்னன் ரவீந்திரன், மறவன்புலோவை சேர்ந்தவர்களான ராமநாதன் அன்னலிங்கம், முருகன் ஜெயரட்ணம்,

முருகன் சிவராஜா, பூபாலசிங்கம் ஜெயலலிதா, தச்சன்தோப்பினை சேர்ந்த திருநாவுக்கரசு சுதாகரன் ஆகியோருக்கே என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை. இதில் காணாமல்போனவர்கள் அனைவருமே முப்பது வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மற்றும் குடும்பஸ்தர்களாவர் என தெரிவித்து இந்த சாட்சியத்தை நேற்றையதினம் இருவர் வழாங்கியிருந்தனர் (செ-4)

## இராணுவம்...

திருமணம் செய்து அங்கு வசித்து வந்தார். எனது மருமகள் இருதயநோய் காரணமாக இறந்தார். 2007ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி சண்டிலிப்பாயிலுள்ள வீட்டில் மனைவியின் ஓராண்டு திகதியை எனது மகன் செய்துகொண்டிருந்தபோது, வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த இராணுவத்தினர் எனது மகனைப் பிடித்து, மானிப்பாய் முகாமுக்கு கொண்டு சென்றனர்.

நாங்கள் மானிப்பாய் இராணுவ முகாமுக்கு சென்று அழுததன் பின்னர் மகனை, இராணுவத்தினர் விடுவித்தனர். மகனை அழைத்துக் கொண்டு, முகாமில் இருந்து 50 மீற்றர் தூரம் நடந்துவந்தபோது, வெள்ளை வானில் வந்தவர்கள் எங்களை அடித்து தள்ளி விட்டு, மகனைக் கடத்திச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நடந்து 4 வருடங்கள் கழித்து, 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில், தொண்டைமானாறுப் பகுதிக்குச் சென்ற உறவினர் ஒருவர், இராணுவ முகாம் ஒன்றில் பதிவுகளை மேற்கொள்ளும் போது, அந்த இராணுவ முகாமில் இராணுவச் சீருடையுடன் எனது மகனைக் கண்டுள்ளார். எனது மகன் தங்களிடம் வெற்றிலை வாங்கித்தருமாறு கூறி தாங்கள் வாங்கிக் கொடுத்ததாகவும் எனக்கு தகவல் தெரிவித்ததையடுத்து,

நான் அங்கு சென்று பார்த்த போது அங்கு மகன்இருக்கவில்லை. இது நடந்து, இரண்டு வருடங்கள் கழித்து, நான் கதிர்காமம் சென்றேன். கதிர்காமம் செல்லும் வழியில் வவுனியாவில் ஒரு கடையில் நின்ற போது, அந்தக் கடைக்கு அருகில் வந்த இராணுவ ஜீப் ஒன்றில் இருந்து இராணுவத்தினர் இறங்கி பொருட்கள் வாங்கிச் சென்றனர். எதேச்சையாக ஜீப்பை பார்த்த போது, அதற்குள் இராணுவச் சீருடையுடன் எனது மகன் இருந்தார். நான்மகனை அழைத்த போது, ஜீப் புறப்பட்டுச் சென்று விட்டது என்றார்.(செ-4)

## கொடிகாமத்தில்...

ஆணைக்குழுவிடம் சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி ஆணைக்குழுவின் யாழ்.மாவட்டத்திற்கான இறுதிநாள் அமர்வு நேற்றைய தினம் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே, மேற்படி தந்தை மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது, எனது மகன் பிடித்துச் செல்லப்பட்ட பின்னர், என்னையும் அந்த வதை முகாமுக்கு கூட்டிச் சென்று விசாரணை செய்தனர்.

அங்கு நிலத்தில் கண்ணாடிகள் மற்றும் கூரான கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. சுற்றிவர கம்பிகள் இறுக்கப்பட்டிருந்தன. ஒருவரை குப்புறப் படுக்கவைத்து, கைகள்மற்றும்கால்களை இழுத்துக் கம்பியில் கட்டிய பின்னர் அவர் மேல் ஏறி மிதிப்பார்கள். நான் சென்ற போது, அந்தக் கற்கள் மீது இரத்தக் கறைகள் காணப்பட்டன.

முட்கம்பிகளை ஒரு தடியில் சுற்றி அதனால் தாக்குவது போன்ற அடையாளங்களும் நான் அங்கு சென்ற போது கண்டேன். எனது மகனை நான் இராணுவத்திடம் கேட்ட போது, தாம் எனது மகனை பிடிக்கவில்லை என கூறியதோடு, அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறும் அச்சுறுத்தினார்கள் என கண்ணீருடன் அத் தந்தை சாட்சியமளித்தார். (செ-4)


### ஆட்கள் தேவை

யாழ்.நகரில் பிரபல்யமான ஐஸ்கிறீம் மற்றும் சைவ உணவகத்திற்கு

- ரீ மாஸ்டர்
- சப்பிளையாட்கள் (waiter's)
- ஐஸ்கிறீம் விற்பனையாளர்

உடன் தேவை. தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப சம்பளம் மற்றும் கை கொடுப்பனவுகள் கிடைக்கும். 0777710785

**ஷைலோ ஐஸ்கிறீம் & உணவகம்**

இல. 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3744)



### CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




(C-3793)

அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)



### விற்பனையாகிறது!

தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கு

முதலாம் தவணை மாதிரி வினாத்தாள்கள்

தமிழ் , கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்கள் 15 விடைகளுடன்.

**யாழ் எக்ஸ்பிரஸ்**

பாடதிட்டத்திற்கு அமைவாக நாடாளாவியரீதியல் 15 முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில் வெளிவந்துள்ளது.

தொடர்புகளுக்கு : 077 6258778



### மணிவிழா வாழ்த்து



(c-3876)

"தேச புத்திரா"
"சமூக திலகம்"
"சமூக நல ஜோதி"

E.S.P.நாகரத்தினம் அவர்கள்

சாந்தமே சரீரமாய் சாற்றிடும் வேந்தராய்
மாந்தர்கள் மதித்திடும் மணிமொழிச் செல்வனாய்
சேந்தனே! சேற்றினில் முளைத்திடும் முத்தாய்
காண்டமே படைத்திடும் காவிய நாயகன்
களிப்போடு வாழி.

வாழ்த்துவோர்

சக்திவேல் ஹாட்வெயார், கோண்டாவில்.



### கண்ணீர் அஞ்சலி



கலாநிதி கந்தையா குணராசா (செங்கை ஆழியான்)

ஈழத்தின் தலை சிறந்த எழுத்தாளர்
**கலாநிதி கந்தையா குணராசா**
**(செங்கை ஆழியான்)**
அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்தி அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

\- வலம்புரி நிர்வாகம்



D.C.M யாழ்.நகர் | A/L 2016 வர்த்தகப் பிரிவு

**விசேட மாலை நேர வகுப்புகள்**

| Economics | Accounting | Business |
|---|---|---|
| S.ஜெயக்குமார் | S.தவா | S.முகுந்தன் |

ஆரம்பம்:-04.03.2016 வெள்ளி 5.00 PM



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.